# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

ஒக்ரோபர்.02 - ஒக்ரோபர்.08, 2013 பக்கம் - 24 30/-




## எறியப்பட்ட தரகர்கள்

## சுதந்திர வேட்கை

தமிழர் விடுதலைப் போராட்டப் பதிவுகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குத் தேர்தல் சொல்வது என்ன?

நிகரிலன்

திரும்புகின்ற இடமெல்லாம் வெற்றியைத் தவிர வேறொன்றும் அறியாத மஹிந்த அரசுக்கு மரண அடி விழுந்திருக்கிறது வடக்கில். நாட்டு மக்கள் முழுப்பேரும் தங்களை மட்டுமே ஆதரிப்பதாகவும் , தமிழ் மக்களை விடுதலைப்புலிகள் ஆயுத முனையில் அச்சுறுத்தியே அரசுக்கு எதிராக செயற்பட வைப்பதாகவும் புலிகள் இருந்த காலத்தில் பேரினம் கதை அளந்து கொண்டிருந்தது.

"விடுதலைப்புலிகள் மட்டுமே விடுதலை , சுதந்திரம், தமிழீழம் என்றெல்லாம் மக்களை உணர்ச்சியூட்டி வருகிறார்கள். ஆனால் உண்மையில் தமிழ் மக்கள் அவற்றை விரும்புவதில்லை. இலங்கையிலுள்ள ஏனைய மக்கள் அனுபவிக்கும் வசதிகளை அவர்களும் அனுபவிக்க விடாமல் புலிகள் தடை போடுகிறார்கள்" என்று தமிழ் மக்களுக்கு உரிமை பற்றிய விடயத்தில் எந்தவொரு அக்கறையும் இல்லை என்பது போலவே ஆட்சியாளர்கள் காட்ட முற்பட்டார்கள். ஆனால் உண்மையில் விடுதலை பற்றிய தாகம் தமக்குள் வற்றிவிடவில்லை என்பதை மக்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியே வந்துள்ளார்கள். உலகின் கவனத்தை ஈர்த்த பொங்கு தமிழ் நிகழ்வு இதற்கு நல்லதொரு உதாரணம். 1995 ஆம் ஆண்டு யாழ். குடாநாடு அரச படைகளின் இரும்புப் பிடிக்குள் வந்த பின்னர் ஓர் இருண்ட யுகமே நிலவியது. ஆறு மணியானவுடன் ராணுவக் கட்டளையால் ஊரடங்கிப் போகும்.

இலக்கத்தகடற்ற வெள்ளை வாகனங்கள் ஆட்களை அள்ளிப் போகும். பின்னர் அவர்கள் செம்மணிக்குள் அடங்கிப் போகவேண்டியதுதான். சந்தேகம் என்ற பெயரில் வீதிகள் எங்கும் குருவிகள் போல இளைஞர்கள் சுடப்பட்டார்கள். முகாம்களுக்குள் கொண்டு செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார்கள். எங்களின் வாழ்வு எங்கிருந்தோ வந்தவர்களால் தீர்மானிக்கப்பட்டது.

எங்கும் குருதியின் வாடை. தட்டிக்கேட்க எவரும் இல்லை. மூடப்பட்ட பூமிக்குள் நடந்தேறிய அக்கிரமங்கள் வெளியுலகுக்குத் தெரியாமலேயே போயின. இந்த நிலையில் தான் அரசின் அடக்குமுறை வேலியை உடைத்தெறிந்து கொண்டு உண்மையின் குரலைப் பொங்கு தமிழ் மூலம் உலகுக்குச் சொன்னார்கள் பல்கலை மாணவர்கள். இந்த மாணவர் போராட்டத்துக்கு மக்கள் தாமாகவே திரண்டு வந்து தமது எழுச்சி பூர்வமான பங்களிப்பை வழங்கினார்கள்.

ஆனால் இந்த மக்கள் எழுச்சிக்கும் புலிச் சாயம் பூசியது அரசு. "பல்கலை மாணவர்களையும், மக்களையும் புலிகளே பின்னின்று இயக்குகிறார்கள்" என்று சிங்கள அரசு பிரசாரம் செய்தது . இதனைச் சில நாடுகள் நம்பவும் செய்தன. ஏனெனில் அப்போது புலிகளின் இருப்பு இலங்கையில் இருந்தது.

ஆனால் புலிகள் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டார்கள் என்று அரசு பறை தட்டி நான்கு வருடங்கள் கழிந்த பின்னர் நடைபெற்ற தேர்தலில் -வடக்கு மாகாண வரலாற்றில் முதல் முறையாக 70 வீதத்துக்கும் அதிகமான மக்கள் வாக்களித்த தேர்தலில் - தமிழ் மக்கள் தம்முடைய பிரதிநிதிகளாகக் கூட்டமைப்பை தெரிவு செய்து மஹிந்த அரசின் முகத்தில் ஓங்கி அறைந்திருக்கிறார்கள். 1977 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பின்னரும் இத்தகையதொரு எழுச்சி நிலை தமிழ் மக்களிடையே ஏற்பட்டிருந்தது. ஆனால் அப்போது கூட இல்லாதளவுக்கு இப்போது கூட்டமைப்பு மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கிறது. இந்த வெற்றி எப்படிச் சாத்தியமானது? போர் முடிந்த பின்னர் 'காப்பெற்' வீதிகளால் வடக்கை மூடி, கிளிநொச்சி வரை யாழ்தேவியை வரச்செய்து, அபிவிருத்தியின் உச்சத்துக்கே தமிழ்மக்களைக் கொண்டு சென்றுவிட்டதாகக் கூறிய அரச தரப்பு இப்படி குப்புறக் கவிழ்ந்தது ஏன்? இப்படிச் சில வினாக்களுக்கு விடை தேடவேண்டியது அவசியமாகின்றது.

**இலக்கத்தகடற்ற வெள்ளை வாகனங்கள் ஆட்களை அள்ளிப் போகும். பின்னர் அவர்கள் செம்மணிக்குள் அடங்கிப் போகவேண்டியது தான். சந்தேகம் என்ற பெயரில் வீதிகள் எங்கும் குருவிகள் போல இளைஞர்கள் சுடப்பட்டார்கள். முகாம்களுக்குள் கொண்டு செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார்கள். எங்களின் வாழ்வு எங்கிருந்தோ வந்தவர்களால் தீர்மானிக்கப்பட்டது.**



மற்றைய மாகாணங்களுக்கான தேர்தலை குறித்த மாகாணசபை அரசின் ஆட்சிக்காலம் முடியும் முன்பாகவே வைத்து தன் பலத்தை நிரூபித்து வந்த மஹிந்த அரசு, வடக்குத்தேர்தல் என்றவுடன் மட்டும் பேதி குடித்தவனைப் போல பின்னுக்குப் போய் ஒளிந்து கொண்டது. "இப்போது வைக்கிறோம், அப்போது வைக்கப்போகிறோம்" என்று காலத்தை இழுத்தடித்து வந்ததே தவிர தேர்தலை மட்டும் நடத்திய பாடாயில்லை. தேர்தலை நடத்தினால் தோல்வி நிச்சயம் என்பது அரசாங்கத்துக்கு நன்கு தெரிந்தே இருந்தது. அதனால் எந்தளவுக்கு இழுத்தடிக்க முடியுமோ அந்தளவுக்கு வடக்குத்தேர்தலை நடத்துவதை இழுத்தடித்துக் கொண்டிருந்தது.

'போர் முடிந்து விட்டது, இயல்பு வாழ்வு திரும்பி விட்டது' என்று உலகெல்லாம் சொல்லும் அரசு, வடக்குத்தேர்தலை மட்டும் நடத்தாதிருப்பது சர்வதேசநாடுகளிடம் இலங்கை பற்றிய சந்தேகங்களை எழுப்பியது. இது கடந்த முறை ஜெனிவாவில் நடைபெற்ற பூகோளகால மீளாய்வு மாநாட்டிலும் எதிரொலித்தது. "வடக்குத்தேர்தலை நடத்தப்போகிறீர்களா இல்லையா?" என்று இலங்கையின் 'சட்டைக் கொலரைப்' பிடித்துக் கேட்காத குறையாக உலகநாடுகள் வெகுண்டெழுந்ததைக் கண்ட, இலங்கை அதிலிருந்து தப்புவதற்காக ஒகஸ்ட் மாதம் வடக்குத்தேர்தல் நடத்தப்படும் என்று அறிவித்தது. அப்படியிருந்தும் ஜோதிடர்களின் அறிவுரைப்படி 'செப்ரெம்பர் 21 ஆம் திகதிதான் தேர்தல்' என்று நாள் குறித்தார் மஹிந்த.

வடக்குத்தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் அரசியற்கட்சி அலுவலகங்கள் சுறுசுறுப்படையத்தொடங்கின. வேட்பாளர் பட்டியல்கள் தயாரிப்பதில் ஒவ்வொரு கட்சிக்குள்ளும் பிடுங்குப்பாடுகள் கிளம்பின. அதிலும் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் தெரிவில் எழுந்த சிக்கல்தான் எல்லோரது கவனத்தையும் ஈர்த்தது. மாவை. சேனாதிராசாதான் கூட்டமைப்பின் வடமாகாண முதலமைச்சர் வேட்பாளர் என்ற நிலையே ஆரம்பத்தில் இருந்தது. ஆயினும் திடீரென முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாளர் தெரிவில் குதிக்க , கூட்டமைப்புக்குள் பெரும் பிளவு நிலை தோன்றியது. இது அரசுக்கு பெரும் மகிழ்வை ஏற்படுத்தியது. 'இப்படிக் கூட்டமைப்பு பிளவுபடும் என்று தெரிந்திருந்தால் முன்னரே தேர்தலை வைத்திருக்கலாமே' என்றும் அது யோசித்தது. நீண்டவாதப் பிரதிவாதங்கள், கூட்டங்கள், "தனித்து நின்று கேட்போம்" என்பன போன்ற வெருட்டல்கள், ஊடகங்களின் ஊகங்கள் என்பவற்றையெல்லாம் தாண்டி, ஒருவழியாக விக்னேஸ்வரன் கூட்டமைப்பின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். புதிய ஒரு தலைமையை மக்கள் விரும்புவதாலும் சர்வதேச ரீதியில் தமிழர் பிரச்சினைகளை கையாள புலிச்சாயம் இல்லாத புத்திஜீவி என்ற வகையிலுமே விக்கியை களமிறக்கியதாக கூட்டமைப்பினர் தெரிவித்திருந்தனர்.

(மிகுதி அடுத்தவாரம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அக்கினி புத்திரன்

# எறியப்பட்ட தரகர்கள்



நடைபெற்று முடிந்த மத்திய, வடமேல் மாகாண சபைகளுக்கான தேர்தலில் ஆளும் ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டணியினர் அமோக வெற்றியை ஈட்டியுள்ளனர். இப்படி வெற்றி பெற்றவேட்பாளர்களில் ஏறக்குறைய தொண்ணூறு சத வீதத்தினர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களே! வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்ட சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பங்காளிக் கட்சிகள் கூட ஒரு சில ஆசனங் களையே பெற்றுள்ளன. ஜாதிக ஹெல உறுமய, விமல் வீரவன்சாவின் தேசிய சுதந்திர முன்னணி, தினேஷ் குணவர்த்தனாவின் மக்கள் ஐக்கிய முன்னணி என்பன ஒவ்வொரு ஆசனத் தைக்கூட பெற முடியவில்லை. மலையகக் கட்சிகள் கூட பல முனைகளில் பிரிந்து நின்று வெற்றிலைச் சின்னத்திலும், தமது சொந்தச் சின்னங்களிலும் போட்டியிட்ட போதிலும் எதிர் பார்த்தளவு வெற்றியைப் பெற முடியவில்லை. இவர்கள் அனைவருமே அரசாங்கத்தில் பங் காளிக் கட்சி களாக இருந்த போதிலும் பெரும் பான்மை யான ஆசனங்களையோ, விருப்பு வாக்கு களையோ சிறீலங்கா சுதந்திரக் கட்சியே பெற்று தனிப் பெரும் சக்தியாக வெற்றியீட்டியுள்ளது.

அரசுக்கும் மக்களுக்குமிடையே இடைத்தரகர் களாக நின்று தங்கள் கட்சியின் பெயரால் மக் கள் ஆதரவு தேடி வெற்றியைப் பெற்ற பின்பு ஆட்சியாளர்களுடன் சங்கமமாகும் இப்பேர் வழிகளை மக்கள் ஏற்கத் தயாரில்லை என் பதைத் தெளிவு படுத்திவிட்டனர். அதாவது வாலைப்பிடிப்பவர்களின் வாலைப் பிடிப்பதை விட நேரடியாகவே வாலைப்பிடிப்பது என அந்த இரு மாகாணமக்களும் முடிவெடுத்து விட்டனர்.

இப்படியான இடைத்தரகர்கள் இரண்டு வித மானவர்கள். ஒரு தரப்பினர் நேரடியாகவே வெற்றிலைச்சின்னத்துக்குள் சங்கமமாகி விட் டவர்கள். மற்றத் தரப்பினர் தங்கள் சொந்தச் சின்னத்தில் நின்று வெற்றிபெற்ற பின்பு தம்மை வெற்றிலைக்கு விற்றுக் கொள்பவர்கள்.

இவர்கள் இரு சக்திகளும் தேர்தல் களத்தில் வன்முறைகள் உட்படப் பலவழிகளிலும் மோதி வாக்கு வேட்டையாடினாலும் வென்றபின்பு வெவ் வேறு நதிகளும் இறுதியில் கடலில் சேருவது போன்று அரச தரப்பினருடன் ஒட்டிக் கொள் வார்கள்.

இவ்வகையில் மலையகத்தில் தொழிலா ளர் சங்கமும், இலங்கைத் தொழிலாளர் காங்கிர ஸும் மோதி மலையகத் தமிழ்மக்களுக்கு வரக் கூடிய பிரதிநிதித்துவத்தைக் குறைத்துக் கொண் டனர். ஆனால் தேர்தல் முடிந்ததும் மாகாண ஆட்சியில் அரசதரப்பினருடன் பங்காளிகளாகி விடுவார். இவர்கள் தேர்தலில் எதிர்பார்த்த வெற்றியைப் பெற முடியாவிட்டாலும் கூட மலையக மக்களின் பலத்தைச் சிதைப்பதில் மட்டும் வெற்றிபெற்றுள்ளனர்.

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மரச்சின்னத் திலும், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் வெற்றிலைச் சின்னத்திலும் போட்டியிட்டன. சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பலமான கோட்டை என்று கருதப்படும் புத் தளம் மாவட் டத்திலோ, ரவூப் ஹக்கீமின் ஆத ரவுத்தளமான கண்டி மாவட்டத்திலோ கடந்த தேர்தலில் பெற்ற ஆசனங்களைக்கூடப் பெற முடிய வில்லை. அகில இலங்கை முஸ்லிம் காங் கிரஸ் கடந்த பொதுத்தேர்தலில் இரு ஆசனங் களைப் பெற்று மன்னார் மாவட்டத்தில் ஒரு ஆச னத்தைக் கூட வெற்றி கொள்ளமுடியவில்லை.

இப்படியாக இரு முஸ்லிம் அமைப்புக்களும் ஒன்றுடன் ஒன்று மோதி முஸ்லிம் வாக்குகளைப் பிரித்து முஸ்லிம் பிரதிநிதித்துவத்தைக் குறைத்த போதிலும் இருவரும் அரசாங்கத்தில் பங்காளி கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இரு மாகாண சபைகளும் தேர்தல் முடிவு களின் படி மக்கள் இந்த இடைத்தரகர்களை நிராகரிக்க ஆரம்பித்து விட்டனர் என்பது தெளிவு படுத்தப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி இவர் கள் முற்றாகவே எடுத்தெறியப்படுவார்கள் என் பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ஆனால் இவர்கள் சிறு அளவிலாவது இன்னும் வெற்றி பெறுகிறார்கள் என்றால் மக்கள் தங் கள் உண் மையான விருப்பங்களை வெளியிட வலிமை யான மூன்றாவது சக்தி இல்லை என் பதுதான் உண்மையான காரணமாகும்.

ஆனால் வடமாகாண சபைத்தேர்தல் இந்த இடைத்தரகர்களை முற்றாகவே நிராகரித்து விட்டது. வடமாகாண மக்களை உச்சந்தலை யடி போட்டு இவர்களை நிராகரித்து விட் டனர். வடக்கில் ஈ.பி.டி.பி, சிறீலங்கா சுதந் திரக் கட்சி ஆகிய இரு கட்சிகளும் வெற்றி லைச் சின்னத்திலேயே போட்டியிட்டன. எனினும் இரு தரப்பினரும் ஒருவருடன் ஒருவர் கடுமையாகப் போட்டியிட்டனர். சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் தங்களுக்குள் கூடத் துப்பாக்கிச் சமர் நடத்தி மோதிக் கொண்டனர்.

கடந்த பொதுத் தேர்தலில் வடக்கில் ஈ.பி. டி.பியினர் 3 நாடாளுமன்ற ஆசனங்களைப் கைப்பற்றினர். ஆனால் இம்முறை மாகாண சபைத் தேர்தலில் மிகக் குறைந்த வாக்கு களையே பெற்று யாழ்.மாவட்டத்தில் ஒரு ஆசனத்தையும் கிளிநொச்சியில் ஒரு ஆசனத் தையுமே பெற்றுக் கொள்ள முடிந்தது. ஈ.பி.டி. பினர் பெற்ற வாக்கு எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆனால் கடந்த பொதுத் தேர்தலில் எந்த ஒரு ஆசனத்தையுமே பெறாத சிறீலங்கா சுதந்திரக்கட்சி யாழ். மாவட்டத்தில் ஒரு ஆசனத்தைப் பெற்றுள்ளது. சுதந்திர ஒட்டு மொத்தத்தில் ஜாதிகஹெல உறுமய, தேசிய முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற கட்சிகள் முற்றாகவே மக் களால் நிராகரிக்கப் பட்டுவிட்டன. இலங்கைத் தொழிலாளர் காங் கிரஸ், தொழிலாளர் தேசிய சங்கம், சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஈ.பி.டி.பியினர் என்பனவற்றிக்கான மக்கள் ஆதரவில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஆனால் வடமேல் மாகாணசபையிலும் மத் திய மாகாணசபையிலும் சிறீலங்கா சுதந் திரக்கட்சி தனது பங்காளிக் கட்சிகளின் தலை யில் ஏறி மிதித்துக் கொண்டு பெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. அதே வேளையில் வட மாகாண சபையில் 38 ஆசனங்களில் முப்பதைக் கைப் பற்றி பெரும் சாதனை படைத்துள்ளது.

இத்தேர்தல் தொடர்பாக நாம் திட்டவட் டமாக ஒன்றைத் தெரிந்து கொள்ள முடிகிறது. அதாவது மூன்று மாகாணங்களிலுமுள்ள மக் கள் இடைத்தரகர்களை நிராகரிக்க ஆரம்பித்து விட்டனர். இடைத்தரகர்களின் ஆட்டம் அடங் கும் காலம் நெருங்கிவிட்டது. அரசாங்கம் கூட தனது ஆட்சியின் பங்காளனாக இந்தக் தரகர்களை வைத்துக் கொண்ட போதிலும் தமிழர் கள் மத்தி யிலும் முஸ்லிம்கள் மத்தியிலும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சிக்கென வலுவான ஒரு அடித் தளத்தை உருவாக்கும் வகையில் திட்ட மிட்டு வேலை செய்து வருகிறது. அரசாங்கம் அரசில் பங்கு வகிக்கும் கட்சிகளையே உடைத்துப் பிளவு படுத்துவதில் பின்னிற்பதில்லை. சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போன்ற கட்சி களுக்கு இப்படியான அவலம் நேர்ந்துள்ளது. இம்முறை மாகாண சபையில் ஈ.பி.டி. பியினருக்கும் இது நிகழ்ந்துள்ளது.

கண்டியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ மலையகத்தில் இடம்பெற்று வரும் அபி விருத்திகளுக்குப் பலரும் உரிமைகோரி வரு வதாகவும் ஆனால் அவையெல்லாம் தங்களால் செய்யப்பட்டவை எனவும் தெரிவித்திருந்தார். அதிலிருந்தே சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் தமது பங்காளிக் கட்சிகளை எப்படிக் கையாள் கின்றனர் என்பதைப்புரிந்துகொள்ள முடியும்.

வடமாகாண சபைத் தேர்தலின் போது சிறீ லங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் போட்டி யிட்ட அங்கஜனுக்காக பல அமைச்சர்கள் முகா மிட்டுப் பரப்புரை செய்ததை மறந்து விட முடி யாது. வேறு சில சிறீலங்கா சுதந்திரக்கட்சி வேட் பாளர்களுக்காகப் படையினரும் ஆளுநரும் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டனர்.

ஒட்டுமொத்தத்தில் இந்த இடைத்தரகர்கள் ஒரு புறம் மக்களாலும்இன்னொரு புறம் இவர் கள் ஒட்டிக் கொண்டிருக்கும் அரசியல் சக்தி களாலும் எடுத்தெறியப்படும் நிலை ஆரம்ப மாகி விட்டது. தனது சொந்த இனத்துக்கும் தனது சொந்த மக்களுக்கும் துரோகம் செய்பவர்கள் அரசியல் அநாதைகளாகக் குப்பைத் தொட்டிக் குள் வீசப்படுவதே வரலாறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசி நேரத் தேர்தல்



'வடக்குத்தேர்தலில் கூட்டமைப்புத்தான் வெற்றி பெறும்' என்று அரசுத்தரப்புக் கூட பெருந்தன்மையோடு தேர்தலுக்கு முதல்நாள்வரை சொல்லிக் கொண்டிருந்தாலும் , எப்படியாவது தலையை அடகு வைத்தாவது வெற்றியைத் தன்வசமாக்க முடியாதா என்ற ஏக்கத்துடன் அது செய்த தில்லுமுல்லுகள் ஏராளம். இவற்றில் வெகு சிலவே தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்ட அமைப்புகளின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டிருந்தன. ஏராளமான அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள், சிறு சிறு தாக்குதல்கள் என்பன உலகின் கண்களுக்கு மறைக்கப்பட்டிருந்தன. இந்த முயற்சியில் தமிழ்த் தேசியத்தில் அக்கறை கொண்ட ஊடகங்களும் மறைத்திருந்தன. ஏனெனில் 'அச்சுறுத்தலான சூழல் நிலவுகிறது' என்ற எண்ணம் பொதுமக்கள் மனதில் ஏற்பட்டிருந்தால், இப்படி அலை அலையாக வந்து வாக்களித்திருக்க மாட்டார்கள். செப்ரெம்பர் 21 ஆம் திகதி வாக்களிப்பில் தமிழ் மக்கள் காட்டிய அக்கறையும், திரள் திரளாக வந்து வரிசையில் நின்று வாக்களித்து கிட்டத்தட்ட 70 வீதமான வாக்குகளைப் பதிவு செய்திருக்க மாட்டார்கள் வழமைபோலவே "நமக்கென்ன? எங்கட பாட்டில இருப்பம். மற்றவை போய் வோட் போடுவினம் தானே. நான் ஒரு ஆள் போடாட்டி என்ன குடியா முழுகிப்போயிடும்" என்று வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லாமலே இருந்துவிடுகிறார்கள். எனவே இயல்பாகவே மக்களிடம் உண்டாகியிருந்த உரிமைக்கு குரல் கொடுப்பது பற்றிய எழுச்சியை அணைந்து விடச்செய்வதற்கு ஊடகங்களும் தயாராகவில்லை. எனவே கண்ணுக்குத் தெரியாமல் நடந்தேறிய அரச கட்சியின் தில்லு முல்லுகளை மக்களிடையே பரவவிடாமல் கண்காணிப்பாளர்களும், ஊடகங்களும் சுயதணிக்கையை மேற்கொண்டிருந்தன. இப்போது தேர்தல் நடந்து முடிந்த நிலையில், கூட்டமைப்பு 80 வீதமான வாக்குகளை அள்ளியெடுத்து ஆட்சியில் அமர்ந்துவிட்ட நிலையில், கடைசி நேரத்தில் நடந்த சில தேர்தல் கூத்துகளையும் அவற்றுக்கான பின்னணிக்காரணங்களையும் கொஞ்சம் இங்கு அலசவேண்டியது அவசியமாகின்றது. ஏனெனில் அப்போதுதான் அடுத்தமுறையும் இதுபோன்ற அச்சுறுத்தல்களை எதிர்கொண்டாலும் துணிச்சலுடன் சமாளித்து, எங்கள் உரிமைக்கான போராட்டத்தை நாம் தொடரமுடியும்.

## கூத்து-1

அனந்தி சசிதரன். மேலோட்டமாகப் பார்க்கும் போது, கூட்டமைப்பின் சார்பில் யாழ். மாவட்டத்தில் களமிறக்கப்பட்ட ஒரேயொரு பெண் வேட்பாளர் என்றே வெளியில் இருந்து பார்ப்பவர்கள் அனந்தியை அடையாளப்படுத்தியிருந்தனர். அதற்குமப்பால் அனந்திக்கு இன்னும் சில அடையாளங்கள் இருந்தன. விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளராக இருந்த எழிலனின் மனைவிதான் அனந்தி. இறுதிப்போரில் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்பு, எஞ்சியிருந்த போராளிகளைப் பத்திரமாக சரணடையச் செய்து, அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக சில பொறுப்பாளர்கள் அவர்களுடன் வெள்ளைக் கொடியேந்தியபடி நந்திக்கடல் பாலத்தடியில் சரணடைந்திருந்தனர். இதன் போது தன் கைகளாலேயே, கணவரை (எழிலனை) படையதிகாரிகளிடம் கொடுத்துவிட்டு வந்தவர். அதிகாரிகளே நேரில் வந்து தன் கணவரை கையேற்றதால் அவர் விரைவில் வந்துவிடுவார் என்ற நம்பிக்கையுடன் நலன்புரி நிலைய வாசலில் வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தார். எழிலன் நான்கு வருடங்கள் கழிந்தும் வரவேயில்லை. கணவரை மீட்க தன்னைப்போலவே கலங்கிக் கொண்டிருக்கும் காணாமல் போனோரின் உறவுகளையும் இணைத்துக் கொண்டு களமிறங்கினார். பல்வேறு அகிம்சைப்போராட்டங்கள் வடக்கின் பாகங்களில் முளைகொண்டன. இந்த நிலையில் தான் அவர் யாழ். மாவட்டத்தில் கூட்டமைப்பால் களமிறக்கப்பட்டார்.

மாகாணசபை வேட்பாளர்களில் விக்னேஸ்வரனுக்கு அடுத்ததாக எல்லோரது கவனத்தையும் ஈர்த்தவர் அனந்தி. அவர் காணாமல் போனோர் தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கள், சர்வதேசத்தின் கவனத்தை மீண்டும் இலங்கை மீது திருப்ப முற்பட்டாதால், அந்த ஆத்திரமெல்லாவற்றையும் அனந்தி மீது காட்ட முற்பட்டது சிங்களம். அவரது கணவரை வசைபாடி, மஹிந்த ராஜபக்ஷவின் ஊடக இணைப்பாளர் வாரம் ஒரு அறிக்கையை வெளியிடத் தொடங்கினார். இன்னொரு புறத்தில் அனந்தி அரசின் பக்கம் தாவிவிடுவார் என்ற வதந்தியும் இராணுவப்புலனாய்வாளர்களால் திட்டமிட்டு பரப்பப்பட்டது. "பெண்புலி அனந்தியை பிடித்து தடுப்புக்கு அனுப்ப வேண்டும்" என்று பேரினவாதிகள் காட்டுக்கூச்சல் போடத்தொடங்கினர். இந்தக்கூச்சலும், அனந்திக்கு எதிரான அரசின் அவதூறுத்தாக்குதலும் நாளொரு மேனியும் அதிகரிக்கத்தொடங்கின. காரணம், மக்களிடையே அனந்திக்கு ஆதரவாக உருவாகத் தொடங்கிய அனுதாப அலைதான்.

இந்த நிலையில் தான் அனந்தி மீதான நேரடித்தாக்குதலை நடத்துவதென அரச புலனாய்வாளர்களும், ஈ.பி.டி.பியினரும் இணைந்து முடிவெடுத்தனர்.

அன்றைக்குத்தான் பிரசாரங்கள் ஓய்ந்திருந்தன. தேர்தல் வேலைகள் தொல்புரம் வழக்கம்பரையில் உள்ள அனந்தி வீட்டில் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த போது, ஈ.பி.டி.பிக்கு ஆதரவாக செயற்பட்டுக்கொண்டிருந்த கஜன், அருணகிரி, சகிலன் என்போர் உள்ளிட்ட சிலர் வழமைக்கு மாறான முறையில் அனந்தியின் வீட்டுக்கு முன்னால் நோட்டமிடும் வகையில் நடமாடதொடங்கினர். மாலைக்கருக்கலில் மோட்டர் சைக்கிளில் வந்த இந்த ஈ.பி.டி.பி வால்பிடிகள், அனந்தியின் பெயரைக் குறிப்பிட்டு சிங்களத்தில் தகாத வார்த்தைகளால் கத்தியபடி ஓடினர். அத்தோடு பிரச்சினை ஓய்ந்திருந்தால் பரவாயில்லை.

அதன் பின்னர் சில மணித்தியாலங்கள் கழித்து, ஒரு மோட்டார்சைக்கிள் அனந்தியின் வீட்டுக்கு அருகே வந்து நின்றது அதிலிருந்து இறங்கியவர்கள் போன் கதைப்பது போல, யாருக்காகவோ காத்திருந்தார். சில நிமிடங்களில் கால்நடையாக சுமார் இருபது சிப்பாய்கள் வந்து சேர்ந்தனர். அவர்களில் அநேகர் சிவில் உடையில் இருந்தனர். கைகளில் ஆயுதங்களோடு வந்த இவர்கள், அனந்தியின் வீட்டைச் சுற்றி வளைத்து நின்றனர். வீட்டில் இருந்தவர்களுக்கு ஏதோ விபரீதம் நடக்கப் போவது புரிந்துவிட்டது. எனவே அவர்கள் வெளிப்புறத்தில் இருப்பதை தவிர்த்து, உள்ளே சென்று அமர்ந்து கொண்டனர். அப்படி இருந்தும் இராணுவத்தினர் அங்கிருந்து அகல்வதாகத் தெரியவில்லை.

இனியும் வாளாவிருந்தால் பெரும் அனர்த்தம் நிகழ்ந்துவிடும் என்ற பயத்தில் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊடகங்கள், தேர்தல் கண்காணிப்பகங்கள் என்பவற்றுக்கு தொலைபேசி மூலம் தகவல் பறந்தது. உடன டியாகவே பத்துப் பதினைந்து கூட்டமைப்பு ஆதர வாளர்கள் அனந்தியின் வீட்டுக்கு விரைந்தனர். அவர்களின் மோட்டார் சைக்கிள்கள் வருவதை அவதானித்த படைத்தரப்பு, உடனடியாகவே அந்த இடத்தைவிட்டுக் கலைந்தது.

"வழமை போலவே வெருட்டுவதற்குத்தன் இப்படிச் செய்திருக்கிறார்கள்" என்று அனந்தியின் ஆதரவாளர்கள் தமக்கிடையே பேசிக்கொண்டார்கள். நிலைமையின் தன்மையை அறிந்து கொள்வதற்காக நள்ளிரவென்றும் பாராது சம்பவ இடத்துக்கு வந்து சேர்ந்த 'பவ்ரல்' அமைப்பைச் சேர்ந்த சட்டத்தரணி சுகாஷ், அங்கிருந்தவர்களிடம் வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டிருந்தார். அப்போதுதான் இருளைக் கிழித்துக் கொண்டு நான்குக்கும் மேற்பட்ட வாகனங்கள் ஒளிவெள்ளத்தைப் பாய்ச்சியபடி அனந்தியின் வீட்டு வாசலில் வந்து நின்றன. வாகனங்கள் நிற்கமுதலே அதிலிருந்து 'திபு திபு" எனக் குதித்த 50க்கும் மேற்பட்டவர்கள் கை களில் கொட்டன்களுடனும், வாய் நிறையச் சிங்களத் தூஷண வார்த்தைகளுடனும் வெறி கொண்டவர்கள் போல வீட்டுக்குள் பாய்ந்தனர். கையில் பட்டவர்களையெல்லாம்அடித்துநொருக்கிக்கொண்டே உள்ளே நுழைந்தவர்களின் கண்கள், அனந்தி எங்கிருக்கிறார் என்று தேடிக்கொண்டேயிருந்தன. எங்கும் கூச்சலும் ஓலமும். வந்தவர்களின் கண்களுக்கு அங்கிருந்த எல்லோருமே அனந்தியின் ஆதரவாளர்களாகவே தெரிந்தனர்.

'பவ்ரல்' அமைப்பின் சுகாஷும் இந்த வெறித்தாக்குதலில் இருந்து தப்பவில்லை.

"நான் கூட்டமைப்பில்லை. 'பவ்ரல்' அமைப்பில இருந்து வந்தனான்" என்று அந்தக் களேபரத்துக்கு மத்தியிலும் தனது அடையாளத்தைச் சுகாஷ் வெளிப்படுத்திய போதும், இன்னும் மோசமாகத்தாக்கப்பட்டார். பூட்ஸ் கால்களும், கொட்டன்களும் அவரது முதுகெங்கும் விளையாடின. என்றாலும் வந்தவர்களுக்கு இன்னும் வந்த நோக்கம் நிறைவேறவில்லையே . வீட்டின் ஒவ்வொரு அறையையும் காலால் உதைத்துத் திறந்து தேடினர். அனந்தி எங்கும் இல்லை. இப்படி ஒரு தாக்குதல் தன்னை இலக்கு வைத்து நடத்தப்படலாம் என்பதை ஓரளவு ஊகித்திருந்த அனந்தி, தேர்தல் நெருங்கியிருந்த சமயத்தில் வேறொரு இடத்திலேயே பாதுகாப்பாக தங்கியிருந்தார். இது கூலிக்கு மாரடிக்க வந்த சிவில் உடைப்புலனாய்வாளர்களுக்கு தெரிந்திருக்கவில்லை. அதை விடவும் இன்னொரு சந்தேகமும் அவர்களுக்கு எழுந்தது. அவர்களுக்கு கிடைத்த தகவலின்படி, அனந்தியின் வீட்டில் இருபதுக்கும் குறையாத எண்ணிக்கையான ஆதரவாளர்கள் இருந்திருக்க வேண்டும். ஆனால் நின்றதோ வெறும் ஏழெட்டுப் பேர்தான். மிச்சப்பேர் எங்கே என்ற கேள்வி அவர்களுக்கு இருக்கவே செய்தது. வீட்டை அலசி ஆராய்ந்து, அனந்தியும் மேலதிக ஆதரவாளர்களும் இல்லை என்று முடிவு செய்து கொண்டு அவர்கள் திரும்ப நினைத்த சமயத்தில். ' சடீர்' என்று ஒரு சத்தம்.

சத்தம் வந்த திசைக்கு ஓடினான் ஒரு புலனாய்வாளன். அங்கே- வீட்டின் மேற்புற சீற் ஒன்று உடைந்து போயிருக்க, அதற்குள் ஒளிந்திருந்த கூட்டமைப்பு ஆதரவாளர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் முழுசிக்கொண்டிருப்பது தெரிந்தது. அத்தனை பேரும் கீழிறக்கப்பட்டு, ஆத்திரம் தீரும் வரை அடித்து நொருக்கப்பட்டனர். வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டைருந்த மோட்டார் சைக்கிள், ஓட்டோ என்பவற்றின் ரயர்களையும் வெட்டிச் சரித்த பின்னே அவர்கள் அனந்தியைக் கொல்லமுடியவில்லையே என்ற ஏமாற்றத்தோடு தங்களை ஏவிவிட்ட இடத்துக்கே திரும்பிச் சென்றனர்.

கூட்டமைப்பின் மிக முக்கிய வேட்பாளரைக் கடத்துவது அல்லது கொல்வது என்பதே தாக்குதலாளிகளின் நோக்கம். இதன்மூலம் ஒரு அச்ச அலையை உருவாக்கி ஒட்டு மொத்த மக்களையும் குழப்பி தேர்தலை நடத்த விடாமல் செய்வதே, திட்டமாக இருந்திருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லங்கன்

# கூத்துக்கள்.....!



**கூத்து-2**

"தேர்தல் பிரச்சாரங்கள் புதன்கிழமை நள்ளிரவுடன் முடிவுக்கு வரவேண்டும்" என்று தேர்தல் திணைக்களம் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருந்த போதும், அரச ஆசிர்வாதத்தோடு களமிறங்கியவர்கள் புதன்கிழமைக் குப் பின்னர்தான் தீயாக வேலை செய்யத் தொடங் கினார்கள். உண்மையில் இவர்கள் அரச ஆசீர்வாதம் பெற்றவர்கள் என்பதை விடவும் ஆமியின் ஆசீர்வாதம் பெற்றவர்கள் என்பதுதான் உண்மை. நெல்லியடி வர்த் தகர் அகிலதாஸ், சாவகச்சேரி சர்வா, இரும்பு வியாபாரி ஷிராஸ் ஆகியோர் படைப் புலனாய்வாளர்களால் களமிறக்கப்பட்டவர்களில் முக்கியமானவர்கள்.

இவர்களுக்கு தேர்தல் பணிபுரிய இராணுவப் பிரி வொன்றே களத்தில் இறங்கியது. இரவு நேரங்களில் ஒவ்வொரு படைமுகாமில் இருந்தும் ரோந்துக்குச் செல்லும் இராணுவத்தினர் குறைந்தது ஆயிரம் நோட் டீஸ் ஒட்டவேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டது. இந்த மும்மூர்த்திகளின் (அகிலன், சர்வா, ஷிராஸ்) தேர் தல் வாகனங்கள் எந்த அனுமதியும் இல்லாமல் எங்கும் எத்தனையும் செல்லலாம். அதற்கும் இராணுவப் பாது காப்பு வழங்கப்பட்டது. இராணுவ முகாமுக்கு அண் மையாக உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங் களுக்கு திடீரென சுயதொழில் கடனாகப் பத்தாயிரம் வாங்கப்பட்டது. இதற்கான பணம் கூட வடமாகாண நிதியில் இருந்து கொடுக்கப்பட்டது.

கடன் பெற்றவர்கள் படைப்புலனாய்வாளர்களால் களமிறக்கப்பட்ட மும்மூர்த்திகளுக்கு வாக்களித்து வெற்றி பெறச்செய்தால் அவர்களின் கடன்கள் இரத்துச் செய்யப்படும் என்று ஆசையூட்டப்பட்டது. இரவிரவாக தேர்தலுக்கு முந்திய நாள் வரை இந்த மும்மூர்த்தி களினதும் பிரசுரங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள சகல வீடுகளுக்குள் போடப்பட்டிருந்தது. கோடிக்கணக்கில் அரசநிதி செலவிடப்பட்டு இவர்களை வெல்லவைக்க படைத்தரப்பு போராடிக் கொண்டிருந்தது.

"நாங்கள் இறக்கிய வேட்பாளர்கள் தோற்கக்கூடாது" என்று சிப்பாய்கள் சிலர் வெளிப்படையாக மக்களிடம் சொல்லவும் செய்திருக்கிறார்கள். ஆனாலும் கடைசியில் எல்லா அச்சுறுத்தல்களும் மக்கள் தீர்ப்புக்கு முன்னால் அடங்கித்தான் போயின.

**கூத்து - 3**

என்னதான் விமர்சனங்கள் பல இருந்தாலும், யாழ்ப்பாணத்தில் அதிக எண்ணிக்கையில் விற்பனை யாவதும், தீவிர தமிழ்த்தேசியக்கருத்துக்களைக் கொண்டதும் 'உதயன்' பத்திரிகைதான். அதிலும் குறிப்பாகத் தேர்தல் நாளன்று 'உதயன்' போடுகின்ற செய்திகள் சும்மாயிருக்கும் வாக்காளர்களையும் உசுப்பேற்றி, தேசியத்துக்கு ஆதரவாக வாக்களிக்கப் பண்ணுவது படைத்தரப்புக்கும் நன்கு தெரியும்.

எனவே இந்தமுறை வித்தியாசமான முறையில் தாக்குதல் நடத்த முடிவு செய்யப்பட்டது. அதுவும் எந்த 'உதயன்' மக்களை தேசியத்துக்கு ஆதரவாக எழவைக் கிறதோ, அதே உதயனை வைத்து, மக்களைக்குழப்ப முடிவு செய்யப்பட்டது. இதற்கு மூளையாக இருந்தவர் தன்னைத்தானே நடுநிலையான 'ஊடகவியலாளர், ஊடக ஆய்வாளர்' என்று சொல்லிக் கொள்பவரும் , ஈ. பி.டி.பி சார்பில் வடக்கு மாகாணத்தேர்தலில் நின்ற வருமான கோ.றுஷாங்கன். ஏற்கனவே இவர் டான் தொலைக்காட்சியில் தினமும் தோன்றி 'பத்திரிகைக் கண்ணோட்டம்' என்ற பெயரில், 'உதயன்' பற்றிய தவறான கருத்துக்களை மக்களிடையே பரப்ப பகீரதப் பிரயத்தனம் செய்திருந்தார். அதை விட ஈ.பி.டி.பி.யின் தினமுரசுப் பத்திரிகையில் "புலிகளை அழித்த ஊடகங் கள்" என்ற தொடர் கட்டுரையை வே.அர்ச்சுணன் என்ற பெயரில் எழுதி வருகிறார். இவர் யாழ்.மாவட்ட முன் னாள் தபாலதிபர் கோடீஸ்வரனின் மகன். தினக்கதிர் என்ற பத்திரிகையை மட்டக்களப்பில் நடத்தியவர். பின்னர் ஒரு பிரச்சினையில் கருணா அதை எரிக்க, அங்கிருந்து கொழும்பு சென்று, இறுதிப்போர் முடியும் வரை புலிகளுக்கு ஆதரவான கருத்துக்களை வெளி யிட்டவர். புலிகளின் வீழ்ச்சிக்கு பின்னர் ஆள் தலை கீழாக மாறி மஹிந்த புராணமும், டக்ளஸ் புராணமும் பாடத்தொடங்கிவிட்டார். காலப்போக்கில் டக்ளஸின் ஊடக ஆலோகராக உயர்ந்தார்.

டக்ளஸுக்கு கண்ணிலும் காட்டக்கூடாத உதய னுக்கு எதிராக அல்லும் பகலும் அனவரதமும் குரைப் பதற்கு பரிசாக றுஷாங்கனுக்கு மாகாணசபையில் நிற்க இடம் வழங்கப்பட்டது.

இதற்குப் பிரதியுபகாரமாக ஏதாவது செய்யவேண்டு மென்று கைகள் பரபரத்துக் கொண்டிருந்த றுஷாங் கனிடம் போலி உதயன் ஒன்றை தயாரிக்கும் பணி ஒப்படைக்கப்பட்டது. எழிலன் விடுவிக்கப்பட்டதால் அரசுப்பக்கம் அனந்தி தாவினார் என்றும் , தேர் தலில் இருந்து கூட்டமைப்பு ஒதுங்கிக் கொண்டதாகவும் தலைப்பிடப்பட்டு , ஏறக்குறைய மேலோட்டமாகப் பார்த் தால் உதயன் போன்றே தோற்றமளிக்கக் கூடிய வகை யில் போலி உதயன் அச்சிடப்பட்டு, அதிகாலையிலேயே எல்லாக் கடைகளுக்கும் விநியோகிக்கப்பட்டது. காலை யில் உண்மையான உதயனுக்குப் பதிலாக எல்லோர் கைகளிலும் போலி உதயன் கிடைக்க , இந்தச் செய்தி உண்மைதானோ? என்று மக்கள் கொஞ்சம் குழம் பவே செய்தனர். ஆயினும் அதற்கிடையில் உண்மை யான உதயன் கடைகளுக்கு வர அவர்களின் குழப்பம் தீர்ந்தது. என்றாலும் அன்றைக்கு தேர்தல் நாளென் பதால் இந்தக் கதை பரவலாக யாழ்ப்பாணத்தில் அடிபட்டாலும், மக்களுக்கு அரசின் சதியே இதுவென் பது நன்கு புரிந்திருந்தது. வாக்குகள் அரசுக்கு செருப்படி யாக வீழ்ந்தன. அரசின் மும்மூர்த்தி வேட்பாளர்களும் முகம் குப்புற கவிழ்ந்தார்கள்.

இறுதிப்போரில் எங்கள் மக்கள் விட்டு வந்திருந்த இரும்புகளையெல்லாம் வெட்டி, பணக்காரனான ஷிராஸ், பெருமெடுப்பில் யாழ்ப்பாணத்தில் பிரச்சாரத்தை மேற் கொண்டதும், கோயில்களுக்கெல்லாம் மணிகளை கொடுத்ததும் ஊரறிந்த சங்கதி. இப்படிப்பட்ட கொடை வள்ளல் பிரசாரத்துக்காக வாடகைக்கு வாங்கிய காருக்கும் வாகனத்துக்கும், கொடுக்க வேண்டிய லட்சக்கணக்கான பணத்தைக் கொடுக்காமல் தேர்தலுக்கு அடுத்த நாள், முடிவுகள் வந்தவுடன், காரையும், ஹயஸ் வாகனத்தையும் உரும்பிராய் மூன்று கோயிலடிப்பகுதியில் அநாதரவாக விட்டு விட்டு தலைமறைவானது வேறு கதை.

**கூத்து-4**

வாக்களிப்பு தென்மராட்சியில் சுறுசுறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனாலும் இதைப் பார்த்து படைகளின் வயிறு புகையத்தொடங்கியது. எப்படியாவது வாக்களிக்கப்போவோரை தடுக்க வேண்டும் என்று எண்ணினர். இராணுவ பஸ் ஒன்றுக்கு சிவில் உடை போடப்பட்டது. அதன் உண் மையான இலக்கத்தை மறைத்து போலியான இலக்கத்தகடு ஒன்று பொருத்தப்பட்டு, அதில் சிவில் உடை தரித்த சிப்பாய்கள் ஏற்றப்பட்டு, வாக்களிப்பு நிலையங்களுக்கு முன்னால் இறக்கிவிடப்பட்டனர்.

இந்த முறை வெற்றிலைக்குதான் எல்லாரும் போடுகினம். நீங்களும் அதுக்கே போடுங்கோ என்று முதலில் சாதாரணமாகவும் பின்னர் வெருட்டும் தொனியிலும் சொல்லத்தொடங்கினார்கள். நிச்சயமாக கூட்டமைப்புக்கே வாக்களிப்பார்கள் என்று அடையா ளம் காணப்பட்டவர்களிடம் எல்லாம் எலெக்சன் முடிஞ் சவுடன் பாத்துக் கொள்ளுறம் என்றும் எச்சரித்தனர்.

இப்படி மக்களை குழப்பியவர்கள் தவிர்ந்த இன் னொரு குழுவினர் மோட்டார் சைக்கிளில் சுற்றிக் கொண்டிருந்த கூட்டமைப்புக்கு ஆதரவான இளை ஞர்களை தாக்கத் திட்டம் போட்டனர்.

மிருவில் சந்திக்கு அண்மையாக இந்த தாக்கு தலை நடத்த அவர்கள் முயன்ற போதும், நீங்கள் வேற எங்காவது வைத்து அடியுங்க. இங்க வேண்டாம்' என்று பொலிஸ் சொன்னதால் தமது திட்டத்தை மாற்றிக் கொண்டனர்.

வாக்களிப்பு நிலையங்களில் முகவர்களாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு உணவு வழங்குவதற்காக ஆதரவாளர்களுடன் சென்று கொண்டிருந்த வேட்பாளர் சயந்தனின் வாகனத்தை புலனாய்வாளர்கள் பின் தொடர்ந்தனர். இதனை சயந்தனும் அவதானித்து விட்டார்.மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தில் உள்ள துர்க்காபுரத்தில் சயந்தனுக் கும் புலனாய்வாளர்களுக்கும் இடையே வாய்த்தர்க் கம் ஏற்பட, அங்கிருந்து நழுவி முகாமுக்குள் சென்ற படையினர், முகாமின் முன்புறக்காவலரணில் இருந்த படியே சயந்தனின் வாகனத்தை நோக்கி சரமாரியாகச் சுடத்தொடங்கினர். வாகனம் சேதமான போதும் தெய் வாதீனமாக எவருக்கும் எந்தப்பாதிப்பும் ஏற்படவில்லை. ஆனாலும் துப்பாக்கி சூடு கேட்டதால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டு, வாக்களிக்கச் சென்றவர்கள் சிலர் வாக்களிக்காமல் திரும்பி வீட்டுக்கு ஓடிவிட்டனர்.

இவையெல்லாம் நடந்து முடிந்த கூத்துகளில் ஒரு சிலவே. இவற்றை விட இன்னும் நிறையத் தில்லா லங்கடி வேலைகள் திரைமறைவில் நடக்கவே செய் திருந்தன. குறிப்பாக சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பட்டதாரிப்பயிலுநர்கள் என்போர் வெற்றிலைக்கு வேலை செய்து வெற்றி பெற வைத்தால் தான் நிரந்தர நியமனம் வழங்கப்படும்' என்று கூறி கட்டாயப் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டனர். இப்படி என்னதான் திருகுதாளங்கள் செய்தபோதும், மக்களின் மனத்தை அவர்களால் அசைக்க முடியவில்லை. உறுதியொடும் தெளிவாகவும் தமது மனதில் இருப்பதை அவர்கள் சொல்லிவிட்டனர். மக்களின் தீர்ப்புக்கு இனியாவது தலை சாய்த்து தமிழர்களுக்கு உரிமைகளை வழங்க சிங்கள பௌத்த பேரினவாதிகள் முன் வருவார்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக். 02, – 08 , ஒக்., 2013

sudarolijaffna@gmail.com

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

## வென்றபின் தேவை பக்குவம்

வென்ற பின்னர் பக்குவம் என்பது அவசியமானது. தன் சக சேவலை வென்ற திமிரில் கொக்கரித்த வெற்றிச் சேவலைக் கழுகு தூக்கிச் சென்ற கதையை சின்ன வயதில் படித்திருக்கிறோம். வெற்றி வந்தபின்னும் அடக்கமாகக் காரியமாற்றுபவனே கடைசி வரை அந்த வெற்றியைத் தக்கவைத்துக் கொள்ளமுடியும்.

வரலாற்றில் இதுவரை சந்தித்திராத வெற்றியை, இந்த நாட்டின் சகல அதிகாரங்களையும் கொண்ட மஹிந்த ராஜபக்ஷவினால் கூட தென்னிலங்கையில் பெற முடியாத வெற்றியைக் கூட்டமைப்பு வடக்கில் பறித்திருக்கிறது. ஆனால், இந்த வெற்றியின் பின் கூட்டமைப்பு எந்தத் திசையில் பயணிக்கப் போகிறது என்பதில்தான் அது சந்திக்கப் போகும் அடுத்த தேர்தலில் மக்களின் வாக்குப் பற்றிய முடிவு அமைந்திருக்கிறது.

இணக்க அரசியல், அபிவிருத்தி என்பன போன்ற வார்த்தைப் பகட்டுக்களை விடவும் மக்கள் தங்களின் உரிமைக் குரலுக்காகவே அதிகம் ஏங்குகிறார்கள் என்ற செய்தியை வடக்குத் தேர்தலின் வாக்களிப்பு உணர்த்தி நிற்கிறது. இதுவரை காலமும் தாங்கள் மக்களுக்கு ஆற்றிய சேவையால்தான் 'கூட்டமைப்புக்கு ஆதரவான வாக்குச் சுனாமி வீசியடித்து எதிர்க் கட்சிகளை உண்டு இல்லை என்றாக்கிவிட்டது' என்ற எண்ணம் கூட்டமைப்புக்காரர்களுக்கு வரவே கூடாது. உண்மையில் மக்கள் கூட்டமைப்பு என்ற கட்சியைவிடவும் கொள்கைக்காக வாக்களித்தார்கள் என்பதே உண்மை. எனவே லட்சக்கணக்கான மக்கள் எங்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள் என்ற மமதை எவருக்கும் வரக் கூடாது. தேர்தல் பரப்புரையின் போது மாவீரர்கள் என்றும், விடுதலைப் போராளிகள் என்றும் புகழ்ந்துரைத்துவிட்டு தேர்தல் முடிந்த கையோடு அவர்களை பயங்கரவாதிகள் என்று சொல்வதும், 'தமிழீழம் என்ற கனவை நாங்கள் எப்பொழுதோ கைவிட்டு விட்டோம்' என்று உரைப்பதும் மக்களிடம் இப்போதே எதிர்ப்புகளைச் சம்பாதிக்க வழிகோலிவிடும்.

எனவே பொதுவெளியில் இனம் சார்ந்த அல்லது போராட்டம் சார்ந்த கருத்துக்களைக் கூறும்போது கூட்டமைப்பின் பக்குவத்தைக் கையாள்வதோடு மக்களின் மனங்களுக்கேற்ப நடந்து கொள்வதும் அவசியம். அல்லாதவிடத்து இந்தமுறை எப்படி இணக்க அரசியல்காரர்கள் தூக்கி எறியப்பட்டார்களோ அதைவிடவும் மோசமாகத் தூக்கி எறிய மக்கள் தயங்கமாட்டார்கள்.

# எஞ்சிக் கிடக்கும் நம்பிக்கை

■ ஹரீஸ்



"காணி அதிகாரங்கள் மாகாண அமைச்சுக்குச் சொந்தமில்லை. அவை மத்திய அரசுக்கே சொந்தம்" என்ற உயர்நீதிமன்ற வியாக்கியானம் கடந்த வியாழக்கிழமை வெளியாகி இருக்கிறது. அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தத்தின் படி காணி அதிகாரங்கள் மத்திய அரசிடமே இருக்கும் எனவும் அவை மாகாண அரசிடம் இருப்பதுபற்றி அரசியல் யாப்பு எந்தச் சர்ந்தர்ப்பத்திலும் கூறவில்லை எனவும் உயர்நீதிமன்றம் தனது வியாக்கியானத்தில் தெளிவுபடுத்தியிருக்கிறது. காணி, பொலிஸ் அதிகாரங்கள் தமிழர் தரப்பின் பிரதிநிதிகளால் ஆளப்படும் வடக்கு மாகாண சபைக்கு வழங்கப்படவேண்டும் எனப் பல்வேறு தரப்புகள் தொடர்ச்சியாக இலங்கை அரசுக்கு அழுத்தங்களை கொடுத்து வருகின்றன. இந்த சூழ்நிலையில் காணி அதிகாரம் மத்திய அரசிடமே இருக்க முடியும் என்ற தீர்ப்பு தமிழர்கள் மத்தியிலேயே அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

2000 ஆம் ஆண்டு தோட்டக்காணி ஒன்று தொடர்பான வழக்கு விசாரணையொன்றின் போது கண்டி மேல்நீதிமன்றம் "காணிகள் சம்பந்தமான எந்தவித அதிகாரங்களும் மாகாண அமைச்சுக்கு கிடையாது" என தீர்ப்பு வழங்கியது. இதை எதிர்த்து கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேன்முறையீட்டின் அடிப்படையில் காணி அதிகாரங்கள் மாகாண சபைக்கு உரியது எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அரசியல் யாப்பின் காணியமர்வு காணிச்சட்டம் என்பவற்றின் உறுப்புரைகளில் ஏற்பட்ட தெளிவற்ற தன்மை இந்த முன்னுக்குப் பின் முரணான தீர்வுகளுக்கு வழிவகுத்ததாக சட்ட ஆய்வாளர்கள் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கெதிரான மேன்முறையீட்டு மனு உயர்நீதிமன்றத்தில் கையளிக்கப்பட்டது. இதன் தீர்ப்பே தற்போது வெளியாகி இருக்கின்றது. "அரசியல் யாப்புக்கு பொருள் விளக்கம் கொடுக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றை தவிர வேறு எந்த அமைப்புக்கும் கிடையாது என்பதால் அரசியல் யாப்பை வியாக்கியானப்படுத்தி காணிஅதிகாரம் மாகாண சபைக்குக்கிடையாது. அது மத்திய அமைச்சின் வசமே இருக்கும்" என உயர்நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை தனது தீர்ப்பில் தெளிவுபடுத்தியிருக்கிறது. மாகாண சபை மூலம் அரசியல் யாப்பின் 13ஆம் திருத்தத்தின் மூலம் இலங்கையில் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணலாம் என உலகை நம்ப வைத்து அரசு ஏமாற்றி வரும் விவகாரம் இந்தத்தீர்ப்பு மூலம் அம்பலத்துக்கு வந்திருக்கிறது.

மாகாண சபைக்குள்ள அதிகாரம் இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வில் ஒரு ஆரம்ப புள்ளியாக கூட அமையாது என்பதைத் தமிழீழ விடுதலைப்புலிகள் உட்பட தமிழர்களின் உரிமைக்காக போராடிவந்த பல தரப்புகள் சுட்டிக் காட்டி இருந்தன. எனினும் அதை நம்ப மறுத்தது சர்வதேசம். இப்போது காணி அதிகாரம் மாகாண சபைக்கு இல்லையென்ற தீர்ப்பின் மூலம் மாகாண சபை என்பது வெற்றுக் கோது தான் என்ற உண்மை உலகுக்கு உறைத்திருக்கும். மாகாண சபையில் உள்ள அதிகாரங்கள் பற்றி ஏற்கனவே விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது 2007ஆம் ஆண்டு மாவீரர் நாள் உரையில் தெளிவாக வரையறுத்திருந்தார்.

"இந்தியா தனது தெற்கு நோக்கிய வல்லாதிக்க விரிவாக்கமாகவே எமது தேசிய பிரச்சினையில் தலையீடு செய்தது. தமிழரது சம்மதமோ ஒப்புதலோ இன்றி சிங்கள அரசுடன் கூட்டுச் சேர்ந்து ஒப்பந்தம் ஒன்றைச் செய்தது . அந்த ஒப்பந்தம் (இலங்கை- இந்திய ஒப்பந்தம்) தமிழரது நலனுக்காகவோ நல்வாழ்வுக்காகவோ செய்யப்பட்டதன்று. தீர்வு என்ற பெயரில் 1957 இல் கைச்சாத்தான பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் இருந்த அதிகாரங்களை கூட கொண்டிராத எலும்புத் துண்டு போன்ற ஒரு அரைகுறை தீர்வை எம் தலையில் கட்டிவிட முயற்சித்தது இந்தியா. ஒரு லட்சம் இராணுவத்தின் பக்க பலத்தோடு இரண்டு அரசுகளின் உடன்பாட்டு வலிமையோடு - எட்டப்பர் குழுக்களின் ஒத்துழைப்போடு - அந்த ஒப்பந்தத்தை செயற்படுத்தி விட இந்தியா தீவிரமாக முயற்சித்தது . தமிழர்களின் பிரச்சினையில் அடிப்படையைக் கூடத் தொட்டு நிற்காத இந்த அரைகுறை தீர்வைக் கூட சிங்களம் நடைமுறைப்படுத்த உடன்படவில்லை" என இலங்கை இந்திய ஒப்பந்தத்தை பற்றியும் அதனால் ஏற்படுத்தப்பட்ட 13 ஆவதுதிருத்தத்தை பற்றியும் பிரபாகரன் தெளிவாக கூறியிருந்தார்.

ஆனால் உலக நாடுகளும் இந்தியாவுமே இதில் ஏதோ இருக்கின்றது என 13 ஆவது திருத்தத்தை தலையில் வைத்துக் கூத்தாடினார். இந்த 13 ஆவது திருத்தம் எந்தவித உப்புச்சப்புமற்ற அரைகுறை தீர்வென்பதை அரசின் முக்கிய மூன்று துறைகளில் ஒன்றான நீதித்துறையே தற்போது துலாம்பரமாகிவிட்டது. தமிழர் பிரச்சினைக்கு 13ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வு காணலாம் என முழக்கமிட்டவர்கள் இப்போது என்ன வியாக்கியானங்களை முன்வைக்கப் போகிறார்கள்?. "மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி" "வடக்கு கிழக்கு இணைந்த அலகு" என அரசியல் நடத்தப் புறப்பட்டவர்கள் இப்போது என்ன சொல்லப்போகிறார்கள்? அரசியல் யாப்பு ஏற்கனவே காணி அதிகாரங்களைப் பற்றியும் பொலிஸ் அதிகாரத்தை பற்றியும் தெளிவாகவே குறிப்பிட்டிருந்தது. ஆனால் அதை குழப்பி மீன்பிடிக்கும் பணியில் இந்தியாவும் மும்முரமாக ஈடுபட்டது . மாகாண அமைச்சுக்குரிய காணிகளை வழங்க வேண்டியது மத்திய அரசின் கடமை. இங்கு மாகாண அமைச்சு காணி ஒன்றைப் பயன்படுத்தல்

➡



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தி அறுந்த...

பூமுகன்



> “தாம் வெல்ல வேண்டும் என்பதற்காக எதையும் செய்யும் ஆற்றல் படைத்தவர்கள் இப்போது தமது பாதை பிழைத்திருப்பதை உணர்ந்திருக்கின்றனர்.”

நடைபெற்றுமுடிந்த வடமாகாண சபைத் தேர்தல் பல மறந்துபோன கதைகளைப் புதிப்பித்திருக்கின்றன. தாம் எங்கு இருக்கிறோம். எதைச் செய்கிறோம் என்ற சிந்திப்பையும் தூண்டியிருக்கின்றது.

கண்கெட்ட பின் சிலர் சூரிய நமஸ்காரத்துக்குத் தயாராகியுள்ளனர்.

அஸ்த்தமனத்தின்போது விடியலுக்காகவும் விடியலின்போது அஸ்த்தமனத்துக்காகவும் அழுத சிலரது புருவங்கள் மக்களால் திறக்கப்பட்டுள்ளன.

தொழில் நுட்பத்தின் பாதிப்பு வடக்கு மக்களை கண்திறக்கவைத்திருக்கிறது என்று சொல்ல வேண்டும். புத்திசாதுரியமான சிந்தனை களை மக்கள் கொண்டுள்ளனர். சொல்லப் போனால் பத்துவருடங்களுக்கு முன் இருந்த வடபகுதி மக்களுக்கும் இப்போதுள்ள மக்களுக்கும் நிறைய வேறுபாடு காணப்படுகிறது.

அறிவியல் வளர்ச்சிக்கு இவர்கள் இடமளித்திருக்கிறார்கள். குறிப்பாக அரசியல் சாக்கடைகளுக்குள் இருந்து மீள்வதற்கான இவர்களது துணிச்சலும் சிந்தனையும் இதைப் பறைசாற்றுகின்றன.

**தவறான கணிப்பு**

நீண்ட காலப்போர் மக்களை நிலைகுலையச் செய்ய அதை சாதகமாகக் கொண்டு சிலர் அரசியல் நகர்வை மாற்றியிருந்தனர். இதுவரை அடிநாதமாக இருந்த கொள்கைகளும் கோட்பாடுகளும் கைவிடப்பட்டு மக்களை சலுகை சார்ந்த மனவிருப்புமாற்றத்துக்கு கொண்டு செல்ல இவர்கள் முயற்சித்திருக்கின்றனர்.

ஆரம்பத்தில் இவர்களது சூழ்ச்சி நகரல்லாத கிராமமட்டத்தில் சாத்தியமானதை இவர்கள் உணர்திருந்தனர். குறிப்பாக கரையோரப் பகுதிகள், வளர்ச்சி குன்றிய கிராமங்கள் இவர் களது மாற்று அரசியலுக்கு வலுச்சேர்த்தன.

சிறு வெற்றிகளை கொண்டு ஏமாற்றுவாதிகள் பொது முடிவுக்குவந்தனர். அதுதான் சலுகை அரசியல்.

**சமூகமயமாக்கம்**

கடந்த ஓர் இரண்டு சதாப்தம்வரை பண்டிகைகள், கோயில் திருவிழாக்கள், கொண்டாட்டங்கள் வாயிலாக சமூகமயப்பட்டுக் கொண்ட மக்கள் இன்று அதிலிருந்து மாற்றம் பெற்று சமூக வலைத் தளங்கள் ஊடாக சமூகத்தைப் புரிந்துகொள்ளும் நிலை ஏற்பட்டிருக்கிறது.(நன்மை,தீமைக்கு அப்பால்) அரசியல் பெரு எழுச்சி கண்டுள்ளது.

தவறான தகவல்களுடன் சலுகை, ஆசை வார்த்தை என்று மக்களை நம்பவைத்து அவர்களை தமது ஆதரவாளர்களாகக் காட்டி, தமது பலத்தை வெளிக்கொணர்ந்த சில அரசியல் வாதிகள், பதவிகளைப் பெற்றதும் தாம் முன்னர் செய்த அரசியலை மறந்து, அல்லது நியாயப்படுத்திக்கொண்டு அடுத்த சந்ததியிடமும் அதை விற்பனைக்காக அறிமுகப்படுத்த முயற்சித்துள்ளனர். இது முற்றிலும் தவறானது.

காரணம் இவர்கள் நம்பிய மக்கள் இன்று உலகத்து மூலைமுடுக்கெல்லாம் சென்று வருகின்றனர் என்பது புரியாமையே.

நடந்துமுடிந்த தேர்தலில் இரு ஆசனங்களைக் கைப்பற்ற பெரும்பாடுபட்ட கட்சிக்கு இன்று ஞானம் பிறந்திருக்கிறதாம்.

**மறக்கப்பட்ட சின்னம்**

கடந்தவாரம் அவசர கூட்டம் நடத்திய அமைச்சர் “இனி நாங்கள் அதில கேட்பம்” என்று தீர்மானிச்சவையாம். ஈழமக்களுக்கான ஜனநாயகப்போராட்டம் மீள ஆரம்பிக்கப் படுகிறது.

சலுகைக்கும் உரிமைக்கும் இடையிலான கயிறிழுப்பு முடிவடைந்ததும் இந்த முடிவு மக்கள் மத்தியில் ஆச்சரியத்தை உண்டுபண்ணியுள்ளது. இவர்களது வேடம் இன்னும் நிறம் மாறவுள்ளது. இன்னும் பயங்கரங்களைத் தரப் போகிறது என்றதே மக்கள் பயம்.

கடந்த தேர்தலில் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் பல அரங்கேற்றப்பட்டன.இவை இயலாமையின் வெளிப்பாடுகள். தாம் வெல்ல வேண்டும் என்பதற்காக எதையும் செய்யும் ஆற்றல் படைத்தவர்கள் இப்போது தமது பாதை பிழைத்திருப்பதை உணர்ந்திருக்கின்றனர்.

பாதையைப் புனரமைக்க எத்தனை காலம் எடுக்குமோ.....லயம், நாதம் பிழைத்திருக்கிறது...... சூரியன் இருக்கும் திசை தெளிவில்லை. உத்தேசப்படி நமஸ்காரம்! நமஸ்காரம்!! நமஸ்காரம்!!!.

## எஞ்சிக் கிடக்கும் நம்பிக்கை

சம்பந்தமான பரிந்துரை ஒன்றை மட்டுமே மத்திய அமைச்சுக்கு வழங்கமுடியும். காணி மீதான ஆட்சி காணிக் குடியிருப்பு காணிச்சீர்திருத்தம் என்பன பற்றி மத்திய அரசே இறுதி முடிவெடுக்கும். மாகாண அரசு காணிகளைப் பயன்படுத்த உரிமையிருப்பினும் மத்திய அரசின் கொள்ளைகளுக்கேற்பவே காணிகளைக் பயன்படுத்த வேண்டும். அரச காணிகள் எவை என்று தீர்மானிக்கும் பொறுப்பும் காணி அபகரிப்பு சம்பந்தமாக முடிவெடுக்கும் அதிகாரமும் மத்திய அரசுக்கே உண்டு என அரசியல் யாப்பு மிகத் தெளிவாக வரையறுக்கிறது. ஆனால் மத்திய அரசின் அதிகார வியாக்கியானத்தோடு ஒப்பிடும் போது மாகாண அரசின் அதிகார வியாக்கியானம் அரசியல் யாப்பில் தெளிவற்றதாக இருப்பது மத்திய அரசிடம் அதிகாரங்களை தாரை வார்ப்பதற்கு பேருதவியாக இருக்கும்.

மொத்தத்தில் வடக்குமாகாணசபையையும் கிழக்கு மாகாணசபையையும் ஜே.வி.பி எனும் இனவாத கட்சியின் மூலம் பிரித்த அரசு தற்போது வடக்கு மாகாண சபையின் அதிகார நிலையிலும் கை வைக்கத் தொடங்கியிருக்கிறது. ஆயினும் அரசின் கபட நாடகத்தை சர்வதேசம் பார்த்துக் கொண்டு சும்மாயிராது என்பது தமிழ் மக்களிடம் எஞ்சிக்கிடக்கும் ஒரேயொரு நம்பிக்கைத் துளியாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இளையோருக்கான புதிய பகுதி!

# காதலர் மட்டும்...




—— சுபிதி ——

**கா**தல் தோல்வியில் பலவகைகள் உண்டு என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. காதல் தோல்வி மட்டுமல்ல, காதலில்கூட பலவகைகள் இருக்கின்றன. உடற் காதல், உள்ளக் காதல், இரக்கக் காதல், காமக் காதல் என்று சொல்லிக்கொண்டே போகலாம். இதில் எந்த விதமான காதல் தோல்வி பரவாயில்லை என்று பார்ப்போமா?

**முதல் ரகம்** - ஒரு பெண்ணைப் பார்த்து உங்களுக்கு மிகவும் பிடித்து விட்டது. அதனால் அவளை நீங்கள் ஒரு தலையாக விரும்புகிறீர்கள். ஆனால் அவள் உங்களைக் காதலிக்கவில்லை. நீங்கள் செய்த எல்லா முயற்சிகளும் தோல்வியில் முடிந்து விடுகின்றன. அவளை நீங்கள் முழுமைமாக மறக்காவிட்டாலும் ஓரளவுக்கு மறந்து வாழலாம். இதுபோல் கோடிக்கணக்கில் ஒரு தலைக் காதல் தோல்விகள் நடந்துகொண்டே இருக்கின்றன.

**இரண்டாவது ரகம்** - ஒரு பெண்ணை நீங்கள் விரும்புகிறீர்கள். அதேபோன்று அவளும் உங்களை விரும்புறாள். காதல் இரண்டு பக்கமும் மலர்ந்துவிட்டது. காதலில் வெற்றி! ஆனால் உங்கள் குடும்ப சூழல், சாதி, மதம், பெற்றோர் இவையெல்லாம் உங்களுக்கு எதிராக அமைந்து விடுகின்றன. கடைசியில் காதலர்கள் இருவரும் திருமண பந்தத்தில் இணைய முடியாமலே போய் விடுகிறது. இருவரும் வேறு வேறு துணைகளைத் தேடிக்கொள்கிறார்கள். நாளடைவில் பெற்றோர் பார்த்துக் கட்டிவைத்த துணையுடனான வாழ்க்கையில் பழைய காதல் தேய்ந்து கடைசியில் மறந்தே போய்விடுகிறது.

**மூன்றாவது ரகம்** - ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் மனதார நேசிக்கிறார்கள். குடும்பம், மதம், சாதி என்பனகூட இவர்கள் இருவருக்கும் சாதகமாகவே இருக்கின்றன. ஆனால் காலப்போக்கில் இருவருக்குமிடையேயான காதல் உடைய ஆரம்பிக்கிறது. ஒருவரிடம் உள்ள குறை இன்னொருவருக்கு பெரிய பிரச்சினையாகி அதுவே மோதலாக உருவெடுத்து அடிக்கடி சண்டை பிடித்துக்கொள்வதே அவர்களின் தொழிலாகிப் போய்விடுகிறது. சில நாள்களில் தங்கள் காதலரைக் கண்டாலே எரிச்சலும், கோபமும் மேலிட அவர்கள் ஒருவரையொருவர் வேண்டாப் பொருளாக நினைக்கிறார்கள். ஒரு கட்டத்தில் இந்தக் காதல் சரிவராது என்ற எண்ணம் இருவருக்கும் தோன்றும். இதனால் கடைசியில் ஒருவருக்கொருவர் பரஸ்பரமாகச் சொல்லிவிட்டுப் பிரிவர். அல்லது சொல்லாமலே வேறு நாடுகளுக்குச் சென்று விடுவார்கள். இதுபோன்ற காதல் தோல்விகளை வெளிநாடுகளில் சகஜமாகக் காணமுடியும். தற்போது எங்கள் நாட்டிலும் இது பரவத் தொடங்கிவிட்டது.

*(அடுத்தவாரம் தொடரும்)*


## காதல் பரிசு:
## உங்களுக்கும் பரிசு

உங்கள் வாழ்வில் அல்லது உங் களுக்குத் தெரிந்தவர்களின் வாழ்வில் காதல் பரிசுகள் பற்றிய சுவாரசியமான சம்பவங்கள் நடந்திருக்கலாம். அவற்றை 100 சொற்களுக்கு மேற்படாமல் எமக்கு எழுதி அனுப்புங்கள்.

தரமானவை வாரந் தோறும் இந்தப் பகுதியில் பிரசுரமாவதோடு. உங்களுக்கு ஆச்சரியமளிக்கும் பரிசுகளும் காத்திருக்கின்றன.



✍ **அனுப்ப வேண்டிய முகவரி:**
**காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு**
**சுடர் ஒளி**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**பரிசு பெற்றவர்கள் வாரநாள்களில் 021 567 7609 என்ற எமது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு துரிதமாக பரிசினைப் பெற்றுக்கொள்ளலாம்.**


# ‘காதல்’ என்றால் என்ன?



**கா**தல் என்பது ஒரு வகையான தனித்த உணர்வு. அந்த உணர்வை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

“காதல் என்பது ஆசை, அன்பு, நட்பு, காமம், விரகம் ஆகிய உணர்வுகளில் ஒன்று அல்லது இவைகள் அனைத்தும் கலந்த ஒரு உணர்வுதான்”- என்று பெரியார் கூறினார்.

“சாதி மாறிக் காதலித்தால் கலாசாரம் மாறிவிடும். பண்பாடு கெட்டுவிடும். காதல் என்பது வெளிநாட்டுப் பண்பாடு. காதலை ஒழிக்க வேண்டும். காதல் திருமணங்கள் எல்லாம் பணம் பறிக்க நடக்கும் நாடகத் திருமணங்கள்” என்று பலர் நினைக்கின்றனர்.

உண்மையில் காதல் என்பது வெளிநாட்டுப் பண்பாடா?

இப்படிப் பேசுபவர்கள் அரிச்சுவடியே தெரியாதவர்கள் என்று தான் சொல்ல வேண்டும். தமிழர் வரலாற்றில் காதல் ஒரு முக்கியமான பண்பாட்டுக்கூறு. தமிழ் இலக்கியங்களில் காதலைப் பற்றிப் பேசப்படாத, காதலைப் போற்றாத ஒரு இலக்கியத்தைக் கூடப் பார்க்க முடியாது. தமிழ் இலக்கியங்களில் அகநானூறு என்ற இலக்கியம் தமிழரின் காதல் வாழ்க்கையைப் பற்றி, காதலைப் பற்றி விரிவாகப் பேசுகின்றது.

“தமிழ் இலக்கியங்களில் காதல் உள்ளது அதனால் கட்டாயம் எல்லோரும் காதலிக்கத் தான் வேண்டும்” என்று பேச வரவில்லை. இலக்கியங்களில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனின் உணர்விலும் காதல் தோன்றியே தீரும். காதலை எதிர்ப்பவர்கள் வேண்டுமானால் அந்த உணர்வுக்கு காதல் என்ற பெயரை வைக்காமல் வேறு பெயரைக் கூட வைத்துக் கொள்ளலாம். அதற்கு மேல் காதல் என்ற உணர்வுக்கு யாராலும் எதிர்வினையாற்ற முடியாது.

இன்று புத்தகங்கள், திரைப்படம் மற்றும் இணையத்தளத்தில் காதல் கருத்துக்கள் பல வழிகளில் வெளிப்படுகின்றன. ஆனால் உண்மையான காதல் உள்ளுணர்வோடு நாம் வைத்து பழகும்போதுதான் அதை உணரமுடியும். சிலருக்கு காதல் செய்யும் போது, ஆரம்ப காலத்தைத் தவிர மற்ற நாட்களில் எந்த ஒரு சுவாரஸ்யமான விஷயமும் இல்லாமல், சலிப்பு ஏற்படுவது போன்று உணர்வார்கள். சிலருக்கு அதனாலேயே காதல் தோல்வி அடைந்துவிடும்.

எனவே அந்த மாதிரி காதல் இல்லாமல், எப்போதுமே காதலுடன் துடிப்பாக இருக்க சில வழிகள்:

1. காதல் என்பது ஒவ்வொருவரின் மனதைப் பொறுத்தது. அதிலும் காதல் சின்னங்களான ரோஜா, மெழுகுவர்த்தி மற்றும் சொக்லேட் மட்டுமே இதுவரை காதலில் ஒரு அறிகுறியை கொடுத்துள்ளது.

உண்மையில் காதலிப்பவரை மகிழ்விப்பதற்கு, அவர்களின் காதல் உணர்வு களைத் தூண்ட எது ஏதுவாயிருக்கும் என்று பாருங்கள். அவர்கள் எதை விரும்புகிறார் என்பதை தெரிந்துகொள்ளுங்கள். அவர்களின் காதலை வெல்ல அவர்களின் விருப்பங்கள், வெறுப்புகள் அறிந்து கொள்வது மிக அவசியம். மேலும் உங்களது உலகில் மற்றவரை விட அவர்கள் எத்தனை முக்கியமானவர் என்பதை நீங்கள் உணர ஆரம்பிக்கும் பொழுது, உங்கள் மனம் அவர் மீது அதிக கவனத்தை செலுத்தும். இவ்வாறு செலுத்தும் போது, அவர்களது ஒவ்வொரு செயலையும் ரசிக்கத் தோன்றும்.

(தொடர்ந்து நேசிப்போம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரோகச் சின்னங்கள்

## சிறுகதை

பொலிகையூர்
சு.க.சிந்துதாசன்

" மாமி யார் வந்தது....?" எனக் கேட்டபடி உந்துருளியின் பின் இருக்கையிலிருந்து தன் மகனை அணைத்துக் கொண்டு இறங்குகிறாள் மதி . அந்தக் குரல் கேட்டுத் திரும்பிய கானகன் உந்துருளியுடன் நின்ற தன் பழைய நண்பன் மலரவனைப் பார்த்து விறைத்தபடி நிற்கிறான்.

இரவு முழுவதும் தூக்கம் வராமல் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்த கானகன் இரண்டு மணிக்கே தனது பயணத்துக்குத் தயாராகிவிட்டான். நான்கு வருடங்களுக்குப் பின்பு தன் துணைவி சீர்மதியைச் சந்திக்கப் போகின்றான். அந்த ஏக்கம், தவிப்பு, எதிர்பார்ப்பு என எல்லாம் சேர்ந்து அவன் மனதை இயக்கிக் கொண்டிருந்தன.

கிளிநொச்சிக்கான பஸ் காலை ஐந்து மணிக்கே கொழும்பிலிருந்து புறப் படும். இன்னும் நேரம் இருக்கிறது. ஆனா லும் அதுவரை என்ன செய்யமுடியும். அவனிடமிருந்த உடமை" ஆடைப்பை" ஒன்றுதான். அதனுள் கைவிட்டு தான் விரும்பி அணியும் அந்த நீலநிற மேற் சட்டையை எடுத்துப் பார்க்கிறான். அது மின் வெளிச்சத்தில் மங்கியது போல் தெரிகிறது. அதனால் அவன் சற்று கவலையடையத்தான் செய்தான். சீர் மதி அனுப்பி வைத்த அந்த சேட் ஒன்று தான் அவளின் ஞாபகமாய் கடந்த நான்கு ஆண்டுகள் அவனிடம் இருந்தது. " இப் போது சீர்மதி என்ன செய்து கொண்டி ருப்பாள்? என்னைப் பிரிந்து இன்று வரை அவள் என்ன துன்பப் பட்டிருப்பாள்? மாமியும் இல்லையென்றால் அவ ளின் நிலை என்னவாயி ருக்கும்?" சீர்மதியின் நிலை குறித்த பல வினாக்கள் கானகனின் சிந்தனையில் எழுந்து மறைந்து கொள் கின்றன.

"என் கல்யாண நாளுக்கு இன்னும் ஒரு கிழமை யிருக்கிறது. அதற்குள் நான் சீர்மதியை சந்திச்சிடு வேன். இத்தனை நாளாய் பிரிஞ்சு நாங்கள் பட்ட துன் பம் போதும் இனியாவது எமக்கு நல்ல காலம் கிட்ட ஆண்டவன் கருணை காட்ட வேண்டும்'' இந்த எண்ணமே அவனை ஆட்கொண்டிருந் தது. இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டு வன்னி இறுதிப்போர் ஆரம்பித்த காலப் பகுதியில் இருவரின் திருமணமும் நடந் திருந்த போதும் ஒன்றாகவிருந்த காலம் மிகவும் குறைவாகவே இருந்தது. இரு வரும் வெவ்வேறு பணிகளில் ஈடுபட்டி ருந்தமையே இப்பிரிவுக்குக் காரண மாயிற்று. வாரத்தில் அல்லது மாதத்தில் ஓரிரு நாட்கள் மட்டுமே அவர்கள் வீட்டுக்கு வருவார்கள். ஆனாலும் தத் தமது பணி சார்ந்த விடயங்களைப் பிரஸ்தாபிப்பதிலேயே அந்தப் பொழுது கள் கரைந்து விடும்.

சீர்மதியின் தாய்க்கு இருந்த கவலை ஒன்று தான். அது மகளுக்கு ஒரு குழந் தைச் செல்வம் இல்லை என்பது தான். கானகன் சீர்மதி குடும்பத்துக்கிருந்த ஒரேயோரு உறவு அது சீர்மதியின் தாய் மட்டும் தான். இருவரும் பணி நிமிர்த்தம் புறப்பட்ட பின்பு வீட்டு வேலைகளைக் கவனிப்பதும் மகள் மருமகனின் உயிரைக் காப்பாற்றி தருமாறு ஆண்டவனிடம் இறைஞ்சு வதும் அவர்களுக்கு ஒரு பிள்ளை வேண்டு மென்று வேண்டுவதுமே தாயின் பணியாய் இருந்தது.

போரின் இறுதித் தருணங்களில் முற்றாகவே சீர்மதியையும் மாமியையும் சந்திக்க முடியாமற் போன கானகன் விழுப்புண்ணடைந்த நிலை யில் பதுங்கு குழியொன்றிலிருந்து படையின ரால் மீட்கப்பட்டு இற்றைவரை புனர்வாழ்வு பெற்று வந்தான். இன்னும் அவன் உயிருடன் இருப்பதற்கும் தன் சக வாழ்வில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணத்துடன் இருந்ததற்கும் காரணமாய் இருந்த நம்பிக்கைப் புள்ளி சீர்மதி மட்டுந்தான். அதனால் தான் அவனது நினை வுகள் சதா அவளையே சுமந்து கொண்டிருந்தன. ஆனாலும் தானிருந்த புனர்வாழ்வு முகாமுக்கு ஒரேயொரு தடவை வந்திருந்த சீர்மதி தன் னைப் பார்க்க முடியாத நிலையில் திரும்பிய தும் அதன் பின் இற்றைவரை தொடர்புகளற்று இருந்ததும் ஒருவித ஏக்கவுணர்வை அவனில் கொட்டியிருந்தது. "நம்பிக்கை தான் வாழ்க்கை" அடிக்கடி கானகன் உச்சரிக்கும் வார்த்தைகளில்



ஒன்று. அதன் படியே இற்றை வரை தன் காலத்தை ஓட்டியிருந்தான்.

ஒருவாறு தன் பரபரப்பைக் குறைக்க எத் தனித்துக் கொண்ட கானகன் வெளியே வந்து வீதியைப் பார்க்கிறான். அங்கே பயணப்பை களுடன் சிலர் போவதும் வருவதுமாய் இருந் தனர். உடனேயே அங்கிருந்து புறப்பட்டு வந்த அவன் உரிய பேரூந்தில் ஏறி தனக்குரிய இருக் கையில் அமர்ந்துகொண்டான். இன்னும் புறப் படுவதற்கு அரைமணிநேரம் இருப்பதை உணர்ந்த அவன் தன் ஆவலை யாரிடமும் சொல்ல முடி யாத நிலையில் திணறியபடியிருந்தான்.

மணிகள் கரைந்து தன் பயணம் நிறைவுறும் நேரம் நெருங்கிக் கொண்டிருப்பதை பேரூந்தின் சாளரம் வழியாக உற்று நோக்கி அறிந்து கொண்ட கானகன் முன்னைய நாட்களில் இருந்த இடம் எவ்வாறெல்லாம் மாற்றமடைந்திருக்கிறது என் பதை எண்ணி வியப்படைந்தான்.

"என்ன அதிசயம். எல்லாமே மாறிப்போயிற்று. இந்தக் குறுகிய காலத்துக்குள் இவ்வளவு மாற் றமா? போர் நடந்த ஒரு இடம் போல இது தெரிய வில்லையே. போரின் எந்த வடுக்களையும் இங்கு காணவில்லையே. காலம் எதையும் மாற்றுமோ...?" சிந்தனைகள் பலவாறு சிற கசைக்க, "கிளி நொச்சி இறக்கம்! கிளிநொச்சி இறக்கம்!" நடத் துனரின் அறிவிப்பைக் கேட்ட கானகன் வேக மாகப் பேரூந்திலிருந்து இறங் கினான்.

ஏதாவதொரு புதுஇடத்துக்கு வந்திருப்பது போலொரு உணர்வு மேலிட அவன் கால்கள் முன்னைய பழக்கத்தில் தான் குடியிருந்த வீடு நோக்கி நகர்கிறது. இருபது நிமிட நடையில் அவ னது வீட்டுக்குச் சென்று விடலாம். ஆனாலும் நீண்ட நாட்கள் நடக்காததால் இப்போது நடந்து செல்வது மிகவும் கடினமாகவிருந்தது. வேகமாக நடந்து வந்ததால் மூச்சு வாங்க ஒரு முதிரை மரத் தின் கீழ் அமர்ந்து கொள்கிறான். அங்கிருந்து கூப்பிடு தூரத்தில் கண்களுக்குத் தெரியக்கூடிய இடத்தில் அமைந்திருக்கக் கூடிய தன் வீட்டை அவதானிக்கிறான். இனங் காணக்கூடிய விதத் தில் தெளிவாய் எதுவும் தெரியவில்லை.

அங்கே," யார் தம்பி...?" என்ற குரலோடு ஒரு மூதாட்டி வெளியே வருகிறார். எச்சில் விழுங்கிய படி " நீங்க...." கேள்வியை முடிக்க முன் " நான் தான் மதியின் மாமி" எனப் பதில் பிறந்தது. குழப்பம் அவனை ஆட்கொள்ள "எந்த மாமி? எனக்குத் தெரிந்தவரை அப்படியொரு மாமியில்லையே!" மனதுள் நினைத்த கானகன் " சரி மதி எங்கே?" பதிலுக்கு "நீங்கள் யாரென்று சொல்லவில் லையே!" நான் தான் "கான..." சொல்ல வாயெடுத் தவன் சுவரில் தொங்கிய மதியின் தாயின் படத்தைப் பார்த்து வாயடைத்துப் போனான். கதவில் ஒரு கையைப் பற்றியபடி சற்றுநேரம் அந் தப் படத்தையே உற்றுநோக்கிக் கொண் டிருந்த கானகனின் விழிகளிலிருந்த கண்ணீர் வழிகிறது.

மதியின் மாமி ஆச்சரியத்தோடு கானகனை நோக்குகிறார். உந்துருளி ஒன்று முற்றத்தில் வந்து நிற்கிறது.

"மாமி யார் வந்தது....?" எனக் கேட்டபடி உந்துருளியின் பின் இருக்கையிலிருந்து தன் மகனை அணைத்துக் கொண்டு இறங்குகிறாள் மதி. அந்தக் குரல் கேட்டுத் திரும்பிய கானகன் உந்துருளியுடன் நின்ற தன் பழைய நண்பன் மலர வனைப் பார்த்து விறைத்தபடி நிற்கிறான். காற்று வீசுகிறது. முற்றத்து வேப்பமரத்திலிருந்து சில இலைகள் உதிர்ந்து நிலத்தில் விழுகின்றன. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போனவர்களின் வருகை




தொடர் கதை

11

● தொல்புரம் சி. கதிர்காமநாதன்

வெளியே மோட்டார் சைக்கிள் இரைந்தது. இருவரது புலனும் வாசலை நோக்கித் திரும்பின

"ஆரப்பா.....?"

பை சிக்கிள் மேலும் சத்தமாக இரைந்தது.

"கதவு பூட்டாமத்தான் கிடக்கு.... வாங்கோ"

"அட கந்தசாமி..... வாரும்.... மங்களமும் வாரும்"

"நான் கனநேரம் நிக்கேல்ல. கன அலுவல் கிடக்கு"

"என்ன வந்ததும் அவதிப்படுறியள்"

"நான் நாளைக்கு பயணம் அதுதான் வந்தனான். அக்கா எப்படியிருக் கிறீயள்."

"எனக்கென்ன பிள்ளையை நினைச்சுக் கொண்டு இருக்கிறன்"

"என்ன யோசனை உந்த வயதில" மங்களம் கேட்டாள்.

"இல்ல இஞ்ச வாறானும் இல்லை. கடிதமும் குறைவு"

"அங்க அவன் சும்மாவே இருப்பான். ஓரே ஓட்டம் தானே. எனக் கெல்லோ தெரியும் அங்கத்தைய வாழ்க்கையை! மங்களம் சுணங்காமல் போக வேணும்"

"என்ன அந்தரப்படுகிறார்."

"எனக்கு விசராய்க் கிடக்கு. இந்த ஆள் சொன்னதைக் கேட்கு தில்லை. இங்க நிக்க தனக்கு அந்தரமாய்க்கிடக்காம். நேரம் அநியா யமாய்ப் போகுதாம். காசு சம்பாதிக்கிற நேரத்த இப்படி தேவை யில்லாமல்......"

மங்களம் குரலில் சலிப்புத் தெரிந்தது.

எப்படி நான் இங்க நிற்கிறது.

வெளியில போய் நிற்கிற மகனையும் பார்க்க வெல்லே வேணும்.

"சரி சரி நாங்கள் கிளம்பிறம்."

வெளியே வந்தோம். மோட்டார் சைக்கிள் "புதிசாய்" இருந்தது.

"பைக் எடுத்தனீங்களோ?"

'நான் இங்க நிற்கிற நாள் வரையும் ஆரிட்டையும் இரவல் வாங்கி ஓடித்திரியிறது கஸ்ரம் தானே. பார்த்தன்; எனக்கும் தேவை, இங்க நிற்கிற மகனுக்கும் தேவை. அவன் முதலே சொன்னவன் தனக் கொண்டு வாங்கித்தரச்சொல்லி. பிறகென்ன வாங்கிப்போட்டன்."

"சரியண்ணை பிறகு வரேக்க பார்ப்பம்.....போட்டுவாறம்."

மோட்டார் சைக்கிள், புதுமணம் பரப்பி விரைந்து போனது.

சில வாரங்களில் ஊர் அமைதியாக இருந்தது. ஊர் முருகன் கோயில் திருப்பணி வேலை நடந்து கொண்டிருந்தது. அதற்காக நிதி வசூலிப்பதற்கு கோயில் திருப்பணிச்சபை உறுப்பினர்கள் வந்து போனார்கள். பிள்ளை வெளிநாடென்ற நிலையில் "பணம்" கொடுப் பதில் பிரச்சினை இல்லை என்பதைச் சொல்லிவிட்டு, பணம் கேட்டு நின்றனர். இனி தொடர்ந்து கோயில் திரு விழாக்கள் தொடங்கி விடும். நிதி வசூலிப்போர் தொகையும் கூடும். இப்போது ஊரில் அறுபது குடும்பம் அளவில் தான் வசிக்கின்றன. இவர்களை விட்டால் வேற வழியில்லை.

உள் இருந்து மனுசி குரல் கொடுத்தாள்.

"என்னப்பா வாசுகி வீட்டுப்பக்கம் போகேல்லையே, அடிக்கடி வந்து போறதுகள், இப்ப ஆக்களை காணேல்லை. ஏதேனும் சுகமில் லையோ. ஒருக்காப் போட்டு வாங்கோவன்.

எனக்கும் அப்போது தான் வாசுகியின் ஞாபகம் வந்தது.

"அட.... நானும் போகாமல் விட்டிட்டன். வாசுகியின்ர அம்மாவும் மகனிட்ட நோர்வே போகப்போறனெண்டு சொன்னவா, அவா போனாவோ தெரியாது...."

"கெதியாய் ஆட்டுக்கு குழையை வெட்டிப்போட்டு, போட்டு வாங்கோ. என்னெண்டாலும் ஓடி வாற சனம் எல்லே? நாங்கள் இப்படியிருந்தால் நாளைக்கு எங்களுக்கு ஒரு நாய் கூட வராது."

"அப்படியெல்லாம் கவலைப்படாதையும். இடம்பெயர்ந்து போட்டு இஞ்ச திரும்பி வரேக்க ஒரு நாயும் இல்லை. வீட்டுக் காவலுக்குக் கூட நாய் இல்லாமல் காசு குடுத்துத் தான் குட்டி ஒண்டு வாங்கின னாங்கள். ஆனா இப்ப ஊர் முழுக்க நாய்கள். கதவைத் திறந்து விட்டால் எல்லா நாயும் உள்ளுக்கை வந்திடும்."

*(அடுத்தவாரமும் வருவார்கள்)*




**மேஷம்**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

**அனுபவ அறிவினால் வெற்றி குவித்திடும் மேஷ ராசிக்காரர்களே!**

உங்களின் தனித் திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள். பணிபுரிவதில் ஆர்வம் அதிகரிக் கும். அக்கம் பக்கத்தவருடன் இருந்த மனக்கிலேசம் விலகும். வாகனத்தில் பராமரிப்புச் செலவு கூடும். புத்திரர், உங்களின் சொல்கேட்டு நடந்து கொள்வர். உடல் நலம் ஆரோக்கியம் பெறும். இல்லறத்துணை அன்பு, பாசத்துடன் நடந்து, குடும்ப ஒற்றுமையை பாதுகாப்பார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, அக்கறையுடன் செயல்படுவீர்கள்.

**ரிஷபம்**

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

**நடை உடை செயலால், பிறரை வசீகரிக்கும் ரிஷப ராசிக்காரர்களே!**

மனதில் உற்சாகம் அதிகரிக்கும். வசீகரமான பேச்சினால், புதியவர்களின் அன்பு, நட்புப் பெறுவீர்கள். பணவரவு அதிகம் பெற உருவாகிற வாய்ப்பை தவறாமல் பயன்படுத்துவீர்கள். தம்பி, தங்கையின் விருப்பம் நிறைவேற உதவுவீர்கள். எதிரி உங்களிடம் மறைமுகமாக, சில நன்மை முயற்சி மேற்கொள்வார். இல்லறத் துணையின் மனதில் நம்பிக்கை வளர்க்கும் விதத்தில் பேசுவது நல்லது. தொழில், வளர்ச்சி சிறப்பாக அமைந்து, லாபவிகிதம் அதிகரிக்கும்.

**மிதுனம்**

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**நற்செயல் புரிந்து மனமகிழ்ச்சி பெறும் மிதுன ராசிக்காரர்களே!**

உங்கள் மனம் வருந்துகிற வகையில், சிலர் அவமதித்து பேசுவர். அவர்களிடம் விலகுவதால் நேரமும், மனஅமைதியையும் பாதுகாக்கலாம். குடும்பத்தின் அத்தியாவசிய செலவுக்கு மட்டும் முன்னுரிமை தருவது நல்லது. வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும், சீரான ஓய்வு உடல் நலம் பாதுகாக்கும். இல்லறத்துணையின் ஆறுதல் வார்த்தை மனதில் நம்பிக்கை வளர்க் கும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத் தன்மைகளை, அக்கறையுடன் பாதுகாக்க வேண்டும்.

**கடகம்**

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**கருணை மனதுடன் பிறருக்கு உதவும் கடக ராசிக்காரர்களே!**

கருணை மனதுடன் செயல்பட்டு மனதில் நிம்மதியும், சமூகத்தில், உயரிய அந்தஸ்தும் பெறுவீர்கள். பணவரவு சராசரி அளவில் கிடைக்கும். உடன் பிறந்தவர் ஆதரவாக நடந்து கொள்வர். கண்காணித்து வழி நடத்துவது நல்லது. எதிரியின் எண்ணங்களை உணர்ந்து விலகுவீர்கள். இல்லறத்துணை குடும்ப நலன் சிறக்க கூடுதல் தியாக உணர்வுடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரம் சார்ந்த வகையில் எதிர்பார்த்த அரசு உதவி பெற அனுகூலம் உண்டு.

**சிம்மம்**

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

**துணிச்சலுடன் செயல்புரிந்து புகழ் பெறும் சிம்ம ராசிக்காரர்களே!**

வாழ்வில் கூடுதல் வளம் பெற, தேவையான நன்மை வந்து சேரும். உறவினர்களிடம், உங் கள் மீதான நன்மதிப்பு அதிகரிக்கும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு நடைமுறை பின்பற்ற வேண் டும். புத்திரர், உங்களிடம் புதிய கருத்துகளை பகிர்ந்து கொள்வார். எதிரியால் உருவாகிற கெடு செயல் பல மிழந்து போகும். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியா பாரத்தில் முன்னேற்றம் பெற, உங்களின் கன உழைப்பும் இஷ்ட தெய்வ அருளும் துணை நிற்கும்.

**கன்னி**

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

**அழகை ஆராதிக்கும் கலை ரசனை மிகுந்த, கன்னி ராசிக்காரர்களே!**

வசீகர வார்த்தைகளும் சம அளவில் கலந்திருக்கும். மனதில் உருவாகிற சஞ்சலங்களை, பழைய நன்மைகளை நினைத்துப் பார்த்து குறைத்துக் கொள்வீர்கள். பூர்வ சொத்தில் வருமானம் பெறுபவர்களுக்கு, அளவான பணவரவு கிடைக்கும். உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவு வகை உண்ண வேண்டாம். இல்லறத்துணை குடும்ப நலன் சிறக்க, அன்பாக நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத் தன்மைகளை கூடுதல் அக்கறையுடன் பாதுகாக்கவும்.

**துலாம்**

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**நியாய தர்மத்தைப் பெரிதென போற்றும் துலாம் ராசிக்காரர்களே!**

பிறரது ஆடம்பர செயல் நடைமுறைகளை பார்த்து, தாமும் அவ்வாறு நடந்து கொள்ள எண் ணம் உருவாகலாம். இதனால் தேவையற்ற பணச்செலவு, குடும்ப உறுப்பினர்களின் அதிருப்தியை எதிர்கொள்ள நேரிடலாம். கவனம் தேவை. வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு அவசியம். புத்திரர் பிடிவாத குணத்துடன் நடந்து, உங்களின் இதமான அணுகுமுறையால், மனதில் மாற்றம் பெறுவர். சீரான ஓய்வு உடல்நலம் பாதுகாக்க உதவும். இல்லறத்துணை ஒற்றுமை குணத்துடன் உதவுவார்.

**விருச்சிகம்**

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**சாதனை நிகழ்த்தும் உணர்வுடன் பணிபுரியும் விருச்சிக ராசிக்காரர்களே!**

வாழ்வில் எதிர்மறையாக உருவான சூழ்நிலைகளைச் சரி செய்வதில் அக்கறை கொள்வீர்கள். அத்தியாவசிய செலவுகளுக்கு மட்டும் முக்கியத்துவம் தருவீர்கள். வீடு, வாகனத்தில் பயன்பாட்டு வசதி சீரான அளவில் கிடைக்கும். உடலில் பணி தொந்தரவு குறையும். இல்லறத் துணை விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து லாப விகிதம் கூடும். பணியாளர்கள் கூடுதல் வேலைவாய்ப்பை மனமுவந்து ஏற்றுக் கொள்வர்.

**தனுசு**

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

**சுறுசுறுப்புடன் செயல்புரிந்து, அதிக நன்மை பெறும் தனுசு ராசிக்காரர்களே!**

உங்களின் சிறிய முயற்சியும், அளப்பரிய நன்மைகளை பெற்றுத் தரும். இடம், சூழ்நிலை உணர்ந்து பிறரிடம் பேசுவீர்கள். சமூகப் பணியில் ஆர்வம் வளரும். மரியாதை, புகழ் தாமாக வரும். புதிய வாகனம் வாங்க நல்யோகம் உண்டு. எதிரியால் உருவாகிற தொந்தரவு விலகும். இல்லறத்துணை உங்களின் நல்ல குணங்களை மனதார வாழ்த்துவர். தொழில், வியாபாரத்தில் தாராள பணச் செலவில், அபிவிருத்தி பணி மேற்கொள்வீர்கள்.

**மகரம்**

**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

**தன்னைப் போல, பிறரையும் நல்வழி நடத்தும், மகர ராசிக்காரர்களே!**

எவரிடமும் அளவுடன் பேசுவது, நேரம், மனஅமைதியை பாதுகாக்கும். தம்பி, தங்கை அதிருப்தி மனப்பாங்குடன் உங்களிடம் நடந்து கொள்வர். தாயின் உடல்நலத்திற்கு, மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். புத்திரரை கண்டிப்பதில், நிதானம் வேண்டும். நிர்ப்பந்த பணக்கடனில் ஒரு பகுதி செலுத்துவீர்கள். இல்லறத்துணையிடம், உறவினர் குடும்ப விவகாரம் பற்றி பேசவேண்டாம். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பினால் பணவரவு சீராகும். இயந்திர தொழிற்சாலை பணியாளர், பாதுகாப்பு முறை தவறாமல் பின்பற்றவும்.

**கும்பம்**

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

**துவங்கும் செயலை, மனப்பூர்வமுடன் நிறைவேற்றும், கும்ப ராசிக்காரர்களே!**

ஆன்மிக நம்பிக்கைகளை பின்பற்றி, கடந்த நாட்களில் பெற்ற நன்மைகளை நினைத்து, பெருமிதம் கொள்வீர்கள். உடன் பிறந்தவர் கூடுதல் அன்பு பாராட்டுவர். வீடு, வாகனத்தில் பயன்பாட்டு வசதி சீராக கிடைக்கும். இல்லறத்துணை கேட்ட பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து, பணவரவை பெற்றுத் தரும். பணியாளர்கள் சிறப்பாக செயல்பட்டு, நிர்வாகத்திடம் நற்பெயர், வெகுமதி பெறுவர்.

**மீனம்**

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**தன்னால் இயன்ற அளவில், பிறருக்கு உதவுகிற மீன ராசிக்காரர்களே!**

திட்டமிட்ட காலத்தில் பணி நிறைவேற்றுவதில், தாமதம் உருவாகலாம். தன்னுடன் பழகு பவர்களின் மனப்பாங்கு உணர்ந்து பேசுவது நல்லது. பணவரவை விட, குடும்பத் தேவை களுக்கான பணச்செலவு அதிகரிக்கும். வாகனத்தில், மிதவேகம் பின்பற்றவும். புத்திரரின் உடல் நலம் சீர்பெற, சிறு அளவில் மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். இல்லறத்துணை குடும்ப நன்மை களை மனதில் கொண்டு, தியாக மனதுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கை அடைய, அதிகம் பணிபுரிவது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு

தொகுப்பு : வரூ

# வாழ்நாள் தடை

பெருமெடுப்பில் 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர், 2010ஆம் ஆண்டு, அதன் அன்றைய தலைவர் லலித் மோடியின் நிதி மோசடியில் தொடங்கி கடந்த வாரம் பேசப்பட்ட இலங்கை வீரா திஸார பெரேராவின் போட்டி நிர்ணயம் வரை குளறுபடிகளுடனேயே பயணிக்கின்றது. குழப்பங்களின் உச்சமாக இந்த வருட ஐ.பி.எல். போட்டிகளின் போது சூதாட்ட புகாரில் சில ஐ.பி.எல். முன்னணி வீரர்களுடன், அணிகளின் நிர்வாகத்தினர் சிலரும் சம்பந்தப்பட்டிருப்பது கண்டறியப்பட்டு அவர்களுக்கு போட்டித்தடைகள், எச்சரிக்கைகள் வழங்கப்பட்டிருந்தன.

இவற்றுள், சென்னை சுப்பர் கிங்ஸ் நிர்வாகிகளில் ஒருவரான குருநாத்தின் கைதும், டோனியின் மனைவி சாக்ஷியின் நெருங்கிய நண்பராகக் கருதப்படும் நடிகர் விண்டூவின் கைதும் முக்கியமானவை. இம்முறை சம்பியன்ஸ் லீக் 20/20 போட்டிகளைப் பார்க்க சாக்ஷி வருவாரோ? எனப் பலரும் எதிர்பார்த்த நிலையில், சென்னை அணி மோதும் போட்டிகளை அவர் வி.ஐ.பி.க்கள் பக்கமாக இருந்து உற்சாகமாகக் கண்டு களித்து வருகின்றார்.

சம்பியன்ஸ் லீக் 2013 போட்டிகள் தொடங்குவதற்கு முன்பதாகப் புதிதாக முளைத்தது மற்றுமொரு சூதாட்டப்புகார். சண் றைசர்ஸ் ஹைதராபாத் அணியின் வீரர்களான திஸரா பெரேரா, ஹனுமா விஹாரி, கரண் சர்மா, ஆஷிட் ரெட்டி ஆகியோரே இவ்வாறு போட்டி நிர்ணயத்திற்கு உட்பட்டதாக டெக்கான் குரோனிக்கல்ஸ் செய்தி வெளியிட்டிருந்தது. 6 கோடி ரூபாவிற்கு இந்தப் போட்டி நிர்ணயம் இடம்பெற்றதாம். ஆனால், திஸார பெரேரா தொடர்பான குற்றச்சாட்டை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஊழல் தடுப்புப் பிரிவு மறுத்துள்ளது. அதேவேளை, ஏனைய வீரர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் உள்ளனவா அல்லது இந்தக் குற்றச்சாட்டு முழுமையாக மறுக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து உறுதியான முடிவுகள் எதனையும் வெளியிடவில்லை.

இந்நிலையில், ஐ.பி.எல். தொடரின் ஆரம்ப கர்த்தாவான லலித் மோடிக்கு நிதி முறைகேடு தொடர்பில் பி.சி.சி.ஐ.யின் மூன்று வருட விசாரணை முடிவில் வாழ்நாள் தடை விதிக்கப்பட்டது. இவர் மீது, பிரிமியர் நிதியை முறைகேடு செய்தது, இன்னொருவர் பெயரில் அணியின் பங்குகளை வாங்கியது, இணையத்தள ஒளிபரப்பு உரிமைகளில் குளறுபடி செய்தது, சோனி நிறுவனத்திடம் இருந்து ரூ. 125 கோடி பணத்தைப் பெற முயற்சித்தது, ஐ.பி.எல்.இற்கு எதிராக இங்கிலாந்து பிராந்திய அணிகளுடன் இணைந்து, போட்டி 20/ 20 தொடர் தொடங்க திட்டமிட்டது. 2010 இல் குறிப்பிட்ட இரண்டு ஒப்பந்தகாரர்களிடம் பெரும் பிளவை ஏற்படுத்த முயற்சித்தது உள்ளிட்ட 8 குற்றங்கள் உறுதிப்படுத்தப்பட்டது.

தடை குறித்து கருத்து தெரிவித்த லலித் மோடி, இவ்வாண்டு இடம்பெற்ற சூதாட்டச் சாச்சைகளைத் திசை திருப்பவே என் மீது தடை விதிக்கப்பட்டுள்ளது. ஐ.பி.எல். தொடரை உருவாக்கிய என்னையே தடை செய்வது சோகமானது. யாரெல்லாம் போட்டி நிர்ணயங்களில் ஈடுபடுகிறார்களோ அவர்களே பி.சி.சி.ஐயை நிர்வாகம் செய்கின்றனர். இதற்கு உறுப்பினர்கள் பாதுகாப்பாக உள்ளது ஏமாற்றம் தான். இறுதியில் நானே ஜெயிப்பேன். நான் எங்கும் ஓடி ஒளிய மாட்டேன் என்றார். ஆனால், தற்போது மோடி இங்கிலாந்தில் தங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





# இழந்த பிரதிநிதித்துவம்

கிரிக்கெட் அரங்கில் அதியுச்ச விறுவிறுப்பான போட்டித் தொடராக விளங்கும் சம்பியன்ஸ் லீக் 20/20 தொடர் இலங்கையணியைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய அணி அல்லது வீரர்கள் இல்லாததால் இலங்கை ரசிகர்கள் மத்தியில் இம்முறை களையிழந்து போயுள்ளது. சண் றைசர்ஸ் அணியில் மட்டும் இலங்கை வீர திஸா பெரேரா விளையாடுகின்றார். மும்பை அணியின் லசித் மலிங்கா, இம்முறை தொடரிலிருந்து ஓய்வை எடுத்துக் கொண்டார். குமார் சங்கக்காரா, ஏற்கனவே கந்துரட்ட மரூன்ஸ் அணியில் விளையாடுவதற்காக சண் றைசர்ஸில் இருந்து விலகிக் கொண்டமை தெரிந்த விடயமே!

இதேவேளை, இம்முறை சம்பியன்ஸ் லீக் போட்டிகளின் தெரிவுப்போட்டிகளில் கலந்து கொண்ட இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய கந்துரட்ட மரூன்ஸ் அணி அனைத்துப் போட்டிகளிலும் தோல்வியடைந்து வெளியேறியமை தான் பரிதாபகரமானது. இவ்வணி, இலங்கைத் தேசிய அணி வீர களான சங்கக்காரா, திரிமன்னே, குலசேகரா, கண்டம்பி, ரன்டீவ், தரங்க, லொக்குவாராய்சி உள்ளடங்கலாக பலமான அணியாகவே களமிறங்கியது. ஆனாலும், அவ்வணி மண் கௌவியமை, இலங்கையின் இளைய வீர களின் திறமைகளை கேள்விக்குறியாக்கியுள்ளது.

தெரிவுப்போட்டிகளில் முதல் போட்டியில், சண் றைசாஸ் அணியிடம் 8 விக்கெட்டுக்களாலும், இரண்டாவது போட்டியில் ஒடாகோ அணியிடம் ஆறு விக்கெட்டுக்களாலும், கடைசிப்போட்டியில் பாகிஸ்தானின் பைசலாபாத் அணியிடம் 10 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் தோல்வியடைந்து தொடரில் இருந்து வெளி யேறியமை துரதிஷ்டமே! இப்போட்டிகளில் இலங்கை வீர கள் துடுப்பாட்டத்தில் பிரகாசித்திருந்தாலும், பந்து வீச்சு மற்றும் களத்தடுப்பில் தடுமாறி இறுதி ஓவ களில் வெற்றியை எதிரணியிடம் தாரை வார்த்தமை குறிப்பிடத்தக்கது.

இதில் இன்னொரு வேடிக்கையான விடயம், இலங்கை மாகாண அணியான உத்துரு யலோஸ் அணியில் விளையாடிய சுழல்பந்து வீச்சாள ரங்கன ஹேரத்தை கந்துரட்ட அணியில் சே த்து விண்ணப்பித்திருந்தார்கள். இந்த தில்லுமுல்லை கண்டறிந்த சம்பியன்ஸ் லீக் ஏற்பாட்டாள கள் ஹேரத்துக்கு தடை விதித்தார்கள். இது தொட பில் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டையா, கந்துரட்ட அணி நிர்வாகத்தையா? அல்லது ஹேரத்தையா குறை சொல்வது எனத் தெரியாமல் திணறுகிறது விமர்சக வட்டாரம். ஆனாலும், இலங்கையின் இவ்வாண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீர விருதை வென்றவரை இவ்வாறு ச ச்சைகளில் சிக்க வைப்பது அழகல்ல. தற்போதுள்ள, உலகின் தலை சிறந்த சுழல்பந்து வீச்சாள களில் ஹேரத் முக்கியமானவ .

யூஏஃபா சம்பியன்ஸ் லீக் போட்டியில் நெதர்லாந்தின் பிராந்திய கழகமான அஜக்ஸ் அணிக்கெதிராக ஹட்ரிக் அடித்ததன் மூலம் , பார் சிலோனா அணியின் நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்ஸி புதிய ஒரு சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

சம்பியன்ஸ் லீக்கின் இந்த பருவகாலத்துக்கான முதல் சுற்று போட்டிகள் கடந்த 17 ஆம் , 18 ஆம் திகதிகளில் நடந்தது. இதில் குழுநிலை ஆட்டம் ஒன்றில் அஜக்ஸ் அணியை எதிர்கொண்ட பார்சிலோனா 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்த போட்டியில் மூன்று கோல்களை அடித்து ஹட்ரிக் சாதனை புரிந்த லியோனல் மெஸ்ஸி , சம்பியன்ஸ் லீக் தொடரில் அதிக ஹட்ரிக் கோல்களை (4) அடித்தவர் என்ற புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார். அத்தோடு இதுவரை சம்பியன்ஸ் லீக் ஆட்டங்களில் 62 கோல்களை அடித்திருக்கும் லியோனல் மெஸ்ஸி, சம்பியன்ஸ்லீக் ஆட்டங்களில் அதிக கோல்களை (71) அடித்தவர் என்ற ஸ்பெயினின் ராவுலின் சாதனையை முறியடிக்க இன்னமும் 9 கோல்களே தேவைப்படும் நிலையில் , இந்த பருவகால சம்பியன்ஸ்லீக் தொடரின் போதே அந்த சாதனையை நிகழ்த்துவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

# மெஸ்ஸி சாதனை



26 வயதேயான லியோனல் மெஸ்ஸி இதுவரை 126க்கும் அதிகமான தனிநபர் சாதனைகளுக்கு சொந்தக்காரராக இருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ருதி - அமலா மோதல்





அமலா பால் வாய்ப்பை ஸ்ருதி தட்டிபறித்ததைபோல் இப்போது ஸ்ருதி வாய்ப்பை அமலா தட்டி பறிக்க முனைவதால் இருவருக்குமிடையே மோதல் மூண்டுள்ளது.

ரஜினி மகள் ஐஸ்வர்யா இயக்கத்தில் வெளிவந்த படம் 3. இதில் ஹீரோயினாக நடிக்க முதலில் அமலா பாலிடம் பேச்சுவார்த்தை நடந்தது. அவரும் நடிக்க சம்மதித்தார். சில நாட்களில் அமலாவை நீக்கிவிட்டு கமல் மகள் ஸ்ருதிஹாசனுக்கு 3 படத்தில் நடிக்க வாய்ப்பு அளித்தார் ஐஸ்வர்யா.3 படத்தில் நடிக்க நான் தயார் என்று அப்போது தனுஷுக்கு ஸ்ருதி தூது விட்டதே இதற்கு காரணம். இதனால் அமலா ஏமாற்றம் அடைந் தார். எதற்காக தன்னை நீக்கினார்கள் என்று காரணம் தெரியவில்லை என அப்போது அவர் கூறினார். 3 படத்தில் தன்னை நீக்கியதற்கு பதிலாக ஹிந்தியில் உருவாகும் ரமணா படத்தில் ஸ்ருதியின் வாய்ப்பை அமலா பறிக்க முயற்சி செய்து வருவதாகக் கூறப்படுகிறது. இதனால் இருவருக்குமிடையே கடும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

# பணத்துக்காகக் கவர்ச்சியா?



பாடல் காட்சியில் படு கவர்ச்சியாக ஜீவாவுடன் நெருங்கி நடித்திருக்கிறார் ஆண்ட்ரியா. 'பச்சைக்கிளி முத்துச்சரம்', ஆயிரத்தில் ஒருவன்', விஸ்வரூபம்' உள்ளிட்ட படங்களில் நடித்தவர் ஆண்ட்ரியா. ஆனால் அவர் எந்த படத்திலும் கவர்ச்சியாக நடித்ததில்லை.ஆனால் முதல்முறையாக ஒரு பாடலில் படு கவர்ச்சியாகவும் ஜீவாவுடன் நெருங்கியும் நடித்திருக்கிறார். 'என்றென்றும் புன்னகை' படத்துக் காகவே இந்த பாடல் காட்சியில் ஆண்ட்ரியா நடித்துள்ளார். படத்தில் கதாநாயகி த்ரிஷாதான். இரண்டாவது நாயகியாக வருகிறார் ஆண்ட்ரியா.ஆனால் படத்தில் இடம்பெறும் ஒரு பாடல் காட்சி மூலம் த்ரிஷாவை ஆண்ட்ரியா மிஞ்சிவிட்டார் என படக் குழுவினர் பேசிக்கொள்கிறார்கள். ஆண்ட்ரியா மழையில் நனைந்தபடி கிளு கிளுப்பாக ஆடிப்பாடும் காட்சியாக இது உருவாகியுள்ளது. ஹரிஸ் ஜெயராஜ் இசையமைத்திருக்கிறார். எல்லாம் பணம் செய்யும் வேலை.



# மீண்டும் காணோம்!



நடிகை அஞ்சலி ஜேர்மனியில் தலைமறைவாக இருப்பதாக கூறப்படுகிறது.அண்மையில் நடிகை அஞ்சலி திடீர் என்று தலைமறைவாகிவிட்டு பின்னர் அவராகவே வந்து பொலிஸ் நிலையத்தில் முன்னிலையானார்.

அதன் பிறகு அவரை தமிழ் படங்களில் பார்க்க முடியவில்லை. தெலுங்கு படங்களில் நடித்து வருவதாகக் கூறப்பட்டது. ஆனால் அப்படி நடிப்பதையும் உறுதிப்படுத்த முடியவில்லையாம்.அஞ்சலி இந்த நிலையில் அஞ்சலிக்கு திருமணமாகிவிட்டது என்று தகவல்கள் வெளியாகின. ஆனால் அதை அஞ்சலி மறுத்தார்.

இயக்குனர் களஞ்சியம் தொடர்ந்த அவதூறு வழக்கில் நீதிமன்றுக்கு வராததால் அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டு பின்னர் அது ரத்து செய்யப்பட்டது.அஞ்சலியை தங்கள் படங்களில் நடிக்க வைக்க தமிழ் இயக்குநர்கள் விரும்புகிறார்களாம். ஆனால் அவரைத் தொடர்பு கொள்ள முடியவில்லையாம்.

இந்த நிலையில் அவர் ஜேர்மனியில் தலைமறைவாக இருப்பதாக ஒரு தகவல் பரவி வருகிறது.

சந்தானம், விதார்த், அபிநயா ஆகியோரும் நடிக்கிறார்கள். தமன் இசையமைக்கிறார். படத்தை பொங்கலுக்கு வெளியிடப் போவதாக அறிவித்துள்ளார்கள்.

இந்த படத்தில் விதார்த்துக்கு ஜோடியாக அபிநயா நடிக்கிறாராம். படத்தில் ஒரு சில காட்சிகள் மட்டுமே நடித்தாலும், தன்னுடைய சிறப்பான நடிப்பால் அனைவரையும் கவர்கிறாம் அபிநயா. இவரின் நடிப்பை பார்த்து அஜித் அசந்து போனாராம்.


இதனால், இயக்குநரை அழைத்து அபிநயா சம்பந்தப்பட்ட காட்சிகளை அதிகப்படுத்த சொல்லி இருக்கிறாராம். மேலும் படப்பிடிப்பு தளத்தில் அபிநயாவுக்கு ஆதரவாக அவருடன் நீண்ட நேரத்தை செலவிடுகிறாராம் அஜித்.

# நடிகையின் குமுறல்



அமீரின் 'பருத்தி வீரன்' படத்தில் முத்தழகியாகப் பிரபலமான ப்ரியாமணி பின்னர் தமிழ், தெலுங்கு என இரு மொழிகளிலும் முன்னணி நடிகையாக வலம் வந்தார். ஆயினும் தமிழில் சரியான படங் கள் அமையாததால், ஆந்திராவிலேயே வசிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டார். தெலுங்கு படவுலகில் கவர்ச்சியாக நடித்து காட்ட வேண்டியதை காட்டிய பிறகும் வாய்ப்புகள் வராததால் ஆந்திராவிலும் ஈ அடிக்கிற வேலை வந்துவிடுமோ என பயந்து தானாகவே முன் வந்து சினிமாவுக்கு முழுக்கு போடுவதாக நெருங்கிய நண்பர்களிடம் சொல்லியிருப்பதாக தகவல் கசிகின்றன.

''இன்னும் 2 வருடங்களில் என் திருமணம் நடக்கும் . ஆனால் நிச்சயமாக இது காதல் கல்யாணமாகவே இருக்கும். முன்பின் தெரியாத ஒருவரைத் திருமணம் செய்து கொள்ளமாட்டேன், இருவரும் ஒருவருக்கொருவர் நன்றாக புரிந்துகொண்ட பிறகு தான் என்னுடைய திருமணம் நடைபெறும்'' என்கிறாராம் ப்ரியாமணி.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கிளு கிளு தரிசனம்

சினிமா விருது வழங்கும் விழா என்பது கிட்டத்தட்ட நட்சத்திரங்களின் 'சொகுசுச் சுற்றுலா' மாதிரி ஆகிவிட்டது. குறிப்பாக இரகசியமாகக் காதலிக்கும் நட்சத்திர ஜோடிகளுக்கு மிகவும் வசதியாக இந்த நிகழ்வு அமைந்துவிட்டன. திரிஷாவுக்கும், ராணாவுக்கும் காதல் என்று வெளிவரும் செய்திகளை கிசுகிசு என்று கூறுபவர்கள், டுபாய் விழாவில் இருவரும் அடித்த கூத்தை பார்த்தால் அசந்து போவார்கள் என்று சொல்கிறார்கள் விழாவுக்குப் போய் வந்தவர்கள். த்ரிஷாவும் ராணாவும் ஏதோ தேனிலவுக்கு வந்த புதுமண ஜோடி மாதிரிதான் பின்னிக் கிடந்தார்களாம் டுபாயில்.எப்போதும் கைகளை நெருக்கமாகக் கோர்த்துக் கொண்டும், அடிக்கடி முத்தமிட்டுக் கொண்டும் சினிமாவில் கூட பார்க்க முடியாத அளவுக்கு ஒரே கிளுகிளு தரிசனமாம். விருந்தில் சுற்றி இருப்பவர்களைப் பற்றியெல்லாம் கவலையே படாமல் ஆடித் தீர்த்தார்களாம்.







## அஜித்தின் ஆதரவு !

'ஆரம்பம்' படத்தை தொடர்ந்து அஜித் சிறுத்தை சிவா இயக்கத்தில் 'வீரம்' என்ற படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தில் அவருக்கு ஜோடியாகத் தமன்னா நடிக்கிறார். இவர்களுடன்

தமிழில் பிரபல நடிகையான காஜல் தமிழில் கார்த்தி, விஜய் போன்ற முன்னணி நடிகர்களுடன் நடித்து வருகிறார். தற்போது விஜய்யுடன் இணைந்து ஜில்லா படத்தில் நடித்து வருகிறார். ஆனால் இவரை நீச்சல் உடையில் நடிக்குமாறு இயக்குநர்கள் கேட்டால் உடனடியாகவே அதற்கு மறுப்புத் தெரிவித்துவிடுகிறார்.

இது குறித்து அவர் கூறுகையில், ''எனக்கு இந்திய பெண்ணின் முக அம்சம்தான் அதிகம். அதற்கு ஏற்ற கதாபாத்திரங்களைதான் இதுவரை ஏற்று நடித்து வருகிறேன். ஆனாலும் ஒரே பாணியிலான வேடங்களில் நடிப்பதில்லை. நீச்சல் உடை அணிந்து நடிப்பது எனது உணர்வுகளுக்கு பொருந்தி வராது என்பதால் எனக்கென்று ஒரு எல்லை வகுத்திருக்கிறேன். மேலும் எனது குடும்பத்தினருடன் அமர்ந்து பார்க்க முடியாத படியான எந்தவொரு காட்சியிலும் நடிக்க மாட்டேன்'' என்று திட்டவட்டமாக கூறுகிறார் காஜல்.

## நீச்சல் உடைக்கு மறுப்பு




சுடர் ஒளி / 02, ஒக்ரோபர் - 08 ஒக்ரோபர் 2013
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஜய்யை கழற்றிய அமலா பால்

சினிமா நூற்றாண்டு விழாவில் இயக்குநர் விஜய்யை கழற்றிவிட்டு தத்தளிக்க விட்டுள்ளார் அமலாபால்.

இவர்கள் இருவரும் காதலிக்கவில்லை என்று வெளியில் சொல்லிக்கொண்டாலும், வழக்கம்போலவே சினிமா நூற்றாண்டு தொடக்க விழாவுக்கு இயக்குனர் ஏ.எல். விஜய்யும், அமலா பாலும் ஒன்றாகவே வந்துள்ளனர்.

சேலை, கொண்டை, கொண்டையைச் சுற்றிலும் மல்லிகைப்பூ என அச்சுஅசல் தமிழ்ப் பெண்ணாக வந்திருந்தார் அமலா பால்.

இருவரும் சிரித்துப் பேசியபடியே அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு முன்வரிசையில் இருந்த சில இருக்கைகள் காலியானதும், அங்கு வந்து அமர்ந்தார் அனுஷ்கா.

உடனேயே விஜய்யைக் கழற்றிவிட்டு, அனுஷ்காவுடன் போய் அமர்ந்து கொண்டாராம் அமலாபால்.

அவர்களுக்குப் பின்னால் பேசக்கூட ஆள் இல்லாமல் நீண்ட நேரம் அமர்ந்திருந்தார் விஜய். அமலா பால் எங்கோ கிளம்பிச் செல்ல, அந்த இடத்தில் அமர்ந்து அனுஷ்காவுடன் விஜய் பேசினார் .

சிறிது நேரத்தில் அமலா பால் திரும்பி வர, அந்த இடத்திலிருந்து கிளம்பி மறுபடியும் அவர்களுக்குப் பின்னிருக்கையில் வந்து அமர்ந்து கொண்டாராம்.





வீசா இல்லாமல் படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு வரும் எவருமே அங்கு குடியமர முடியாது

- வீசா இன்றி, படகுகள் மூலம் வரும் புகலிடக் கோரிக்கையாளர்கள், பப்புவா நியூகினி அல்லது நௌரு போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.
- நீங்கள் ஒரு அகதியாக அடையாளம் காணப்பட்டாலும், இப்போது நீங்கள் பப்புவா நியூகினி அல்லது நௌரு போன்ற நாடுகளிலேயே குடியமர்த்தப்படுவீர்கள்.
- அகதிகள் அல்லாத அனைத்துப் புகலிடம் கோருவோரும் மீண்டும் இலங்கைக்கே அனுப்பப்படுவர்.

அவுஸ்திரேலியாவுக்கு படகில் போக வேண்டாம்

Australian Government

அவுஸ்திரேலிய அரசாங்கம் விடுக்கும் செய்தி

மேலதிக விபரங்களுக்கு www.australia.gov.au/novisa




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் நாடக அரங்கத்தில் லிடியா அடிடுன்ஜி



**க**லைகளில் கவிதை ,கதை போன்ற இலக்கியங்கள் எவ்வளவு தூரம் சிறந்ததோ அதேயளவிற்கு நாடகங்களின் தாக்கமும் அதிகம். உலகில் அலசப்படவேண்டிய வெளியே மக்களிற்குச் சொல்லப்பட வேண்டிய செய்திகளை சிறந்தமுறையில் அவர்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு நாடகங்கள் அதிகம் உதவிபுரிகின்றன. இவை படித்த மட்டத்தினருக்கு மட்டுமன்றி பாமரர்களுக்கும் கூட பயனள்ளவையாகும். அத்தகைய துறையில் பல சவால்களும் காணப்பட்டாலும் சில பெண் எழுத்தாளர்களும் காணப்படவே செய்கின்றனர்.

லிடியா அடிடுன்ஜி என்கின்ற முப்பத்துமூன்று வயதான பெண் நாடக எழுத்தாளர் அந்த வரிசையில் குறிப்பிடத்தக்க ஒருவராக இருக்கிறார். 'ஸ்டாக்போர்ட்' என்கின்ற இடத்தில் பிறந்த இவர் நைஜீரியாவில் வளர்ந்தார். பின்னர் பிரிட்டனிற்குச் சென்று கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சீன மொழியில் இளநிலைப் பட்டம் பெற்றார். பத்திரிகைத்துறையில் இவருக்கிருந்த ஆர்வமும் சமூகத்தில் இவரிற்கிருந்த அக்கறையும் ஊடகத்துறையில் இவரை இணையவைத்தது. குறிப்பாக 'பைன்னான்ஸியல் டைம்ஸ்' என்ற நாளேட்டில் ஆறு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். பத்திரிகைத்துறையில் இருக்கின்ற போது பெற்ற அனுபவங்கள் கொண்டு கலை இலக்கிய உலகில் நுழைந்த லிடியா - நாடகத்துறையில் கவனத்தைச் செலுத்தினார். மக்களிற்கு அவசியம் சொல்லப்பட வேண்டிய செய்திகளையும், வெளியே கொண்டுவரவேண்டிய பல விவகாரங்களையும் நாடக மாக்கினார்.

'பிக்ஸர்' என்கின்ற நாடகமே இவரது முதல் நாடகப்படைப்பாகும். நைஜீரியா பிரஜை ஒருவர் உள்நாட்டிலும் சரி வெளி நாட்டுக்காரர்களாலும் சரி எத்தகைய தாக்கத்திற்கு உள்ளாகுகின்றார் என்பதை நாடகம் சொல்கின்றது. தொடர்ந்து பெண் எம்.பி ஒருவரை மையப்படுத்திய நாடகமும் குறிப்பிடத்தக்கதாகும். இன்னும் இரண்டு நாடகங்களை எழுதிக்கொண்டிருக்கும் இவர், தான் ஒரு நாடோடி என்றே கூறிக்கொள்கிறார். பெண்களிற்கு எல்லாத்துறைகளிலும் வரையறைகள் இருந்தாலும் அதையெல்லாம் தாண்டிச் செயற்பட வேண்டியது அவர்களின் கடைமை என்றும் சமூகத்தை நல்ல திசையில் கொண்டு செல்லும் பொறுப்பு பெண்களிற்கும் இருப்பதாகவும் கூறும் லிடியா தற்போது முழுநேர படைப்பிலக்கிய எழுத்தாளராகி விட்ட போதிலும் இதழியலிலும் தன் பங்களிப்பை வழங்கிச் சமூகத்திற்காகச் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## புதுயுகத்தைத் தேடி......

மகளிர் பக்கம்

தொகுப்பு: ஸ்ருதி

# கனியிருக்க காய் கவர வேண்டுமா?

**மா**லை நேரம் அலுவலகம் நிறைவடைந்து வீடு செல்வதற்காக என் உந்துருளியை எடுத்துக்கொண்டு வெளியே வந்தேன். நேரத்தோடேயே வீடு சென்றுவிட வேண்டும் என்ற எண்ணம் எனக்கு. வீட்டில் அம்மா வேறு தனியாக இருப்பதால் அவரிற்கு உதவிக்கு வேளைக்கே சென்றுவிடுவது எனது வழக்கம். வீதியிலோ அல்லது வேறு இடங்களிலோ நேரத்தை வீணடிப்பதற்கு நான் விரும்புவதில்லை. அது பிழையோ சரியோ என்றும் நான் வாதிடுவதில்லை. என்னுடைய உந்துருளி தட்டாதெரு சந்தியைக் கடக்கின்ற தருணத்தில் என்ன நினைத்ததோ நின்றுவிட்டது. பின்னர் எவ்வளவு முயன்றும் அது நகர்வதற்கு சம்மதிக்கவில்லை. அதனால் அருகிலிருந்த என்னுடைய கல்லூரித்தோழி ஒருத்தியின் வீட்டில் விட்டு விட்டுப் பேருந்தில் போகலாம் என்று எண்ணி அவளுடைய வீட்டை நோக்கி நகர்ந்தேன்.

வாசலில் பாதுகாப்பிற்காக நாய் நின்றாலும் அது எனக்குப் பழக்கப் பட்டுப் போனதால் தன்னுடைய எதிர்ப்பினைக் காட்டவில்லை. வீட்டின் வாசற்கதவிற்கு வெளியே குழந்தைகள் புத்தகங்களோடு படித்துக் கொண்டிருந்தார்கள். உந்துருளியை அருகிற்கொண்டு சென்ற பின்னர் தான் அவர்கள் புத்தகங்களில் கவனத்தைச் செலுத்தாமல் தமக்குள் முரண்பட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது. சரியென்று உந்துருளியை விட்டுவிட்டு கிட்டப் போனால், வீட்டினுள்ளும் ஒரே சத்தமாக இருந்தது. அது தொடர்பாகத் தான் குழந்தைகள் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். பெரியவன் அம்மாவிற்காகவும் சிறியவன் அப்பாவிற்காகவும் பேசிக்கொண்டிருந்தனர். எனது நண்பியும் அவள் கணவனும் உரத்த தொனியில் பேசிக்கொண்டிருந்தார்கள். பேசிக்கொண்டு என்பதை விட கத்திக் கொண்டு இருந்தார்கள். ஒருவர் சொல்வதை மற்றவர் கேட்கின்ற நிலையில் அவர்களிருவருமே இல்லை. யாரிடம் பிழை. யாரிடம் சரி என்பதை விட இருவருமே புரிந்துணர்வின்றி பேசுகிறார்கள் என்பது மட்டும் புரிந்தது. உள்ளே நடைபெற்ற சண்டையில் வெளியே இருந்த குழந்தைகள் பற்றி எந்த அக்கறையும் இல்லை என்பதும் புரிந்தது.

வீடுகளில் கணவன் மனைவிக் கிடையில் முரண்பாடுகள் வருவது வழக்கமானது தான். ஆனால் அந்த முரண்பாடுகள் பெரிய சண்டைகளாக மாறி குழந்தைகளின் மனவளர்ச்சியை பாதிக்கின்ற விடயமாக மாறிவிடுகின்ற நிலைமைகளை ஏற்படுத்தாதவர்களாகப் பெற்றோர்கள் இருக்க வேண்டும். உங்களின் சத்தமும் சண்டையும் குழந்தைகள் மனவளர்ச்சியைப் பாதிப்பதோடு அவர்களிற்கு உங்களிடம் பயத்தையும் ஏற்படுத்தக்கூடும். இதனால் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவும் மாறிப் போகலாம். நீங்கள் ஆத்திரத்தில் பயன்படுத்துகின்ற சொற்களை உங்களது குழந்தைகளும் பாடசாலைகளில் பயன் படுத்த முயற்சிக்கலாம். இலகுவாக இந்நிலைக்கு உங்கள் குழந்தைகள் ஆட்பட்டுப்போகலாம். இதனால் அவர்களது குழந்தைப் பருவம் மற்றும் சாதனைவாய்ப்புக்கள் என்பனவும் கூட கைநழுவிப் போகக்கூடும். உங்கள் குழந்தைகளின் வாழ்வை உங்களது செயல்களே பாதிப்பதென்பது எவ்வளவு தூரம் நியாயமானது..? கொஞ்சம் சிந்தியுங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவலங்களுடன் நீண்ட கடற்பயணம்

■ ஜெகன்

> பிள்ளைகள் இருவரும் பெற்றோரைப் பிரிய மனமின்றிப் புறப்படும் வேளையில் அழுதபடி கட்டித்தழுவி விடை பெற்றுக் கொண்டனர்.

வியட்நாம் நாட்டில் வியட்நாமியப் படைகளுக்கும், கம்யூனிசப் புரட்சிப் படைகளுக்குமிடையில் போர் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதி. எங்கும் கலக்கம், அமைதியின்மை, விமானக் குண்டு வீச்சுக்கள், அவலச் சாவுகள், பஞ்சம், பசி, பட்டினி. அவலங்களால் நாடு அலங்கோலப் பட்டுக் கொண்டிருந்தது.

பல்லாயிரக் கணக்கானோர் உயிருக்கு அஞ்சித் தம்மிடமுள்ளவற்றை விற்றுப் பணத்தைத் தரகர்களுக்குச் செலுத்தி அவர்கள் மூலமாக இயந்திரப் படகுகளில் அயல் நாடுகளுக்குக் களவாகத் தப்பியோடித் தஞ்சமடைந்து கொண்டிருந்தனர்.

இந்நிலையில், வியட்நாம் மெக்கோஸ் குடல்ரா எனும் பகுதியில் வாழ்ந்து வந்த குடும்பங்களில் ஒன்றுதான் கொஷிமினின் குடும்பம் விளங்கியது. அவனது பெற்றோர் விவசாயிகள். அவர்களுக்கு 17 வயதான மூத்தவன் மிஸ் மற்றும் 15 வயதான கொஷிமினும் ஆக இரண்டே இரண்டு ஆண்பிள்ளைகள் மட்டுமே இருந்தனர்.

போர் மென்மேலும் உச்ச நிலையை எட்டிக் கொண்டிருந்தது. 18வயதுக்கு 46 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்கள் அனைவரும் கட்டாய இராணுவ சேவைக்காகப் பிடித்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தனர்.

அப்பகுதி முழுவதும் பகலில் தென் வியட்நாமிய படையினரின் வசம் இருக்கும். ஆனால் இரவாகியதும் ஏதோ ஒரு விதத்தில் புரட்சிப் படையினர் வீடுகளினுள் புகுந்து துப்பாக்கி முனையில் நெல்மூடைகள், உணவுத் தானியங்கள் மற்றும் நகைகள், பணம் போன்றவற்றை மிரட்டிப் பறித்துச் செல்வது வழக்கமாகிவிட்டது.

போரினால் விவசாயமும் பாதிக்கப்பட்டு விட்டது. மூத்தவனான மிஸ்கின் இன் னும் ஓரிரண்டு மாதங்களில் 18 வயதை அடையும் நிலையில் இருந்ததால் அவனை நிச்சயமாகக் கட்டாய இராணுவ சேவைக்காகப் பிடித்துச் சென்றுவிடுவார்கள். இதனை நன்குணர்ந்த மிஸ்கினின் பெற்றோர் தம்மிடமிருந்த தங்க நகைகளையும் விற்று அத்துடன் அவர்கள் வசமிருந்த சேமிப்புப் பணத்தையும் ஒரு தரகருக்குக் கொடுத்து அவரின் மூலமாகத் தமது பிள்ளைகளான மிஸ் மற்றும் கொஷிமினையும் களவாக நாட்டை விட்டு எங்கேயாவது பிறநாட்டுக்குக் கொண்டு சென்று விடுவதற்குரிய ஒழுங்குகளைச் செய்து முடித்தனர்.

சிறுவனான கொஷிமினுக்குப் பெற்றோரை விட்டுப் பிரிய அறவே மனமில்லை. ஆயினும் பெற்றோரின் வற்புறுத்தலின் நிமித்தம் புறப்படவேண்டியதாயிற்று. அவர்கள் இருவருக்குமுரிய உடைகள், உணவு, குடிநீர் என்பன ஒழுங்குபடுத்தி வைக்கப்பட்டன. அவர்களின் கைச் செலவுக்கான பணமும் வழங்கப்பட்டது.

அவர்கள் எங்கேயாவது ஒரு நாட்டினை அடைந்ததும் அவுஸ்திரேலியாவில் ஏற்கனவே சென்று அங்கு வசிக்கும் அவர்களது சிறியதந்தையாருடன் தொடர்பு கொள்ளும்படி அவரது அவுஸ்திரேலிய முகவரியையும் பெற்றோர் மூத்தவன் மிஸ்கிடம் கொடுத்திருந்தனர்.

பிள்ளைகள் இருவரும் பெற்றோரைப் பிரிய மனமின்றிப் புறப்படும் வேளையில் அழுதபடி கட்டித்தழுவி விடை பெற்றுக் கொண்டனர். படையினர் எவரின் கண்ணிலும் படாமல் ரகசியமாகச் செல்ல வேண்டுமென்பதால் மாலை வரை காத்திருந்தனர்.

இரவு 7 மணியாகியது. உறவினர் ஒருவர் அவரது மோட்டார் சைக்கிளில் சகோதரர்கள் இருவரையும் ஏற்றிக்கொண்டு சென்று காட்டுப் பகுதியூடாகப் பாயும் ஆற்றங்கரையொன்றில் இறக்கி விட்டார். அங்கு, ஆற்று நீரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிறிய வள்ளம் ஒன்றில் மிஸ்கும், கொஷி மினும் ஏறித் துடுப்பினால் வள்ளத்தை வலித்துச் செலுத்தத் தொடங்கினார்கள்.

ஆற்றில் வள்ளத்தின் பயணம் சுமார் ஐந்து மணித்தியாலங்கள் வரையில் எடுத்தது. ஒருவாறு அதிகாலை 3 மணியளவில் ஆற்றின் கழிமுகத்தை அடைந்துவிட்டனர் சகோதரர்கள் இருவரும். அங்கே 43 அடி நீளமும் 10 அடி அகலமுடைய ஓர் இயந்திர விசைப் படகு அவர்களுக்காகக் காத்திருந்தது. அவர்கள் அதில் ஏற்றப்பட்டதும் பயணம் தொடங்கிற்று. அப்பொழுது நேரம் அதிகாலை 3.30.

75 பேர் மட்டுமே செல்லக்கூடிய அப்படகில் 50 ஆண்கள் 30 பெண்கள் மற்றும் 30 சிறுவர்கள் என மொத்தத்தில் 110 பேர் அளவுக்கு மிஞ்சிய நிலையில் ஏற்றப்பட்டிருந்தனர். எல்லோரும் எதுவிதத்திலும் எங்கேயாவது தப்பிச் சென்றுவிடவேண்டும் என்ற ஒரே இலட்சியத்துடன் நெருக்கியடித்துக்கொண்டு படகில் இருந்தனர்.

ஒருவாறு, வியட்நாமியக் கடலெல்லையைத்தாண்டி தென் சீனக் கடற்பிரதேசத்திற்குள் படகு நுழைந்துவிட்டது. இனிமேல் வியட்நாம் படையினரால் பயம் எதுவும் கிடையாது. அப்பொழுதுதான் அனைவரின் முகத்திலும் சற்றுப் பெருமூச்சுடனான நிம்மதி தெரிந்தது. அப்பொழுது காலை 7 மணி.

முதல்நாள் கடலில் புயல் வீசத் தொடங்கியது. படகில் பயணித்தவர்களுக்குக் கடற்பயணத்தில் முன் அனுபவம் எதுவும் இன்மையால் அனைவரும் கடற் குமட்டல் கோளாறுக்கு ஆளாகி அவதியுற்றனர். பிற்பகலில் புயலின் வேகம் சற்றுத் தணிந்தது. ஆனால் புயலின் சீற்றத்துக்கு முகங்கொடுக்க இயலாது தள்ளாடிய படகில் இருந்து கடலினுள் வீசப்பட்ட படகின் கப்டனை இழக்க வேண்டி நேரிட்டது. அனைவரும் திகைப்பில் ஆழ்ந்தவிட்டனர். துடுப்பு இல்லாத படகு போல் கப்டன் இல்லாத விசைப்படகினைத் திசைதெரியாக் கடலில் எங்ஙனம் செலுத்துவது?

(பயணம் தொடரும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளண்யன்

# இருளின் கதவைத் திறந்தவன்

20



தன் வழமையான வேலைகளை முடித்து விட்டு ஒருநாள் பின்னிரவில் கணினி முன்னால் அமர்ந்தான் யூலியன். சாரா போலினின் தனிப்பட்ட– யாகூ தளத்தினைக் கொண்ட – மின்னஞ்சலைத் திறப்பதற்கு முயன் றான்.

அலாஸ்கா மாநிலத்தின் அழகுப் புயல் யாரென்று கேட்டால் அங்குள்ள சின்னக் குழந்தை கூடச் சட்டென சாரா போலின் என்று சொல்லிவிடும். அந்தளவுக்கு தன் அழகாலும் ஆளுமையாலும் அலாஸ்கா மாநிலத்தையே கட்டிப்போட்டவர் சாரா போலின். அலாஸ்காவின் மாநில அழகிப் போட்டியில் மூன்றாவதாக வந்தாலும் தொடர்ந்து சும்மாயிருக்காது, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்று எல்லோராலும் அறியப்பட்ட பெண்ணாக அவர் மாறினார். நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதில் சாரா கைக்கொண்ட தனித்துவம் அவரை மற்ற நிகழ்ச்சித்தொகுப்பாளர்களிட்மிருந்து வித்தியாசப்படுத்தியது. சாராவுக்கென்றெ தனியான ரசிகர்கள் உருவாகினர். இதனை முதலீடாக வைத்து சாரா தீவிர அரசியலிலும் குதித்ததால் அவரது



எப்படி இருந்தவர்..... இப்படியாகிவிட்டார்!

அழகு இன்னும் பிரசித்தமானது. சாராவுடைய அரசியல் வெற்றிக்கும் அவரது அழகு ஒரு 'பிளஸ் பொயிண்டாக' மாறியிருந்தது. (பெண்களின் அழகில் மயங்கி வாயைக் கூட மூடமறந்து 'ஜொள்ளு' விடுபவர்கள் எல்லா நாடுகளிலும் இருக்கத்தான் செய்கிறார்கள்)

பார்ப்போரை அசரடிக்கும் அழகும், தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளினியாக இருந்த அனுபவமும் கைகொடுக்க அமெரிக்க அரசியலில் சாராவின் கொடி உயரப்பறக்கத் தொடங்கிற்று. இதனால் உள்ளூராட்சி அமைப்புப் பிரதிநிதியாக இருந்தவர் வெகு விரைவிலேயே அலாஸ்கா மாநிலத்துக்கே கட்டளையிடும் மகாராணியாக - ஆளுநராக- மாறினார். அதன் பின்னர் கடந்த முறை குடியரசுக் கட்சியின் சார்பில் துணை ஜனாதிபதி வேட்பாளராகவும் நிறுத்தப்பட்டார். அதில் சாரா தோல்வியுற்றாலும் அமெரிக்காவின் ஆட்சிக்கட்டிலை என்றோ ஒரு நாள் அவர் அலங்கரிப்பார் என்றே ஆருடம் கூறப்படுகின்றது.

யூலியன் தன்னுடைய அடுத்த குறியாக சாராவைத் தேர்ந்தெடுத்தமைக்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று அமெரிக்காவின் அதிசக்தி வாய்ந்த நபரொருவருடன் மோதினால் என்னென்ன எதிர்நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும் என்பதை அறிந்து கொள்ளல், பிரபலமான ஒருவருடன் மோதுவதன் மூலம் விக்கிலீக்ஸ் தளத்துக்கான பார்வையாளர் எல்லையைப் பரவலாக்குதல் என்பனவே அந்தக் காரணங்கள்.

சாரா மீதான யூலியனின் தாக்குதல் அவனது முன்னைய நடவடிக்கைகளைப் போல அதிக சிரமமேதும் கொடுக்காமல் கை சொடுக்கும் நேரத்தில் நிகழ்ந்து முடிந்தது.

தன் வழமையான வேலைகளை முடித்து விட்டு ஒருநாள் பின்னிரவில் கணினி முன்னால் அமர்ந்தான் யூலியன். சாரா போலினின் தனிப்பட்ட- யாகூ தளத்தினைக் கொண்ட -மின்னஞ்சலைத் திறப்பதற்கு முயன்றான். கடவுச்சொல் (பாஸ் வேர்ட்) தவறென யாகூ தளத்திலிருந்து பதில் வந்தது. யூலியன் சளைக்கவில்லை. தன்னுடைய அடுத்த அஸ்திரத்தை எய்தான். தான் கடவுச்சொல்லை மறந்துவிட்டதாகவும் அதை ஞாபகமூட்டக் கூடிய இரகசியக்கேள்விகளைக் கேட்குமாறும் யூலியன் பதில் கொடுத்தான். அதன் பின்னர் நடக்கப் போகும் விபரீதம் புரியாமலே தன்னுடைய நிகழ்ச்சி நிரலின்படி ஏற்கனவே சாரா போலின் பதிவு செய்திருந்த இரகசியக் கேள்விக்கொத்தை அப்பாவித்தனமாக யூலியனை நோக்கி வீசி எறிந்தது யாகூ மின்னஞ்சல்.

உங்கள் பிறந்த திகதி என்ன?'

உங்கள் வீட்டு முகவரியின் அஞ்சலக அடையாள எண் என்ன?'

நீங்கள் உயர்தரம் கற்றபோது உங்களுடன் இணைந்து கல்வி கற்றவர்களில் உங்களின் பிரியத்துக்குரியவர் யார்?'

இவையே யாகூவால் வினவப்பட்ட வினாக்கள்.

அலாஸ்காவின் அழகிய அரசியல்வாதியான சாரா 11-02-1964 இல் பிறந்தவர் என்பதும், தன்னுடன் உயர் கல்லூரியில் கற்றவரையே- பிரியத்துக்குரியவரையே- மணம் முடித்தார் என்பதும், அவரது வீட்டு முகவரியும் அங்குள்ள சாதாரண மக்களுக்கே அத்துப்படியான விடயம். அவ்வாறிருக்கும் போது அந்தத் தகவல்கள் யூலியனுக்கு மட்டும் தெரியாமல் இருக்குமா என்ன?

யாகூ கேட்ட கேள்விகளுக்கெல்லாம் கெட்டிகார மாணவன் போல 'டக்கு டக்' கென்று பதில்களை வழங்க சாராவின் மின்னஞ்சல் கதவு யூலியனால் திறக்கப்பட்டது. அந்த மின்னஞ்சலில் இருந்த தகவல்கள் என்ன?

அந்தத் தகவல்கள் வெளிவந்ததால் சாரா போலின் எதிர்கொண்ட நெருக்கடிகள் எப்படியிருந்தன?

மின்னஞ்சலை வெளியிட்டதால் யூலியன் மீது அமெரிக்கா நடவடிக்கை எடுக்க முடிந்ததா?

(திரைகள் இன்னும் திறக்கும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவுப் பயணம்

ராஜ்சிவா

# நிஜமா? 4

## இன்னமும் விலகாத மர்மங்கள்





ஸ்புட்னிக் பூமியின் மேற்பரப்பில் உள்ள விண்வெளியைச் சுற்றி வந்தது. மனித வரலாற்றிலேயே விண்வெளிக்கு மனிதனால் அனுப்பப்பட்ட முதல் செயற்கைக்கோள் என்ற பெயரை 'ஸ்புட்னிக்1' பெற்றுக்கொண்டது. இதன் மூலம் தனது காலடித் தடத்தை விண்வெளியில் உயரத் தூக்கி எடுத்து வைத்துவிட்டதாக மறைமுகமாக மார்தட்டிக்கொண்டது ரஷ்யா. ரஷ்யாவின் இந்தச் செயல் உண்மையில் வியப்பான ஒன்றுதான். உலகம் முழுவதும் மூக்கில் விரலை வைத்து, ஆச்சரியமாகவும், பயத்துடனும் ரஷ்யாவைப் பார்க்க வைத்த நிகழ்வாக அந்த நிகழ்வு அமைந்தது. அதனால் அமெரிக்கா பெருத்த அவமானத்தை அடைந்ததாக எண்ணிக் கொண்டது. அத்துடன் அமெரிக்காவுக்கு ஒரு பயமும் தொற்றிக் கொண்டது. விண்வெளியில் தளம் அமைத்து, அங்கு அணு குண்டுகளைப் பொருத்தி, அமெரிக்காவுக்கு ஒரு அச்சுறுத்தலாக ரஷ்யா இனி அமைந்துவிடுமோ என்று வெளிப்படையாகவே தன் பயத்தை வெளிக்காட்டியது அமெரிக்கா. அணுகுண்டை ஏவி யுத்தத்தை நடத்துவார்களோ என்று இரண்டு பக்கமும் பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்த வேளை அது. இப்போது பனிப்போரின் சக்தியில் ரஷ்யாவே முன்னிலையில் இருப்பது போல ஒரு தோற்றமும் உருவாகிவிட்டதால், அமெரிக்காவின் பதற்றம் அதிகரித்தது.

ரஷ்யாவின் அதிரடி இத்துடன் நின்றுவிடவில்லை. 'ஸ்புட்னிக்1' ஐ அனுப்பிய அடுத்த ஒரு மாதத்தில், அதாவது 1957 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3 ஆம் திகதி 'ஸ்புட்னிக் 2' என்ற பெயரில் அடுத்த செயற்கைக்கோளையும் தொடர்ந்து விண்வெளிக்கு அனுப்பி வைத்தது. இந்தத் தடவை ரஷ்யா செயற்கைக்கோளை வெறுமையாக அனுப்பி வைக்கவில்லை. அதனுள் 'லைய்க்கா' என்னும் பெண் நாய் ஒன்றையும் வைத்து அனுப்பியது. இதன் மூலம் விண்வெளிக்குப் பிரயாணம் செய்த முதல் உயிரினம் என்ற பெயரை லைக்கா, தட்டிக்கொண்டது. விண்வெளிக்குச் சென்ற லைய்க்கா, வெப்பக் கதிர்களின் தாக்கத்தால் சில மணி நேரமே உயிருடன் இருந்தாலும், உலக வரலாற்றில் தனக்கென ஒரு இடத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டது. லைய்க்காவைப் பெருமைப் படுத்தவென ரஷ்ய அரசும், அதன் ஆதரவு நாடுகளும் லைய்க்காவின் படத்துடன் கூடிய தபால் தலைகளை வெளியிட்டன. லைய்க்காவை விண்வெளிக்கு ரஷ்யா அனுப்பியது. அமெரிக்காவின் தலையில் இறங்கிய இரண்டாவது பேரிடியாகும். அமெரிக்கா மிகவும் கூசிப்போனது. சொல்லப் போனால், அமெரிக்காதான் விண்வெளிக்கு செயற்கைக் கோள் ஒன்றை அனுப்புவதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தது. ஆனால் ரஷ்யா மிகவும் இரகசியமாகத் தன் திட்டத்தை நிறைவேற்றிவிட்டது. இவர்கள் இருவருக்கும் ஒரே சமயத்தில் விண்வெளிக்கு ரொக்கெட் அனுப்பும் எண்ணம் தோன்றியதற்கும் ஒரு காரணம் இருந்தது.

விண்வெளிக்கு ராக்கெட் அனுப்பும் தொழில்நுட்பத்தை இவர்கள் இவரும் பெற்றுக்கொண்டது ஜேர்மன் விஞ்ஞானிகள் மூலம்தான். இரண்டாம் உலகப் போரின் வெற்றியின் பின்னால் ஜேர்மனியை ரஷ்யாவும், அமெரிக்காவும் பங்கு போட்டபோது, ஜேர்மனியின் முதன்மை விஞ்ஞானிகளையும் பங்கு போட்டுக்கடத்திக் கொண்டு சென்றனர். அவர்கள் மூலம் இரு நாடுகளும் ரொக்கெட் தொழில்நுட்பங்களைப் பெற்றுக்கொண்டன.

இதன் பின்னர் 1958 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி, அமெரிக்கா 'எக்ஸ்ப்ளோரர் 1' என்ற செயற்கைக்கோளை விண்ணுக்கு அனுப்பி வைத்தது. பூமியைச் சுற்றி மின்காந்த ஏற்றங்களையுடைய, கதிர்வீச்சுள்ள மிகப்பெரிய இரண்டு பட்டிகள் அமைந்திருக்கின்றன என்பதை எக்ஸ்ப்ளோரர் 1 செயற்கைக்கோள்தான் கண்டு பிடித்தது. 'வான் அலன் கதிர்வீச்சுப் பட்டி' (Van Allen Radiation Belt) என்று இதை அழைக்கிறார்கள். மனிதன் சந்திரனுக்குச் செல்லவில்லை என்பதற்கு இந்தப் பட்டியும் ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது. இது பற்றி விளக்கமாகப் பின்னர் பார்க்கலாம். 'எக்ஸ்ப்ளோரர் 1'ஐ விண்வெளிக்கு அமெரிக்கா அனுப்பி வைத்தன் மூலம் தானும் ரஷ்யாவுக்கு சமமானவன் என்று காட்டிக் கொண்டது. அதன் பின்னர் இந்த இரண்டு நாடுகளும், தங்களில் யார் விண்வெளியில் உயர்ந்தவர் என்று காட்டிக்கொள்ளும் போட்டியில் இறங்கினர். பில்லியன் பில்லியன் டொலர் இதனால் விண்வெளியில் கொட்டப்பட்டது. எத்தனையோ தோல்விகள், ஏதோ சில வெற்றிகள் என நடந்த இந்த விண்வெளித் தொடர் ஓட்டத்தில் வெடித்துச் சிதறியதும், விழுந்து மோதியதுமான விண்கலங்கள், அதிகமாக இருந்தன. இவர்களின் இந்தப் போட்டி 'விண்வெளிப் பந்தயம்' (Space Race) என்று அழைக்கப்பட்டது. இந்த ஓட்டப் பந்தயத்தில் ரஷ்யாவே பல சமயங்களில் முன்னிலையில் இருந்தது. ஒரு கட்டத்தில் ரஷ்யா யாருமே நம்பமுடியாத ஒரு காரியத்தைச் செய்து முடித்தது. அமெக்ரிகா என்ன செய்வதென்றே தெரியாமல் கைகளைப் பிசைந்தபடி நின்ற சம்பவமாக அது அமைந்தது. மனித வரலாற்றின் மிகப் பெரிய மைல்கல்லாக அந்தச் சம்பவம் பதியப்பட்டது.

'வாஸ்டொக்1' விண்கலம், 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி ரஷ்யாவினால் விண்வெளிக்குச் செலுத்தப்பட்டது. அந்த விண்கலத்தில், விண்வெளிக்குப் பயணம் செய்யும் முதல் மனிதன் என்னும் பெருமையைப் பெறப்போகும் 'யூரி ககாரின்' எனும் வரலாற்று மாமனிதர் அமர்ந்திருந்தார். யூரி ககாரினைச் சுமந்தபடி, 'வாஸ்டொக் 1' விண்கலம் விண்வெளிக்குச் சென்று பூமியை ஒரு சுற்றுச் சுற்றி வந்தது. 1 மணி 48 நிமிடங்கள் பூமியைச் சுற்றிய யூரி ககாரின், மீண்டும் வெற்றிகரமாக பூமியை வந்தடைந்தார். ரஷ்யாவுக்கும் தனக்கும் இதன் மூலம் பெருமை சேர்த்துக் கொண்ட யூரி ககாரினை உலகமே வியந்து பாராட்டியது. ரஷ்யாவின் இந்த அதிரடி நடவடிக்கை, அமெரிக்காவுக்கு மாபெரும் சவாலாக இருந்தது. ரஷ்யா சாதித்ததை விட உயர்ந்ததாக, உலகம் வியக்கும்படியான ஒரு காரியத்தை விண்வெளியில் செய்தால் மட்டுமே பனிப்போரில் ரஷ்யாவை வென்றதாகும் என்ற நிலைக்கு அமெரிக்கா தள்ளப்பட்டது. இதற்கு மேலே அமெரிக்கா செய்யக் கூடியதாக இருந்தது. ஒன்றே ஒன்றுதான். அந்த ஒன்று தினம் தினம் நம் கண்முன்னே காட்சி தந்து கொண்டு மனிதனைத் தன்னிடம் வா... ! வா...! என்று அழைத்துக் கொண்டிருந்தது. அதுதான் நிலா. அமெரிக்காவின் மானம், மரியாதை இரண்டையும் ஒன்று சேரக் காப்பாற்றும் தேவதையாக, உயரத்தில் அமைதியாகக் காய்ந்து கொண்டிருந்தது அந்த 'நிலா'

*(மர்மங்கள் தொடரும்)*


சுடர் ஒளி வாசகர்களே !

குடத்தில் இட்ட விளக்காக
உங்களுக்குள் மறைந்து கிடக்கும்
படைப்புத் திறன்களைக் குன்றின் மேல்
தீபமாக்கிட சுடர் ஒளி காத்திருக்கிறது.
சிறுகதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள்,
எதுவானாலும் அனுப்பிவையுங்கள்.
தரமானவை பிரசுரிக்கப்படும்.


படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி:
சுடர் ஒளி,
இல.361 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் உலகம்




## மாயத் தீவில் மந்திரக் கிழவி

"குழந்தைகளே நீங்கள் நினைத்தது சரி தான். இந்த மண்ணிலுள்ள விசேடமான சக்தி மந்திரக் கிழவியின் மாயக் கண்ணாடியின் பார்வையில் இருந்து தப்பக் கூடியது இதனை நீங்கள் உடலிலே பூசிக் கொண்டால், மாயக் கண்ணாடி மூலம் அவள் உங்களைக் கண்காணிக்க முடியாது" என்றார் குருநாதர்.

"நல்லது அப்படியானால் இந்தக் குகையில் இருந்து நாம் இருவரும் வெளியே செல்லும் உபாயம் உண்டா குருவே?" என்று பணிவுடன் கேட்டான் இந்திரவர்மன்.

"பிள்ளைகளே! உங்களுக்கு நான் ஏற்கனவே போதித்த ஆதி சூரிய மந்திரத்தைப் பயன்படுத்தி இலகுவாக குகையை விட்டு வெளியே வரலாம்" என்று கூறிவிட்டுக் குருநாதர் மீண்டும் மறையத் தொடங்கினார். மாயக் கண்ணாடியை மீண்டும் பத்திரப்படுத்திவிட்டு, அதிசய சக்தி கொண்ட மண்ணைத் தம் உடலெங்கும் பூசத் தொடங்கினார்கள் இளவரசர்கள். அதன் பின்னர் இருவரும் கண்களை மூடி, மனதை ஒருநிலைப் படுத்திக் கொண்டு, 'ஆதிசூரிய' மந்திரத்தை உச்சரிக்கத் தொடங்கினார்கள். மந்திரத்தை உச்சரித்த மறு விநாடியே குகை மேற்புறமாகப் பிளந்தது. இளவரசர்கள் இருவரும் அந்தரத்தில் மிதந்தவாறு குகையின் வெளிப்புறத்தை அடைந்தவுடன், மறுபடியும் குகையின் மேற்புறம் மூடிக்கொண்டது. குகைக்கு வெளியே வந்த இளவரசர்கள் இருவரும் அருகில் இருந்த புதர் ஒன்றுக்குள் சென்று மறைந்து கொண்டார்கள்.

புதருக்குள் மறைந்திருந்த இளவரசர்கள் இருவரும் தம்முடைய முதுகிலே ஏதோ ஊர்வது போல உணர்ந்தார்கள். திடுக்கிட்டவர்களாய் இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். அவர்கள் மறைந்திருந்த புதரின் இலைகள் எல்லாம் புழுக்களாய் இருந்தன. அதன் தண்டு ஒரு பாம்பு போல நாக்கை வெளியே நீட்டி பயமுறுத்துவது போல் இருந்தது. "இந்திரவர்மா! இந்த மாயத் தீவில் எல்லாவற்றையுமே விநோதமாகவும், அருவருப்பானதாகவும் தான் இந்தக் கிழவி படைத்திருக்கிறாள்" என்றான் சந்திரவர்மன். "அவளுடைய இரசனையும், கொலை வெறியும் இந்தத் தீவை சிருஷ்டித்ததிலே மிக நன்றாகத் தெரிகின்றது" என்று பதிலுரைத்தான் இந்திர வர்மன். "இந்திரா! சற்றுப் பொறு! யாரே வரும் அரவம் கேட்கிறது. கொஞ்சம் கூர்ந்து கவனிப்போம்" என்று கூறிவிட்டு உற்றுநோக்கத் தொடங்கினான் சந்திர வர்மன். இளவரசர்கள் இருவரும் புதருக்குள் மறைந்திருப்பதை அறியாத இரு இராட்சதர்கள் மனித மாமிசத்தை சப்புக் கொட்டியபடி உண்டவாறு அவ்விடத்திற்கு வந்தனர். *(மந்திரக் கிழவி வருவாள்...)*

# உன்னால் முடியுமா?

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

எறும்பே, அப்படி நீ என்ன சாக சத்தை செய்யப் போகிறாய்?"என்று கேட்டது பூரான்.

எறும்பு, பூரானிடம் பதில் எதுவும் பேசவில்லை. அருகே இருக்கிற தண்ணீர் தொட்டியை நோக்கிச் சென்றது.

சிறு துரும்பு ஒன்றைப் பற்றிக் கொண்டு மெல்ல மெல்ல தண்ணீர் தொட்டியின் மேலே ஏறியது. துரும் போடு சேர்ந்தபடி தண்ணீருக்குள் பொத்தென்று விழுந்தது.

பின்னர் அந்தக் துரும்பினைப் பற்றிக் கொண்டு தண்ணீரில் மிதந்தது.

பூரானே, நான் சிறு துரும்பை பற்றிக் கொண்டு தண்ணீரில் மிதந்து கொண்டிருப்பது போல், உன்னால் மிதக்க முடியுமா?"என்று கேட்டது எறும்பு.

எறும்பின் பின்னாடியே ஊர்ந்து வந்து தொட்டியின் மேல் விளம்பில் எறும்பு செல்ல இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த பூரானுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. உடனே அது தன்னுடைய தவறினை உணர்ந்தது.



எறும்பே, என்னை மன்னித்து விடு... நான் தெரியாமல் இந்தத் தவறினை செய்து விட்டேன். நானே உயர்ந்தவன், நானே பலவான் என்று எண்ணி, உன்னை மட்டம் தட்ட நினைத்தேன். இப்போது நானே அதனால் பெரும் அவ மானத்தை அடைந்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு."என்றது பூரான்.

பூரானே, இந்த உலகில் வல்லவர்க்கு வல்லவர் உண்டு என்பதை இப்போதாவது நீ அறிந்து கொண்டாய் என்று நினைக்கிறேன்."என்றது எறும்பு.

பூரானும், ஆமாம்!"என்று ஒப்புக்கொண்டது.

# கேள்வி ஒன்று: பரிசு ஆயிரம்

*மாணவ, மாணவியரே! கூப்பனுக்குள் உள்ள கேள்விக்கு என்ன விடை என்று தெரியுமா? தெரிந்தால் உடனே எழுதி கூப்பனைக் கத்தரித்து 10.10.2013 இற்கு முன்னர் அனுப்பிவையுங்கள். சரியான விடை எழுதியோரில் ஒருவருக்கு 1000 ரூபா பணப்பரிசு காத்திருக்கிறது.*

*(வெற்றி பெற்றவர்களின் புகைப்படங்களும் பிரசுரிக்கப்படும். ஆகவே விரும்பியோர் புகைப்படங்களையும் இணைத்து அனுப்பலாம்).*

கேள்வி:-

வடக்கு மாகாணத்தின் முதலாவது முதலமைச்சர் யார்?

பதில்:- ..........................................................................

பெயர் :- ..........................................................

தரம் :- ..........................................................

பாடசாலை :- ..........................................................

✍ அனுப்ப வேண்டிய முகவரி:
கேள்வி ஒன்று: பரிசு ஆயிரம்.
சுடர் ஒளி
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**06**

**கேள்வி ஒன்று; பரிசு ஆயிரம் - 03**

*சரியான விடை -* **ஜூன் 05**

இந்தப் போட்டியில் ஏராளமான மாணவர்கள் ஆர்வத்தோடு பங்கு பற்றியிருந்தார்கள். அவர்களில் 'நொ தேர்ண் கொம்பியூட்டர்ஸ்' வழங்கும் 1000 ரூபா பரிசினைப் பெறுவதற்காக குலுக்கல் மூலம் வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலி -

## ரா.உஷாந்தினி

தரம் - 10 . யா/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி. புத்தூர்.

பாராட்டுப் பெறுவோர்:-

01. ஜெ.அபிலாஷினி. தரம் - 6. தி/ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி. திருகோணமலை.
02. கு.ஜருணி. தரம் - 3. யா/இந்து ஆரம்பப் பாடசாலை.
03. M.சிதுஜான். தரம் - 7. கி/சிவபாதம் கலையகம் அ.த.க.
04. பி.டவாலிக்கா. தரம் - 6. அ/பெப்டிஸ் தமிழ்.ம.வி.கெக்கிராவ.
05. கு.அபிநாஷ் . தரம் - 04. யா/மகாஜனக் கல்லூரி. தெல்லிப்பழை.

பரிசுக்கான அனுசரணை:-


NORTHERN COMPUTERS
Innovative Solutions!
#303,Kasthuriyar Road,Jaffna
e-mail : ncjaffna@gmail.com
Cont : Shukoor - 077 555 97 55

FREE:Norton Internet Security With All Laptops

HP Pavilion 15 - e016TU
i3 3rd Generation
4GB Ram
500GB HDD
15.6"LED Screen
WiFi
DVD RW
Laptop Bag
Price :Rs.64,000
01 Year Parts Warranty
02 Years Service Warranty

HP Pavilion G6-2311TU
i5 3rd Generation
4GB Ram
750GB HDD
15.6"LED Screen
WiFi
DVD RW
Laptop Bag
Price :Rs.79,500
01 Year Parts Warranty
02 Years Service Warranty

HP 1000 - 1311TU
Intel Dual Core 3rd Gen
2GB Ram
500GB HDD
14"LED Screen
WiFi
DVD RW
Laptop Bag
Price :Rs.52,500
01 Year Parts Warranty
02 Years Service Warranty

DELL Inspiron - 3521
i3 3rd Generation
4GB Ram
500GB HDD
15.6"LED Screen
WiFi
DVD RW
1GB Dedicated VGA
Laptop Bag
Price :Rs.67,500
01 Year Parts Warranty
02 Years Service Warranty

Toshiba Satellite C850
i3 3rd Generation,2GB Ram
500GB HDD,15.6"LED Screen
WiFi,DVD RW,Laptop Bag
Price :Rs.59,000
01 Year Parts Warranty
02 Years Service Warranty

எம்மிடம் சகல விதமான கணினிகள் ,அனைத்து விதமான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் அதன் உதிரிப்பாகங்களையும் நியாயமான விலையிலும் நம்பகரமான உத்தரவாதத்துடனும் பெற்றுக்கொள்ளலாம்.


# பொது அறிவு

01. இலங்கை அரசினது வங்கி எது?
    மக்கள் வங்கி
02. இலங்கையில் சுண்ணாம்புக்கல் கிடைக்கும் இடம் எது?
    யாழ்ப்பாணம்.
03. செய்தி பரிவர்த்தனை நிலையம் எங்கு அமைந்துள்ளது?
    பாதுக்கை.
04. இலங்கையின் அயல் நாடு எடு?
    இந்தியா?
05. இலங்கையின் தேசபிதாயார்?
    டி.எஸ்.சேனநாயக்கா.
06. இலங்கையில் பெரிய மாகாணம் எது?
    வட மத்திய மாகாணம்.
07. இலங்கையில் மிகப் பெரிய பூங்கா எது?
    பேராதனைப் பூங்கா.
08. இலங்கையின் மத்திய பகுதி எது?
    மலைநாடு.
09. இலங்கையின் அதிக குளிரான இடம் எது?
    கந்தப்பளை.


**வி.அனுஷா,**
**தரம் 9, கிளி/ சிவநகர், அ.த.க.பாடசாலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

## வழிகாட்ட வேண்டும்



குங்குமம் நெற்றியில்
திகழ வேண்டும் சைவ
மங்கையர் தலை வாரி
பூச்சூட வேண்டும்!

பொங்கும் புன்னகை
தவழ வேண்டும் சைவ
மங்கையர் பண்பினை
வளர்க்க வேண்டும்!

குங்குமம் நெற்றியில்
திகழ வேண்டும் சைவ
மங்கையர் தலை வாரி
பூச்சூட வேண்டும்!

பொங்கும் புன்னகை
தவழ வேண்டும் சைவ
மங்கையர் பண்பினை
வளர்க்க வேண்டும்!

கவிக்குயிலன்,
சேனையூர்.

## பிரிவு

உன் நினைவுகள்
சுமந்த – என்
இதயம் வலிக்கிறது – நீ
உள்ளே இல்லை
என்றல்ல – நீ
உள்ளே
இருப்பதனால்
உன்
உதடுகள் தந்த
முத்தத்தின் ஈரம் காயவில்லை
இன்றும் – ஆனால்
உன் முகவரி மட்டும்
தொலைந்துவிட்டது.



ப.அறிவு

## காலம் கனிந்து வரும்



ஈழத் தாயே!
உன்னைக் காவல் புரிந்தவர்கள் – சிலர்
எட்டப்பராய் மாறியதால் – நீ
இருப்பிழந்து போனாலும்
கலங்காதே தாயே காலம் கனிந்து வரும்
தலைவன் போட்ட கணக்கு
தவறாது தாயே – இது ஒரு
தடங்கல் தான் – நாளை
தர்மம் தழைத்தோங்கும்
தரணியில் உன் புகழ் பரவும் – மீண்டும்
பரணி பாடுவோம்.

– மாயவதாசன்.

## தமிழ் மண்ணைக் காதலி



அன்னையாய்
அன்பாய்
அனுபவித்துக் காதலி
ஆசையாய்
ஆனந்தமாய்
ஆத்மார்த்தமாய்க் காதலி
இனிமையாய்
இயல்பாய்க் காதலி
ஈடுபாடாய்
ஈசனாய்
ஈதியின்றிக் காதலி
உண்மையாய்
உருக்கமாய்
உணர்வாய்க் காதலி
ஊழியனாய்
ஊக்கமாய்
ஊன்றிக் காதலி
எழுமையாய்
எழு நாவாய்
என்றும் காதலி
ஏக பாவமாய்
ஏக நாதனாய்
ஏதிலார் அகற்றிக் காதலி
ஐக்கியமாய்
ஐசுவரியமாய்
ஐம்புலன் திறந்து காதலி
ஒற்றுமையாய்
ஒய்யாரமாய்
ஒப்புறவொழுகிக் காதலி
ஓர்மமாய்
ஓதியுணர்ந்து காதலி
தாய் மண்ணாம் – ஈழத்
தமிழ் மண்ணை!

– விவேகானந்தனூர் சதீஸ்,
கிளிநொச்சி.

## காதல்

எமக்காக மட்டுமே
துடித்த இதயம்...
இன்னொருவருக்காய்
துடிக்க ஆரம்பிப்பது!


யாரோ?.... ஒருவரை
காணும்போது மட்டும் - எம்
உள்ளத்தில் பூக்கும் உன்னதமான உணர்வு

பாலைவனத்தை நனைக்கும்
தூறல்

அமாவாசை நேரத்து
நிலவு

மூவுலகையும்...
முக்காலமும்...
ஆட்சி செய்யும்
அதிகார வர்க்கம்.

ஜானுகா, கிளிநொச்சி.



## விடுமுறை

வனவாசம் சென்ற
ராமனாய்
வானமதில் பறந்துவந்தான்
வெளிநாடு சென்ற மகன்
லவகுசன் பிள்ளைகளுடன்
சீதாராமனாய்
ராமன் மாறிவிட்டான்
சீதா மாறிவிட்டாள்
பாசப்பிணைப்பில்
மகனுடன் உறவாட
தாய் தயங்கியபடி
தம்பிவருவான்
பேரப்பிள்ளைகள் வரும்
அப்பம்மா என்று கூறும்
தேவாரம் படிக்கும்
பாட்டுப் படிக்கும்
கனவுகளிலே
ஆங்கில மொழியில்
பேரப்பிள்ளை – புலம்புகிறது
தந்தையும் தாயும்
மொழி மாற்றம் செய்கின்றனர்
தாய் மொழியை
தர மறுக்கும்
தமிழ்ச் சமூகம்
தமிழனென்று வாழ்கிறது
தலை நிமிந்து



– இனுவில் வாகீசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பித்தன் பதில்கள்

# போனஸ் சீற்றும் சங்கீதக் கதிரையும்

த.பிரதீப்,
கோண்டாவில்.

**கே :** கூட்டமைப்புக்கு வடமாகாணத் தேர்தலில் கிடைத்துள்ள போனஸ் ஆசனங்களில் ஒன்றை ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு உறுப்பினர் வீதம் சுழற்சி முறையில் வழங்க இருப்பதாகத் தகவல்கள் வருகின்றனவே. இது உண்மையா பித்து?

**ப :** எது உண்மை, எது பொய் எண்டது கடவுளுக்குத் தான் வெளிச்சம். ஆனாலும் வருசத்துக்கு ஒரு ஆளுக்கு எண்டு போனஸ் சீற்றைக் குத்தகைக்கு விடுகிறது எவ்வளவு தூரம் சரிப்பட்டு வருமெண்டு தெரியேல்ல. ஏனெண்டால் வேட்பாளர் தெரிவு, அமைச்சுப் பங்கீடு எண்டு எல்லாத்துக்கும் அடிபடுறது போல பிறகு இந்த வருசம் ஆர் போனஸ் சீற்றில இருக்கிறது எண்ட அடிபாடும் நடக்கும். கிட்டத்தட்ட சின்னப் பிள்ளையள் விளையாடுற சங்கீதக் கதிரை மாதிரி ஒவ்வொருத்தரும் போனஸ்



சீற்றைப் பிடிக்கிறதுக்காண்டி ஓடத் தொடங்கிவிடுவினம். இப்பிடி கொஞ்சக் காலம் மட்டும் ஒருத்தர் பதவி வகிக்கிறதால எந்த ஒரு லாபமும் வராது. சும்மா ஒப்புக்கு ஒரு வருசம் கதிரையில இருந்திட்டு, வடிவேலுவின்ர பாணியில "ஏய் பாத்துக்கோ! பாத்துக்கோ! நானும் மாகாண சபை உறுப்பினர்தான்" எண்டு எழுப்பம் காட்டலாமே தவிர உருப்படியா ஒண்டும் செய்ய முடியாது.

சுழற்சி முறையில போனஸ் சீற் றைக் குடுக்கிறதெண்டது வெளியால இருந்து பாக்கேக்க நல்ல ஜனநாயக முறை மாதிரித் தெரியும். ஆனால் உள்ளுக்கை அந்த போனஸ் சீற்றுக் காக நடக்கிற குத்து வெட்டுக்கு வெட்டு ஒண்டு, துண்டு ரண்டெண்டு தீர்வு காணமுடியாமல்தான் இப்பிடி சுழற்சிமுறை நியமனம் எண்டு கூட்டமைப்பு நழுவுது போல.


இ.தாரணி,
முல்லைத்தீவு.

**கே :** தற்போது குடும்ப வன்முறைகளின் அதிகரிப்பால் குழந்தைகள் அதிக உளத்தாக்கத்துக்கு உள்ளாகின்றனரே. இதைத் தீர்க்க என்ன வழி பித்து!



**ப :** வீட்டில ஏதாவது பிரச்சினை வந்தால் அக்கம் பக்கம் ஆர் இருக்கினம், என்ன கிடக்குது, மற்றவைக்கு என்ன கஸ்ரம் ஏற்படும் எண்டெல்லாம் ஒருத்தரும் பார்க்கிறேல்ல. புருஷனும் பெண்சாதியும் தங்கட கோபத்தைக் கத்திக் குளறியே இல்லாட்டி அடிச்சு உதைச்சோ காட்டிப் போடுவினம். ஆனால் இதுகளை நேர பார்த்துக் கொண்டிருக்கிற பிள்ளையள் ஒருத்தரிட்டையும் இதைப் பற்றிச் சொல்லவும் முடியாமல், ஆறுதல் பெறவும் முடியாமல் தவிச்சு, ஒழுங்காப் படிக்கவும் முடியாமல் பாதை மாறிப் போயிடுங்கள். இதைத் தீர்க்க கணவன் மனைவி இரண்டு பேரும் சண்டை போடாமல் இருக்கிறதுதான் ஒரேவழி. ஆனால் மூக்கிருக்கும் மட்டும் சளி இருக்கும்தானே. (குடும்ப வன்முறையில குழந்தைகள் மட்டும்தான் பாதிக்கப்படுவினம் எண்டது பச்சைப் பொய். நம்பாட்டி பித்துவின் முதுகில் உள்ள அடி காயங்களை அலுவலக நேரத்தில நேரில வந்து பார்வையிடலாம்)

## சொற்சிலம்பம் போட்டி இல: 589



**மேலிருந்து கீழ்**

1. ஒரு வகைப் பயறு
2. கடுதாசி
3. சிரார்த்தம்
4. தோழமை
5. ஒருவகை பாரம்பரிய விளையாட்டின் முதல்பாதி
6. யானையை வழி நடத்துவோன்
8. திக்கற்றவன்
10. சேஷ்டை
12. மரத்தாலான கரண்டி
13. கிளைத்தல்
14. தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் ஒரு சஞ்சிகையின் பெயர்
15. வலு
16. ஒன்று சேர்
17. அதிகமாக

**இடமிருந்து வலம்**

1. தலை முதல் கால் வரை
7. ஒரு வகை வண்டினம்
8. மனம் சார்ந்த
9. (உணவு முதலியன) தயாரி
10. இராமனின் வனவாசத்தின்போது நட்பான ஒரு படகோட்டி
11. (சமையலின்போது) வரும் பக்குவமான நிலை
12. முடிந்த முடிவு
13. இல்லம்
15. ஒரு கறிவகை
16. உழவுக்குப் பயன்படும் உபகரணம்
17. நீருக்குள் ஆழ்ந்துவிடாமல் இரு
18. கழுவு
19. உலகம்

அனுப்புபவர் பெயர்:......................................

விலாசம்:......................................

......................................

கையொப்பம்:......................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 589

சொற்சிலம்பம் போட்டி 589 க்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 09 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 16 ஆம் மற்றும் ஒக்ரோபர் 23 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:
**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361. கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 587 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.பாதயாத்திரை, 2.தயார், 3. சாரி, 4. ரிக்ஷா, 6. மகவு, 7.திசை, 11. தூய்மை, 12.திட்டு, 14. கும்மி, 17.யமன், 18.நார். 20.சாண். 21.குரு. 22.ஆனி

**இடமிருந்து வலம்**

1.பாதசாரி, 5.ஸ்ரீமதி, 8.தயாரிக்க, 9. கசை, 10.யார், 11.தூவு, 13.காய், 15.திகட்டு, 16.மையம், 19.மமி, 21.குர்ஆன், 23.கொண்டிரு.

### போட்டி இல. 586 இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1ஆம் பரிசு | கே.இராஜகோபால், அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை. |
| 2ஆம் பரிசு | ரா.யோகராஜா, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, திருகோணமலை. |
| 3ஆம் பரிசு | வி.செல்வநாயகம், சிவன்கோயில் வீதி, புத்தூர். |

### பாராட்டுப் பெறுவோர்

(1) க.தில்லையம்பலம்,
கதிர்காமகோயிலடி, வதிரி, கரவெட்டி.
(2) ஜெ.ரஜனி,
இல.36/35, கண்டிவீதி, சுமேதகம,
திருகோணமலை.
(3) திருமதி முகுந்தா ஜெயசோதி,
இல.93 2/5, பீட்டர்சன் வீதி, கொழும்பு - 06.
(4) ஆர்.மஞ்சுளா,
பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி.
(5) சா.விக்ரர்,
டீ மெல், இல.04, ஓடக்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
(6) திருமதி எஸ்.பாக்கியநாதன்,
இல-7, 57 ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06.
(7) சி.கிருஷ்ணவேள்,
வசந்தபவனம், மருதடிமேற்கு, சாவகச்சேரி.
(8) வே.கார்த்திகேசு,
விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை.
(9) ச.பரமேஸ்வரி,
இல. 43/31, திசவீரசிங்கம் சதுக்கம் மேற்கு,
மட்டக்களப்பு.
(10) எஸ்.எஸ்.பவானந்தன்,
சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடேல் பாலசிங்கம்

# சுதந்திர வேட்கை

விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 3

எமது பயணம் தொடர்ந்தது. பாலாவின் நிலைஒன்றில் நேரம் போகத் தேறி சமாளிக்கும் நிலைக்கு வந்துவிடும். அப்படியானால், தொடர்ந்து செல்லலாம் என்ற நம்பிக்கை. அல்லது அவரால் இயலா மல் போய்விடும். அந்த நிலையில், திரும்பி விட வேண்டும் என்ற முடிவு. எனக்கு இருதலைக் கொள்ளி எறும்பு நிலை. ஆனால் நாம் போக வேண்டிய தூரத்தை விட ஓடி வந்துவிட்ட தூரம் அதிகம் என்பது தெரிந்தது. ஆகவே திரும்பிப் போவதில்லை. பயணம் தொடர வேண்டியதுதான். வேறு வழி யில்லை என்பது அவருக்கும் தெரியும். சூசை என்னைப் பார்த் தார். கடற்போராளிகள் ஒருவரை ஒருவர் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எதையாவது செய்ய வேண்டும் என்று சூசை தவித்துக் கொண்டிருந்தார்.

படகின்வேகத்தை குறைக்குமாறு ஓட்டியிடம் உரத்துக் கூறினார்." கடற்படைப்பீரங்கிப் படகுகள் திருகோணமலை யிலிருந்து புறப் பட்டு விட்டன" என்று பதில் எட்டத்திலிருந்து வரப்போகும் ஆபத்தை உதாசீனப்படுத்தியவராக, " கொஞ்ச நேரம் மெதுவாக ஓட்டு" என்று சூசை திரும்பவும் கத்தினார். ஆழ்கடலின் ஊடாகவும், அதிகரிக்கும் இருட்டின் ஊடாகவும், கடலின் நிலமைக்கு ஏற்றவாறும், பாலாவின் உடல் உபாதைக்கு ஏற்றவாறும், படகின் வேகத்தை மாற்றியபடி சென்று கொண்டிருந்தோம். சூசை தான் குந்தியிருந்த அணியத்தின் விளிம்பிலிருந்து ஒரு கணமும் நகரவில்லை. கடல்மீது,தமது கூர்மையான பார்வையைத் தூரத்தில் பரத்தியபடி யிருந்தார்; அவ்வப்போது பாலாவின் மீது ஒரு கண்ணோட்டம். இனித் தமது தோழர்களுக்கு திசை பற்றியும் வேகம் பற்றியும் குறிப்புக்கள்.



சூசையும் அவர் களுடைய வீரர்களும் இப்படிப்பட்ட பயங்கரச் சூழலில் வாழப் பழகியவர்கள். களைப்பின் சுவடோ,ஆபத்தின் கலக்கமோ அவர்களில் தெரியவில்லை. தற்கொடைத் தியாகத்தின் முதிர்ச் சியில் முகிழ்ந்த அமைதி வடிவமாக,ஓர் ஒத்திசைவோடு இயங்கும் உடலின் வெவ்வேறு உறுப்புக்கள் போல சூசையும் அவருடைய வீரர்களும் செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது நாம் அனுபவித்துக் கொண்டிருந்த உபத்திரத்திற்கு முடிவே இல்லையா என்று நான் அயர்ந்து கொண்டிருந்த போது, " அங்கை பாருங்கோ அன்ரி" என்று இயந்திரங்களின் இரைச்சலுக்கு மேலாக, சூசை என்னை நோக்கிக்குனிந்து கத்தியபடியே, தூரத்தில் மினுங்கிய ஒளியைச் சுட்டிக் காட்டினார். " வந்துசேர்ந்திட்டம்," என்று சொல் லியவாறு இருட்டில் ஒரு கப்பல் நிற்பதைப் உணர்த்தினார். சிறிது நேரத்தில், உலாஞ்சிக் கொண்டிருக்கும் எமது படகை ஒரு கப்பலோடு அணைத்துப் பிடிக்க,வீரர்கள் முயன்று கொண்டிருந் தார்கள். இரவின் கனதி இளகியது. அவ்வளவுநேரமும் ஒரே சுரதியில் கடல் அலைச் சத்தத்தையும் இயந்திர இரைச்சலையும் மீறி, பரபரப்புகள் களை கட்டின. " வாருங்கோ அன்ரி வாருங்கோ" என்னைத் தூக்கிக் கப்பலில் ஏற்றுவதற்காக கரங்கள் நீண்டன. பாலா ஏற்கனவே ஏறிவிட்டார். வோக்கி ரோக்கியால் தகவல் கொடுக்கப்பட்டதால் கப்பலில் இருந்து வீரர்கள் அணி ஒன்று படகுக்குள்இறங்கி, அவரைப் பத்திரமாய் கொண்டு பொய் கழுவித் துடைத்து, கதகதப்பான அறை ஒன்றில் படுக்க வைத் திருந்தார்கள். பலசாலி இளைஞர்கள்! என்னையும் கப்பலில் ஏற்றி ஒரு சிற்றறைக்குள் பத்திரமாகச் சேர்த்து விட்டார்கள். இரவுக் குளிரிலும்,மழையிலும், தெப்பமாக நனைந்த பின், கதகதப்பான ஒரு வீட்டுக்குள்ளே நுழைவது போல இருந்தது. ஆனால் வாந்தி எடுத்ததால் துவண்டு போயிருந்தேன். தூங்க முடியவில்லை. ஒரு படியில் அமர்ந்து,முழங்காலில் முகத்தைப் புதைத்தபடியிருந்தேன். பாலா எப்படி இருக்கிறாரோ என்ற கவலை. இனி,எனது தலைச்சுற்றலால் ஏற்பட்ட ஆயாசம். ஒரு குரல் காதில் விழுந்தது. சிந்தனை கலைந்தது. " அன்ரி நான் போயிட்டு வாறன்" குரல் வந்த திசையில் நிமிர்ந்து பார்த்தேன். சூசை! மேலே நின்று ஒரு கையை ஊன்றியபடி, கீழே குனிந்து என்னைப் பார்த்துக் கொண்டிருந் தார். கடந்த சில ஆண்டுகளாக எங்களோடு வெகு நெருக்கமாக பழ கியவர்; தாராள குணத்தோடு நடந்தவர். மூன்றாவது தடவையாக எங்கள்உயிரைக் காப்பாற்றியவர். அந்த இளைஞரிடம், அந்தத் தருணத்தில் என்னால் கூற முடிந்ததெல்லாம், " சரி, தம்பி!" என்றது மட்டும் தான். வேறு எதுவும் கூற வேண்டாம் என்று அவருடைய முகம் வேண்டியது. திரும்பிச் செல்வதற்காகத் தமது வீரர்களை அழைத்தபடி அவர் திரும்பி நடந்தார். பெடியள் ஒவ்வொருவராக வந்து விடைபெற்றார்கள். எம்மோடு நன்றாகப் பழகியவர்கள். இந் தப் பயணத்தில் கூடிவந்து எம்மைக்காப் பாற்றியவர்கள். விடை பெற்றதும் வேகமாகத் திரும்பி நடந்தார்கள். காரிருளில், கொந் தளிக்கும் கடலில்,சிறிலங்கா பீரங்கிப்படகுகளிடம் அகப்படாமல், முல்லைத்தீவுக்கு, ஆபத்து நிறைந்த பயணம் மேற்கொள்ளும் ஆயத் தங்களில் பிள்ளைகள் துரிதமாக ஈடுபட்டார்கள்.

சூசையும் அவருடைய வீரர்களும் எமது கப்ப லில் இருந்து சிறிது அப்பால் பாதுகாப்பாகச் சென்ற பின் நாமும், மென்மையாக அசைவதை உணர்ந்தேன். எமது கப்பல் நகர்ந்து கொண்டு இருந் தது. இயந் திரத்தின் இரைச்சல் அனுக்கமாகவே தான் கேட் டது. தொட்டிலில் மெதுவாக ஆடும் குழந்தை போன்ற உணர்வு, இல்லையென்றால் கப்பல் புறப்பட்டதே தெரிந்திருக்காது. இந்தக்கடலையும் சரி,சமாளிக்கக் கூடிய இயந்திரம் இது என்பது தெளிவாகத் தெரிந்தது. எமது பயணத்தின் இந்த இரண்டாவது கட்டத்தில் எம்மைக் கொண்டு செல் லும் அலுவல்களில் கப்பல் வீரர்கள் ஈடுபட்டுக் கொண் டிருந்தார்கள். கடற்பயணத்தில் எம்மைப் பாது காக்கும் பொறுப்பு மூத்த கடற்புலி உறுப்பினர்களில் ஒருவரான சுடரொளியிடம் ஒப் படைக்கப்பட் டிருந்தது. " பாலா எங்கே? என்ன நடக்கிறது," என்று சுடரொளியிடம் விசாரித்தேன். " அவர் நல்லாய் இருக்கிறார் யோசியாதேயுங்கோ," என்று நம்பிக்கை தரும் பதில் வந்தது. " அவர் நல்ல நித்திரை!" என்றார். அந்த வார்த்தை நிம்மதி தந்தது. பயணக்களை, பிரியாவிடை, மனப்பளு எல்லாம், அந்தப் பெரிய கப்பல் தந்த கதகதப்புக்குள் புதைய அப்படியே உறங்கிவிட்டேன்.

எவ்வளவு நேரம் துயிலின் அணைப்பில் இருந்தேனோ தெரியாது. ஒரு தீனமான குரல், " அடேல் தே... ண்ணி தாறீரோ?" என்று கேட்டு என்னை எழுப்பியது. இந்தத் தொந்தரவு எரிச்சலாகவும் இருந்தது; அதே நேரம் மன ஆறதலாகவும் இருந்தது. கடற் குமட்டலையும், பாலாவைப் பற்றிய கவலையையும் தற்காலிக மாகாவாவது மறந் திருந்த என்னைக் குழப்பியதால் எரிச்சல்! அதே சமயம், அவர் எழுந்து உண்ணவும் பருகவும் எதையாவது தேடுமளவிற்குத் தேறி வெளி யில் வந்தது மகிழ்ச்சி! எப்படியோ, சூடாக தேனீர்அருந்திவிட்டு, உற்சாகமாக இருந்தார். பெரியகப்பலின் கதகதப்பும், அது ஆட்ட மில்லாமல் ஓடியதும் அவருக்குத் தெம் பைத் தந்திருக்க வேண்டும். நான் பருகிய தேனீர் வயிற்றுக்குள் அங்கும் இங்கும் ஓடி விட்டு குமட்டலாக வெளியே சீறிக் கொண்டு வந்து தரையில் சிந்தியது. அடுத்த சில மணி நேரமாவது நான் சாப்பிடவோ குடிக்கவோ கூடாது என்று எனக்கு அது எச்சரிக்கையாகவும் அமைந்தது. கடற்பய ணத்தின் இந்தத் தொடக்கக் கட்டத்தில் அந்தப் பயங்கர குமட்டல் என்னை அலைத் திருந்தது. இப்போது நான் தான் ஏலாவாளி. ஆடிஅசைவதே பாடாக இருந்தது. ஆனால் பாலா, பெரிய கப்பலில் விரைவாகச் சுதாகரித்துக் கொண்டார். அதன் பின் நாம் வழமையான பராமரிப்பையும்,கண்காணிப்பையும்அவருக்கு வழங்க முடிந்தது.

(பதிவு தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆருக்கு கதை சொல்லுறியள்?"



**போன** முறை பேரனைப் பற்றிச் சொல்லியிருந்தன். இப்பத்தையப் பிள்ளையள் எண்டால் எவ்வளவு புத்தி அதுகளுக்கு. சின்னனிலை நானும் அப்பிடிப் புத்திசாலிப் பிள்ளைதான். ஏன் ஒவ்வொருவரும் புத்திசாலிதான். பிறகு பள்ளிக் கூடம் போக வெளிக்கிட்டதுக்குப்பிறகு, புத்தி - மத்திமம் ஆகி..வர வர இப்ப இப்பிடி இருக்கிறம். காலமை நித்திரையாலை எழும்பி, தேத்தண்ணி எல்லாம் குடிச்சு உசார வந்த உடனை, என்ரை பேரன் தன்ரை தாயை - என்ரை மகளைக் கேட்டான், அம்மா! நான் 'ஹோம் வேக்' எல்லாம் செய்து போட்டன். இனி இன்றைக்கு என்னத்துக்கு என்னைப் பேசப் போறீங்கள்? என்று கேட்டான்.

அது பிள்ளையளுக்கு விளங்குது, சும்மா ஏதாவது ஒன்றிற்கெண்டாலும், தாய் மார் தங்களைப் பேசாவிட்டால், அவர்களுக்குத் - தாய்மாருக்கு விடியாத மாதிரி எண்டு இப்பத்தையப் பிள்ளையளுக்குத் தெரியும். அடிக்கடி பிள்ளையளைப் பேசினால்தான், வீட்டிலை தாய்மார், தான்தான் பெரிய ஆக்கள் எண்டிறது சின்னப்பிள்ளையளுக்கு விளங்கும் எண்டதுக்காகப் பேசுதுகளோ, அல்லது ஏதாவது பேசாமல் விட்டால் தாங்கள் இருக்கிறது மற்ற ஆக்களுக்குத் தெரியாமல் போய்விடும் எண்டதுக்காகப் பேசுகினமோ, தெரியவில்லை. ஆனாலும் எந்த நேரமும் என்னத்துக்கெண்டாலும், பிள்ளையளைப் பேசிக் கொண்டே இருக்கிறதுக்குக் குறைச்சலில்லை. இப்பத்தையில் தாய், தந்தையருக்குப் பிள்ளையளோடை செலவழிக்க நேரம் எண்டது இல்லை. முந்தி வெளிநாட்டிலை சனி, ஞாயிற்றுக் கிழமையளிலைதான், பெற்றோரும் பிள்ளையளும் ஒரு கொஞ்ச நேரம் ஒன்றாயிருக்கிறதெண்டும், பிறகு வார முடிவு முடிஞ்ச உடனை பிரிஞ்சு போவிடுவினம். பிறகும் அடுத்த வாரம்தான். அதுவும் ஒரு கொஞ்ச நேரம் ஒண்டாயிருக்கிற தெண்டும் அறிஞ்சன். இப்ப எங்கடை நாட்டிலையும் அதே நிலைதான். இது நாங்ஙகளும் வளர்ச்சியடைஞ்சிட்டம் எண்டதின்ரை வெளிப்பாடு.

என்னத்திலையோ வாசிச்ச ஞாபகம்.. தந்தை - பிள்ளையள் சனி, ஞாயிறு சந்திக் கேக்கை 'கதை வேளை எண்டு' ஒண்டு இருக்குமாம். வெளிநாட்டிலைதான். அந்த நேரம், ஒரு அரை மணித்தியிலமோ, முக்கால் மணித் தியாலமோ, தகப்பன் பிள்ளையளுக்கு நல்ல 'இன்றறெஸ்ற்' ஆன; வயதுக்கு ஏற்ற கதை சொல்லுவினமாம். அந்தக் கதை வேளைக் காகவே, அந்தப் பிள்ளையள் அடுத்த சனி, ஞாயிறு எப்ப வருமெண்டு காத்துக் கொண்டு இருக்குங்களாம்.

கதை சொல்லக் கேட்டு இரசிக்கிறது எண்டுறது ஒன்று. தம்மை நேசிக்கிறவையளோடை கூட இருக்கிறது என்பது மற்றொன்று. 'ரூ இன் வண்' மாதிரி. பிள்ளையளோடை சேர்ந்து விளையாடுறதும், அவைக்குக் கதை சொல்லுறதும், பிள்ளை யளுக்கு ஒரு செய்தியை அவையின்ரை மன திலை பதிக்குதாம். அது என்ன செய்தி எண்டால், பிள்ளையளுக்குக் கதை சொல்லுறவர் அல்லது பிள்ளையளோடை சேர்ந்து விளையாடுகிறவர், தங்களை நேசிக்கிறார்கள் என்பதனை பிள்ளைகள் புரிந்து கொள்கிறார்கள்: அல்லது விளங் கிக் கொள்கிறார்கள் என்பதுதான் அந்தச் செய்தி.

பிள்ளையளுக்குக் கதை சொல்லுற பாரம்பரியம் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைஞ்சு வருகிறது. ஏற்கனவே நான் சொன்னமாதிரி, பெற்றோருக்கு நேரமில்லாதுதான் காரணம். போன கிழமை பிரேமினி எழுதின எங்கே தேடுவது கதை சொல்லும் பாட்டிகளை? என்ற கட்டுரை ஒன்றை வாசிச்சதுக்குப்பிறகு, பேரப்பிள்ளையளுக்கு கதை சொல்ல வேணுமெண்டு தீர்மானிச்சு நான் கதை சொல்ல வெளிக்கிட்டதையும். அதனாலேற்பட்ட அனுபவங்களையும் உங்களோடை பரிமாறுவம் எண்டு பார்க்கிறன். இதிலை கதையும் வரும். கதையுக்கை கதை உருவாகினதும் வரும். 'பாட்டி மட்டும் கதை சொல்லலாமோ? தாத்தாமார் கதை சொல்லக் கூடாதோ' என்ற சந்தேகமும் கட்டுரையை வாசிச்சதுக்குப் பிறகு ஏற்பட்டது. முன்னைய காலத்திலே வயதானவர்கள் கதை சொல்லி, இளையவர்கள் அதைக் கேட்டு இரசிப்பது உண்டு என அக்கட்டுரையில் எழுதப்பட்டிருந்தது. இப்பத்தையில், பாட்டன் பாட்டி, தாத்தா தாத்தி(?) தாங்கள் வயதானவர்கள் என்பதனை ஏற்றுக் கொள்ளக் கொஞ்சம் தயங்குகிற நிலையும் காணப்படுகுது. கதை சொல்ல வெளிக்கிட்டால், கதை சொல்லுற ஆக்களை இதுகள் வயது போனதுகள் எண்டு ஒரு முத்திரை குத்தி விடுவினமோ என்ற ஒரு பயமும் உள்ளது. அதனாலேயும் சில பாட்டன் பாட்டிமார் பிள்ளையளுக்குக் கதை சொல்லாமல் விடுகிறதும் உண்டு.

''எது வரினும் வரட்டும். யார் என்ன சொல்லி னும் சொல்லட்டும். நான் பேரப்பிள்ளை யளுக்குக் கதை சொல்லியே தீருவேன்'' எனக் கங்கணம் கட்டிக் கதை சொல்லப் புறப்பட்டேன். என்ரை கதையளை வேறை ஒருவரும் கேட்பதில்லையென்பதும், பேரப்பிள்ளையளுக்குக் கதை கூற நான் புறப்பட்டதற்கு ஒரு காரணம். அது உங்களுக்குள்ளை இருக்கட்டும்.

நான் பிள்ளையளுக்குக் கதை கூற வெளிக்கிட்டுப் பெற்ற அனுபவம் கனக்க. சில அனுபவம் மனதைக் கனக்க வைக்கும்.

இப்பிடித்தான் ஒரு நாள் பேரன் வந்து "தாத்தா கதை சொல்லுங்கோ எண்டு ஆய்க்கினைப்படுத்தினான். நானும் என்ரை படுக்கையிலை அவனைப் படுக்க வைச்சுக் கதை சொல்லிக் கொண்டிருந்தன். நான் கதை சொல்லயிக்கை என்ரை கண்ணை மூடிக் கொண்டும் படுக்கையிலை படுத்தபடி கதை சொல்லுறதும் வழக்கம். பேரன் பக்கத்திலை படுத்துக் கொண்டு கதை கேட்பான். நான் கண்ணை மூடிக்கொண்டு கதை சொல்லிக் கொண்டு சில வேளை அயர்ந்து போவன்.

சில வேளை பேரன் கதை கேட்டபடி அப்படியே உறங்கி விடுவதுமுண்டு. நானும் அவன் நித்திரையெண்டு தெரியாமல் என்ரை பாட்டுக்குக் கதை சொல்லிக்கொண்டு போறதுமுண்டு. அவன் தாயிட்டைப் போகாமல் என்னோடையே படுத்து நித்திரை கொண்டிடுவான்.

அதுக்கும் மேலாக ஒரு நாள் நான் கண்ணை மூடிக் கொண்டு கதை சொல்லிக் கொண்டிருந்தன். பக்கத்திலை படுத்துக்கொண்டு பேரன் கதை கேட்டுக் கொண்டிருந்தான். நானும் வலு சுவாரசியமாக ஏற்ற இறக்கத்தோடை கதை சொல்லிக்கொண்டிருக்க, என்ரை மகள் கூப்பிட்டுக் கேட்டிச்சது. 'என்ன அம்மா?' எண்டு கண்ணைத் திறக்காமலே கேட்டேன். 'ஆருக்கு அப்பா கதை சொல்லுறியள்?' எண்டு மகள் கேட்டிச்சுது. குட்டிப் பேரனுக்குத்தான் எண்டு கண்ணைத் திறக்காமலே பதில் சொன்னன். "அவன் நீங்கள் கதை சொல்லத் தொடங்கின உடனேயே அசுக்கிடாமல் எழும்பி, இஞ்சை வந்திட்டான். நீங்கள் கதை சொல்லிக்கொண்டே இருக்கிறயள்!" என்று கெக்கட்டம் விட்டுச் சிரிக்க, அதோடை சேர்ந்து பேரனும் தன்ரை கெட்டித்தனத்தைக் காட்டிச் சிரிச்சுக்கொண்டு நிக்குது.

அவருக்கு நான் சொன்ன கதையளை நீங்கள் கேட்டால் விட மாட்டியள் அப்பிடிக் கதையள் சிங்கமும் முயலும் கேள்விப்பட்டனீங்களே? அந்தக் கதை மற்றது நாயும், காகங்களும். அந்தக் கதை.. அது நீங்கள் கேள்விப்பட்டிருக்க மாட்டியள். கழுதையும், குதிரையும். ஒரு நாளும் முடியாத கதை எண்டு ஒரு தொகை கதையள் அடுத்தடுத்த வாரம் பார்ப்பம்.

பம்பலி பரமசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Green City Apartments

# உங்கள் கனவுகள் நனவாகுமா???...

தற்போது கொழும்புக்கு நடந்து வரும் தூரத்தில்
தொடர்மாடி வீடமைப்புத் திட்டம்
ரூபா. 1,285,000/=
(ரூபா. பன்னிரண்டு இலச்சத்து எண்பத்தையாயிரம்)

- கொழும்பு 15 மட்டக்குளியவிற்கு நடந்துவரும் தூரத்தில்
- பெட்டாவுக்கு 30 நிமிடத்தல் செல்லலாம்
- நீர்கொழும்பு வீதிக்கு 10 நிமிடத்தில் செல்லலாம்
- லைசியம் சர்வதேச பாடசாலை, கார்கில்ஸ் பூட்சிட்டி, கீள்ஸ் சுபர் மற்றும் கோவில் என்பன தெரியும் தூரத்தில்
- மேல்மாடியிலிருந்து கொழும்பு நகர் மற்றும் கடற்கரையை பார்வையிடலாம்.

*Housing Unit consists of Living, Dinning with Pantry, Bedroom with attached toilet (Commode fitted), Balcony and servant's toilet.*

விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள வீடமைப்புத் திட்டதிதிற்கு
இன்றே வருகைதந்து **Housing Unit** ஐ ரூபா. **5,000/-**ம் செலுத்தி
முன்பதிவு செய்துகொள்ளுங்கள் தாமதத்திற்கு வருந்தாதீர்கள..

இடத்திற்கு செல்லும் மார்க்கம்: அலகந்தவிற்கு வந்து பள்ளியாவத்த வீதியில் இடதுபக்கம் திரும்பி காமில் மாவத்தையில் இடத்திற்கு செல்லலாம்.

## மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள

தமிழில் : 0776 959197 ராஜாவுடன் தொடர்பு கொள்ளுங்கள்
ஆங்கிலத்தில் : 0776 147065 ஜெரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்
சிங்களத்தில் : 0776 216016 குமாரவுடன் தொடர்பு கொள்ளுங்கள்

**Nimavin Developers (Pvt) Ltd**
187, Ward Place, Colombo 07.
Tel : (011) 2695714 / (011) 2695728
Visit our Web Site : www.nimavingreenpark.com

# முட்டிமோதும்
## சிவகார்த்தி - சந்தானம்



சந்தானம், சிவகார்த்திகேயன் இரண்டு பேருக்கும் மறைமுக மல்லுகட்டல்கள் நடந்து வருகின்றன.

சந்தானம், சிவகார்த்திகேயன் இருவருமே விஜய் தொலைக்காட்சியில் இருந்து சினிமாவுக்கு வந்தவர்கள். ஆனால் ஏனோ சிவாவுக்கும், சந்தானத்துக்கும் எப்போதுமே ஏழாம் பொருத்தம் தான். யா யா படத்தில் மிர்ச்சி சிவா வேடத்தில் முத லில் சிவகார்த்திகேயன் தான் நடிப்பதாக இருந்தது. அவரிடம் பேசி முற்பணமும் கொடுத்து விட்டார் களாம்.

ஆனால் ''அவன் நடிச்சால் நான் நடிக்க மாட்டேன்'' என்று சந்தானம் நிபந்தனை விதித்ததால், சிவகார்த்திகேயனைத் தூக்கிவிட்டு மிர்ச்சி சிவாவை நடிக்க வைத்தனர்.

அடுத்து ராஜா ராணி படத்திலும் ஜெய் நடிக்கும் கதாபாத்திரத்தில் முதலில் சிவகார்த்திகேயன் நடிப்பதாக இருந்தது.

அவரிடம் பேச்சு வார்த்தையும் நடைபெற்று வந்தது. அங்கேயும் சந்தானம் புகுந்து சலம்பல் செய்ததால் சிவகார்த்திகேயனை நீக்கிவிட்டு ஜெய்யை நடிக்க வைத்தனர்.

''இரண்டு பேரும் விஜய் ரீவியில் இருந்து வந்த நகைச்சுவை நடிகர்கள்தான். ஆனால் அவனுக்கு மட்டும் நாயகனாக நடிக்க வாய்ப்புகள் குவிகிறதே'' என்ற விரக்தியில் தான் சந்தானம் இப்படிப் பண்ணுகிறார் என்கிறார்கள்.

இதனால் சந்தானம் மீது கடுப்பில் இருக்கிறாராம் சிவகார்த்திகேயன்.

LG இன்வேட்டர் V வளிச்சீராக்கியை பாவித்து.
**சிறப்பாய் சேமியுங்கள்**

சூழலை பாதுகாப்போம்
மின்சாரத்தை சேமிப்போம்
பணத்தை சேமிப்போம்

LG Life's Good

INVERTER V
லோ வோட் இன்வேட்டர் வளிச்சீராக்கி

60% வரை மின்சார சேமிப்பு

வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு

இன்வேட்டர் வீ வளிச்சீராக்கியொன்றை கொள்வனவு செய்து ரூ.24,900 பெறுமதியான மினிபார் ஒன்று இலவசம் FREE

இன்வேட்டர் வீ வளிச்சீராக்கி இரண்டை கொள்வனவு செய்து ரூ.32,990 பெறுமதியான LED டிவி இலவசம் FREE

114,900/- ரூபாவிலிருந்து

• கொள்ளுப்பிட்டி: 0114-512501 • இராஜகிரிய: 0114-410789 / 011-2676589 • வெலிசறை: 0114-818904 / 011-4818905 • சீதுவை: 011-2265641 / 011-2265642 • அனுராதபுரம்: 025-2226832
• கல்கிசை: 011-4547519 • கண்டி: 081-2202401 • தெஹிவளை: 011-2719742 / 011-2730572 • களகமை: 0114-641530 • மாலம்பை: 0112-744830 • மஹரகமை: 0112-844985 • களுத்துறை: 034-2223440
• ஹோமாகமை: 011-2894620 • கம்பஹா: 033-2230005 / 033-2230006 • • நாரஹன்பிட்டி: 011-2369498 • பானந்துறை: 038-2238792

அழையுங்கள்: 0714020800
Buy Abans.com
HSBC Standard Chartered BOC Nations TrustBank Sampath Bank Commercial Bank Seylan
நாடெங்கிலுமுள்ள Abans & Abans Elite காட்சியறைகளில் பெறலாம்
Abans

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org